December 2011
Issue : 48

# செங்கதிர்

இலட்சியம் இல்லாமல் இலக்கியம் இல்லை

இலங்கையிலிருந்து வெளிவரும்
கலை - இலக்கிய - பண்பாட்டுப் பல்சுவைத் திங்களிதழ்



உடப்பூர் வீரசொக்கன்





திக்கவயல் "தர்மகுலசிங்கத்தின்" மறைவு
தமிழ்ச் சஞ்சிகை உலகிற்குப் பேரிழப்பாகும்

"எமது ஆழ்ந்த அனுதாபங்கள்"

செங்கதிர்

13.09.1947 - 02.11.2011

மார்கழி 2011
வீச்சு : 48

60/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமண சேவை





**தேடல் உள் நாட்டிலா? வெளிநாட்டிலா?**
**கணக்கியலாளரா? பொறியியலாளரா? வைத்தியரா?**
**வேறு தொழிலாளரா?**
**எந்நாடாக இருந்தாலும், எத்தொழிலாக இருந்தாலும்**
**சுலபமான சுயதெரிவு முறையில் தெரிவு செய்திட**
**குரும்பசிட்டியூர், மாயெழு வேல் அமுதனே!**

**விவரங்களுக்கு:**

திங்கள், புதன், வெள்ளி, மாலை 4:30 – 7:30 மணிக்கு உள்ளேயோ,
சனி, ஞாயிறு நண்பகல் 11:00 – 2:00 மணிக்கு உள்ளேயோ
சர்வதேச – சகலருக்குமான, மூத்த – புகழ் பூத்த,
"தனிமனித நிறுவனம்", திருமண ஆற்றுப்படுத்துநர்
வேல் அமுதனைத் தொடர்புகொண்டு விசாரித்தறிக!

**தொலைபேசி**

4873929 / 2360488 / 2360694

**சந்திப்பு**

முன்னேற்பாட்டு ஒழுங்குமுறை

**முகவரி**

8-3-3 மெற்றோ மாடிமனை (வெள்ளவத்தை காவல் நிலையத்திற்கு
எதிராக, நிலப்பக்கம், 33ஆம் ஒழுங்கை வழி)
55ஆம் ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு – 06

வாடிக்கையாளர் புதிய வரவுகளின் முக்கிய விவரங்களை வேல் அமுதனின் அலுவலக நேரம் தொலைபேசி ஊடாக அறிந்துகொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்கதிர்

தோற்றம் 30.01.2008

48

மார்கழி 2011(தி.வ.ஆண்டு-2042)

4வது ஆண்டு

ஆசிரியர்:

**செங்கதிரோன்**

தொ.பேசி/T.P -065-2227876
077-2602634

மின்னஞ்சல் / E.mail-
senkathirgopal@gmail.com

துணை ஆசிரியர்:

**அன்பழகன் குரூஸ்**

தொலைபேசி/T.P - 0777492861
மின்னஞ்சல்/E.mail -
croos_a@yahoo.com

**தொடர்பு முகவரி :**
**செங்கதிரோன்**
**திரு.த.கோபாலகிருஸ்ணன்**
19, மேல்மாடித் தெரு,
மட்டக்களப்பு,
இலங்கை.

**Contact :**
**Senkathiron T.Gopalakrishnan**
19, Upstair Road,
Batticaloa,
Sri lanka.

**கவிதை**

◆ முதியோரைப் பாதுகாப்போம் 24
◆ எதை விதைக்கப்போகின்றாய்? 25

**கட்டுரை**

◆ உடப்பு பிரதேசத்தில் அரும்பி நிற்கும் இலக்கிய வடிவங்கள் 08
◆ சாருமதி நினைவுகூரப்பட வேண்டிய ஒரு கவிஞன் 26
◆ சொல்வளம் பெருக்குவோம் - 29 32
◆ 'இப்படிக்கு அன்புள்ள அம்மா...' கவிதைத் தொகுதி மீதான இரசனைக் குறிப்பு 36
◆ கதைகூறும் குறள் - 26 41
◆ பேராசிரியர் கா.சிவத்தம்பி - சில நினைவுக்குறிப்புகள் 51
◆ இயற்கைச் சூழலை அச்சுறுத்தும் மண்ணரிப்பு 53

**கதை**

◆ செல்லம் பெண் கேட்டுப்போகிறாள் (சிறுகதை) 13
◆ இழுக்கு (குறுங்கதை) 34
◆ மீண்டும் ஒரு காதல் கதை - 10 (தொடர் நாவல்) 46

◆ **ஆசிரியர் பக்கம்** 02
◆ **அதிதிப் பக்கம்** 03
◆ **நீத்தார் நினைவு** 58
◆ **விசுவாமித்திர பக்கம்** 60
◆ **விளாசல் வீரக்குட்டி** 64

ஆக்கங்களுக்கு ஆக்கியோரே பொறுப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் பக்கம்



02.11.2011 இல் அமரத்துவம் அடைந்த எழுத்தாளர் - கவிஞர் - **'சுவைத்திரள்'** சஞ்சிகையின் ஆசிரியர்/வெளியீட்டாளர் திக்கவயல் சி.தர்மகுலசிங்கம் அவர்களின் இழப்பு இலங்கையின் தமிழ்ச்சிற்றிதழ்கள் உலகிற்குக் குறிப்பிடத்தக்கதோர் இழப்பாகும். 'சிரித்திரன்' ஆசிரியர் அமரர் சிவஞான சுந்தரத்துடன்(சுந்தர்) மிகவும் நெருக்கமாகச் செயற்பட்ட தர்மகுலசிங்கம் அவர்கள் 'சிரித்திரன்' நின்றுபோய்விட்ட பின் அதேபோன்றதொரு சஞ்சிகை தமிழுக்கு அவசியம் எனக் கண்டு அவரால் மிகுந்த அர்ப்பணிப்புணர்வோடு 1993 இல் ஆரம்பிக்கப்பட்டதே **'சுவைத்திரள்'** நகைச்சுவை இதழ். பக்கத்திற்குப் பக்கம் சிரிக்கவும் சிந்திக்கவும் தூண்டும் உள்ளடக்கங்களுடன் வெளிவந்த இவ்விதழ் காலக்கிரமமாக வெளிவராவிட்டாலும் கூடக் கடந்த பதினெட்டு ஆண்டுகளாக 37 இதழ்களை விரித்துள்ளமை இலங்கைத் தமிழ்ச் சூழலில் அபாரசாதனையே. ஓர் இலக்கியவாதிக்கு இருக்க வேண்டிய - இன்று பலரிடம் இல்லாத - உண்மை, நேர்மை, அஞ்சாமை திக்கவயல் தர்மகுலசிங்கத்திடம் இருந்தது. ஏனைய இலக்கியவாதிகளை உள்ளன்போடு நேசித்த ஒருவர். கலை இலக்கியச் செயற்பாடுகளை எவர் முன்னெடுத்தாலும் மனம் திறந்து பாராட்டும் பண்பு அவரிடம் குடிகொண்டிருந்தது. அவரைப்பற்றி எவரும் குறைசொல்ல நான் கேட்டறியேன். அவருடைய திடீர் மரணம் இலக்கிய வட்டாரங்களில் ஓர் அதிர்ச்சியை ஏற்படுத்திற்று. மூத்த எழுத்தாளர் அன்புமணி அவர்களின் வார்த்தைகளில் கூறுவதாயின்... **'சுவைத்திரள்'** இனி வெளிவராது என்பதே மிகப் பெரிய சோகம். தமிழ்ச் சிற்றிதழ்கள் வரலாற்றில் இடைவெளியொன்றினை அவரின் மரணம் ஏற்படுத்தியிருக்கிறது. அன்னாரின் பாதக்கமலங்களில் **'செங்கதிர்'** சிரம் தாழ்த்தி அஞ்சலிக்கின்றது.

**-செங்கதிரோன்-**

**அன்பானவர்களே!**
**உங்களால் இயன்ற அன்பளிப்புக்களை வழங்கி "செங்கதிர்" இன் வரவுக்கும் வளர்ச்சிக்கும் உதவுங்கள்.**

**—ஆசிரியர்—**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிதிப்பக்கம்



**'செங்கதிர்'** இதழின் இம்மாத அதிதி, எழுத்தாளர் - ஊடகவியலாளர் **உடப்பூர் வீரசொக்கன்** அவர்களாவார்.

வளம் கொண்ட வடமேல் மாகாணத்தின் ஒரு மாவட்டம் புத்தளம் மாவட்டம். இம்மாவட்டம் தமிழ் பேசும் மக்களின் தனித்துவத்தைப் பேசும் மாவட்டமாகும். ஒற்றுமைக்கும் ஒழுக்க நெறிக்கும் பேர்போன இம் மாவட்டத்தில் எண்ணிறந்த தமிழ்க்கிராமங்கள். வரலாற்றுச் சிறப்புப் பெற்ற முன்னேஸ்வரம் ஆலயம் இம்மாவட்டத்தில் அமைந்திருப்பது தென்னிலங்கை இந்து மக்களின் சிறப்புக்கு கட்டியம் கூறி நிற்கின்றது.

இன்று இம்மாவட்டத்தில் எண்ணிறந்த தமிழ்க்கிராமங்கள் இருந்தாலும் பல தமிழ்க்கிராமங்கள் பெயர்மாறி ஊர்மாறி பெரும்பான்மைக் கலாசாரப் பின்னணியில் உள்வாங்கப்பட்டிருந்தாலும் கூட இவைகளுக்கெல்லாம் ஈடுகொடுத்து தமது கலை கலாசார பண்பாட்டு விழுமியங்களைப் பாதுகாத்து தனித்துவத்துடன் தனக்கே உரிய சிறப்பம்சங்களுடன் சைவத்தையும் தமிழையும் பேணிப்பாதுகாப்பதுடன் தமது இருப்பை - அதன் செந்நெறிகளைப் பேணும் இடமாக **உடப்பு** கிராமம் மிளிர்கின்றது.

உடப்பு என்றால் தமிழ் நெஞ்சங்களில் முதன்மைப்படுத்தி நிற்பது இங்கு அமைந்துள்ள ஸ்ரீ திரௌபதையம்மன் ஆலயம். அதன் ஆலயத்தில் நிகழ்வுறும் 'தீ மிதிப்பாகிய பூமிதிப்பு' பெருவிழாவும் இந்நிகழ்வுடன் கலை இலக்கியச் செயற்பாடும் இக்கிராமத்தைகப் பெருமைப்படுத்துகின்றது. இவ்வூரில் பிறந்த மூத்த கலைஞர் உடப்பூரான் பெரிசோமாஸ்கந்தரின் வில்லிசையும், அண்மைக் காலங்களில் இலக்கிய உலகில் உலா வரும் எழுத்தாளரும் ஊடகவியலாளருமான உடப்பூர் வீரசொக்கனின் படைப்புகளும் இக்கிராமத்தை மேலும் சிறப்படையச் செய்துள்ளன.

வீரபத்திரன் - முத்துராக்காய் தம்பதிகளின் இளைய மகனாக 1953.07.09 அன்று வீரசொக்கன் பிறந்தார். பாடசாலைக் காலங்களில் துடிப்பும் திறமையும் மிக்கவர். பின்னாளில் அடக்கத்துடன் செயலாற்றி தமது திறமைகளை - ஆளுமையை அவ்வப்போது வெளிப்படுத்தத் தவறவில்லை.

உடப்பு தமிழ் மகாவித்தியாலயத்தில் ஆரம்ப, உயர் கல்வியை மேற்கொண்ட இவர் தனது இளமைக் காலத்தில் தகப்பனை இழந்ததினால் தமது உயர் கற்கை நெறியைத் தொடர முடியாத நிலை ஏற்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1980 ஆண்டு ஒன்றிணைக்கப்பட்ட அரச எழுதுவினைஞர் சேவையில் உள்வாங்கப்பட்ட இவர் புத்தளம் உதவி அரசாங்க அதிபர் பணிமனை, கடையாமோட்டை நடமாடும் உதவி அரசாங்க அதிபர் பணிமனை, முந்தல் பிரதேச செயலகம், புத்தளம் கச்சேரி போன்றவற்றில் முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றி 2010 ஆம் ஆண்டு அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.

சுடர், மாணிக்கம் போன்ற சஞ்சிகைகளில் தமது ஆக்கங்கள் மூலம் ஆரம்ப காலங்களில் எழுத்துலகில் கால் பதித்து வீரகேசரி, தினகரன், தினக்குரல் போன்றவற்றில் ஊடகவியலாளராகச் சேவையாற்றியதுடன் வீரகேசரிப் பத்திரிகைக்குக் கடந்த 30 வருடகாலமாக ஊடகவியலாளராக இருந்து தனித்துப் பெருமையுடன் இயங்கி வருகின்றார்.

மாணிக்கம் வார இதழின் நிருபராக ஆரம்ப காலங்களில் செயற்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஊடகவியலாளராக மட்டுமின்றி எழுத்தாளராகவும் கவிஞராகவும் திகழும் உடப்பூர் வீரசொக்கனின் படைப்புக்களைப் பாராட்டிப் பல எழுத்துலக ஜாம்பவான்கள் கருத்துக் கூறத் தவறவில்லை.

**‘உடப்பில் இருந்து அலை ஓசை. இளம் கவிஞர் தான் பிறந்து வளர்ந்த கிராமச் சூழலைப் பின்னணியாக வைத்துக் கொண்டு புனையப்பட்ட கவிதைகளை ‘அலை ஓசை’யில் இடம்பெறச் செய்துள்ளார். கடல் ஓசையைக் கேட்பது போல் அலை ஓசையைக் கேட்கலாம் நாம்.’**

**- ரஸஞானி**

**‘எல்லோராலும் கவிஞர்களாகி விட முடியாது. அது இயற்கையாக ஒருவருக்குக் கிடைக்கும் ஆற்றல். ஆற்றல் பெற்ற எல்லோராலும் நூல் உருவம் பெற முடியாது. நூலாசிரியரின் திறமையைப் பாராட்டுகின்றேன்.’**

**- எம்.எஸ்.செல்லச்சாமி**
**இ.தொ.கா.செயலாளர்**

**‘இவருடைய பத்திரிகைத் துறை அனுபவமும் சைவசமயப்பற்றும் ஞானமும் திரௌபதையம்மன் ஆலய வரலாற்று நூலை வெளியிடக் காரணமாக அமைந்துள்ளது.’**

**- பி.பி.தேவராஜ்,**
**முன்னாள் இராஜாங்க அமைச்சர்,**

**‘உடப்பு, புத்தளம் மாவட்டத்தின் குட்டித் தமிழகம் என்று துணிந்து கூறலாம். இந்த குட்டித் தமிழகத்தில் கோபுரமாய் கால**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளத்தைத் தாண்டி எழுந்து நிற்கப் போகிறார் இந்த மண்ணின் மைந்தர்களில் ஒருவர். அவர் வேறு யாருமல்ல. நீங்கள் அனைவரும் அறிந்த இந்த வீரசொக்கன்தான். இவரின் மண்ணின் எழுத்தாற்றலையும் ஆர்வத்தையும் நானறிவேன். சமுதாயப் பிரக்ஞையுள்ள நல்லதோர் எழுத்தாளன் - பத்திரிகையாளன் என்றால் அந்தக் கூற்றுக்கு வீரசொக்கனின் சொக்க வைக்கும் வார்த்தைகளே - எழுத்துக்களே ஏற்ற சாட்சிகளாகும்.

- அல்ஹாஜ் ஏ.எச்.எம்.அஸ்வர்
முன்னாள் முஸ்லிம் சமய விவகார பிரதி அமைச்சர்.

'தமிழ் மக்கள் - தமிழ்ப்பண்பாடு என்னும் போது பொதுவாக உடப்பு பிராந்தியம் பற்றிச் சிந்திப்பது குறைவு. அப்பகுதி மக்களின் சமய, பண்பாட்டு பின்னணியைக் கொண்டு வீரசொக்கன் எழுதி வருகின்றார்.'

- பேராசிரியர் சோ.சந்திரசேகரன்
கொழும்புப் பல்கலைக்கழகம்.

'உடப்பைப் பற்றியும் உடப்பு திரௌபதையம்மன் ஆலயம் பற்றியும் ஆய்வினை மேற்கொள்வோர்கள் எவரும் வீரசொக்கனின் ஆய்வு முயற்சிகளைப் புறந்தள்ளி விட்டு ஆய்வு செய்ய முடியாது என்ற நிலையினை அவர் உருவாக்கியுள்ளார். உடப்பு என்றால் திரௌபதையம்மன் கோவிலும் மறுபுறம் வீரசொக்கனும் உடன் ஞாபகத்துக்கு வருவதாகும்.'

- பேராசிரியர் க.அருணாசலம்
பேராதனைப் பல்கலைக்கழகம்

'நன்கு அறியப்பட்ட செய்தியாளரும் பல் கலை தேர்ச்சி பெற்றவருமான உடப்பூரைச் சேர்ந்த வீரசொக்கன் பல நூல்களைத் தந்துள்ளார். ஆய்வாளர்கள் அறிய வேண்டிய பல தகவல்களையும் தரவுகளையும் அவை தருகின்றன.'

- கே.எஸ். சிவகுமாரன்
எழுத்தாளரும் ஊடகவியலாளரும்.

'வீரசொக்கன் தனது கலை இலக்கிய உலக இருப்பை தனது ஊரோடு அடையாளப்படுத்தி இருப்பவர். வரும் காலத்தில் நாம் அவர் சார்ந்த மண்ணின் மணத்தை நுகரும் வண்ணம் படைப்புக்களைத் தரும் வல்லமை அவரிடம் நிறையவே இருக்கிறது.'

- மேமன் கவி

'ஊடக அனுபவம் வளமான அறிவுத் தளத்தை அமைத்துத் தருவதிலும் உடப்பூர் வீரசொக்கனின் பணி பாராட்டக்கூடியது.'

- பேராசிரியர் சபா ஜெயராசா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'சதா உழைத்துக் கொண்டிருக்கும் உடப்பூர் வீரசொக்கன் புத்தளம் மாவட்டத்தின் தமிழ் பேசும் மக்களின் பண்பாட்டுக்குரல்.**
**- மல்லிகை முன் அட்டைப்படம்**

உடப்பூர் வீர சொக்கனின் **'கங்கை நீர் வற்றவில்லை'** என்ற கவிதைத் தொகுதியில் கவிதையொன்று 1992.03.05 ஏ.எச்எம். அஸ்வரினால் பாராளுமன்றத்தில் பாடப்பட்டது இவரின் கவிதை மேன்மைக்குச் சான்றாக அமைந்தது.

## எழுதி வெளி வந்த படைப்புகள்:

**1. அலை ஓசை - 1984 (ரோணியோப்பதிப்பு)**
**2. உடப்பு திரௌபதையம்மன்(பார்த்த சாரதி)ஆலயவரலாறு-1989**
**3. கங்கை நீர்வற்றவில்லை - 1990 கவிதைத் தொகுதி**
**4. அலைகடல் ஓரத்தில் தமிழ் மணம் - 1997.**
**5. வீராவின் கதம்பமாலை - 2000**
**6. கீர்த்தி மிகு உடப்பு ஸ்ரீ திரௌபதையம்மன் - 2007**
**7. முண்டத்துண்டு (சிறுகதைத் தொகுதி) - 2008**
**8. உப்புக் காத்து (கவிதைத் தொகுதி) - 2009**
**9. நம்ம... ஊரவங்க - 2010**
**10.முன்னேஸ்வரம் ஸ்ரீபத்தரகாளியம்மன் வரலாறு அறிமுகம்-2010**

**பெற்ற பட்டங்களும் விருதுகளும்:**
உடப்பு திரௌபதைம்மன் (பார்த்தசாரதி) ஆலய வரலாற்று நூலுக்கான சமய எழுத்தாளர் என்ற விருதையும் பொற்கிழியையும் இராஜாங்க அமைச்சர் பி.பி.தேவராஜ் மூலம் 1995 அற நெறி விழாவில் பெற்றுக் கொண்டார்.

கலை ஊடக இலக்கிய ஈடுபாட்டுக்காக சர்வதேச இந்து ஐயப்பதாஸ் சம்மேளனம் **'கலை இளவல்'** என்ற பட்டத்தையும்,

வினிவித அரச சார்பற்ற நிறுவனம் **'கீர்த்தி மாத்திய சேவ'** என்ற பட்டத்தையும்,

அகில இலங்கை சமாதான நீதவான் சங்கம் **'தேச கீர்த்தி'** என்ற பட்டத்தையும்,

வடமேல் கலாசார ஒன்றியம் **'தமிழ்மணி'** என்ற பட்டத்தையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடாகம் கலை இலக்கிய சஞ்சிகை 2006 ஆண்டு **'கலைத்தீபம்'** என்ற பட்டத்தையும்,

கலாசார அமைச்சு மூலம் இயங்கும் நாடக சபா மூலம் **'அகில இலங்கை சமாதான நீதவான்'** என்ற பட்டத்தையும் பெற்றவர்.

முந்தல் பிரதேச செயலாளர் பணிமனை நடாத்திய சாகித்திய விழாவில் விருது வழங்கி பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

புத்தளம் மாவட்ட சாஹித்திய பெருவிழா 2009 உடப்பில் கொண்டாடப் பட்டபோது பொன்னாடை போர்த்தி விருது வழங்கி புத்தளம் மாவட்டச் செயலாளார் எம்.கிங்ஸ்லி பர்னாந்து மூலம் கௌரவிக்கப்பட்டார்.

புத்தளம் இந்து மகா சபையில் நீண்டகாலமாகச் செயலாளராக இயங்கியமைக்காக பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

கொழும்புத் தமிழ் சங்கத்தில் நீண்டகால ஆட்சிக் குழு உறுப்பினர்.

புத்தளம் தமிழ் ஊடகவியலாளார் சங்கத்தில் உப செயலாளர்.

முன்னாள் கலாசார அமைச்சின் குழுவான நாடகக் குழுவில் அங்கத்தவராகவும் இருந்துள்ளார்.

இலங்கைச் சினிமாப் படமான **'மண்'** படத்தில் நடித்துள்ளார்.

இலங்கை எழுத்தாளர்கள் ஊடகவியலாளர்கள் கலைஞர்களின் விபரத்திரட்டு தொகுதி - II இல் 'இவர்கள் நம்மவர்கள்' பாகம் - 01இல் இவரைப் பற்றிய பதிவு வெளியிடப்பட்டுள்ளது.

மல்லிகை ஆகஸ்ட் 2009 மல்லிகை முன் அட்டையில் இவர் படத்தைப் பிரசுரித்துக் கௌரவித்துள்ளது.

வட கிழக்கைத் தவிர்த்து புத்தளம் மாவட்டதிலிருந்து தமிழரின் சிறப்பை -இருப்பைப் பறை சாற்றி வரும் ஊடகவியலாளரும் எழுத்தாளருமான உடப்பூர் வீரசொக்கனின் எழுத்துப் பணியை **'செங்கதிர்'** வாழ்த்தி மகிழ்கிறது.

**தொடர்புகளுக்கு:**
உடப்பூர் வீரசொக்கன்
3ம் வட்டாரம்,
உடப்பு.
0714411607.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடப்பு பிரதேசத்தில் அரும்பி நிற்கும் இலக்கிய வடிவங்கள்

**உடப்பூர் வீரசொக்கன்.**

சீரார் வளமும், செல்வச் செருக்கும் சிறப்புற்றோங்கும் மண் உடப்பு. நீரும் நிலவளமும் மலிந்த பூமி. கண்ணூர் காட்சி அமைப்புக்களைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் இம்மண் கலைவளம் பீறிட்டுச் சிறந்தோங்கி நிற்பதுடன் இம் மக்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்து நிற்கும் கலை கலாசார இலக்கிய வடிவங்களுடன் நாட்டாரியல் பண்புக் கூறுகள், கடல் பாடல் என்னும் அம்பாப்பாட்டு என்பன இம்மண்ணின் சிறப்புக்கு - பெருமைக்குக் கட்டியம் கூறி நிற்கின்றன.

சமய சமூகப் பற்றுக் கொண்ட இவ்வூர் மக்கள் இருவேறுபட்ட காலச் சூழலினால் தென்னிந்தியாவிலுள்ள கிராமப் புறங்களிலிருந்து புலம் பெயர்ந்த மக்கள் குழுமமே.

இந்த மக்களின் கலாசார சமய பண்பாட்டு நெறிகள் தனித்துவமானவை. அதைப்போல இந்த மண்ணுக்குத் தனித்துவமான கூத்துக்கலை விரிவுபட்டு நிற்பதுடன் நாடக வளர்ச்சியும் கூட புதிய பரிமாணம் கொண்டதாகக் காணப்படுகின்றது. மேலும் இங்கு கரகம், காவடி, கும்மிப்பாடல், கோலாட்டம், சித்திரச் செவ்வாய் போன்ற கலைப் பண்புகள் தமக்கே உரிய தென்னிந்தியத் தமிழ் வடிவில் அமைந்திருக்கின்றன.

இந்த நிகழ்வுகள் யாவும் இவ்வூரின் கிராமச் சூழலுக்கு ஏற்ற முறையில் சமயப்பற்றுடனும், தொழில் அமைப்பு வடிவில் ஒன்றியே காணப்படுகின்றது. இவைகளுடன் இங்கு வெளியுலகம் காணாத இலக்கியப் படைப்புக்கள் கூட இவ்வூர்ச் சிறப்பைச் சாற்றுவதாக இருக்கின்றன.

உடப்பு மக்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்த சமயவழி என்பது இங்கு அமைந்துள்ள சக்தி ஆலய வழிபாட்டோடு ஒன்றியே காணப்படுகின்றது. இந்த வழிபாட்டின் மையப்பொருளை அடிநாதமாகக் கொண்டே கலை இலக்கிய சிருஸ்டிகளான கூத்து, கும்மி, அம்மானைப் பாடல், ஒப்பாரி, தாலாட்டு என்பன விளங்குகின்றன.

உடப்பு வாழ் தமிழ் மக்கள் தமது வாழ்வாதார தொழில் நெறியை தமக்கே ஏற்ற முறையில் வகுத்துக் கொண்டார்கள். தமது ஜீவனோபாயத் தொழிலான கடல்வளத் தொழிலை வரித்துக் கொண்ட மக்கள் குழுமத்தினரே இவர்கள். ஆயினும் இவர்களின் வாழ்வியற் பண்புகளின் தேவைகள் அடிப்படைகுறைபாடுகள் இன்னமும் கேள்விக் குறியாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து வருகின்றன. இம் மக்களின் வாழ்க்கை முறைமைகள் சமய, சடங்கு, சம்மிரதாய இருப்புக்கள் கூட இன்னமும் வெளியுலகம் காணாத தன்மைகளைக் கொண்டதாகவே இருக்கின்றன. இக்குழுமத்தினர் இங்கே பிறந்து இங்கே தமது வாழ்வை முடித்துக் கொள்ளுபவர்கள். இதனால் இம் மக்களின் கலை வடிவங்கள் - இலக்கிய ஊற்றுக்களின் செந்நெறிகள் தனித்தன்மை கொண்டதாகவே இருக்கின்றன.

இதனால் இம் மண்ணின் கலை வடிவங்கள் - ஆக்க இலக்கியப் படைப்புகள் வெளியுலகம் தெரியாத குடத்தின் விளக்காகவே இருந்து வருகின்றனதென்பது வெள்ளிடைமலை. அத்துடன் இவர்களின் தொடர்புகள் வட, கிழக்கு மலையகப் பகுதிகளில் உறவு முறைத் தொடர்புகள் அற்றதாகவும் பிரச்சார தொடர்பு சாதனங்களில் நாட்டம் கொள்ளாமலும் காணப்பட்டு வருவதுடன் இதற்குப் பாமரத் தன்மையும் உள்ளீடாக இருக்கலாம் எனத் தோன்றுகின்றது.

இவர்களின் இலக்கியங்கள் வாய் மொழியாகவும் நாட்டார் பாடல்களாகவும் ஒப்பாரிப் பாடல்களாகவும் ஊற்றெடுத்துப் பாய்ந்திருக்கின்றன. இந்த மக்களின் இலக்கிய வடிவங்கள் யாவும் தெய்வாம்சம் நிறைந்ததாகவும் சமய வீரியங்கள் பெற்றதாகவும் தமக்கே உரிய சக்தி தெய்வங்களுக்குரிய தெய்வ வழிபாட்டுடன் காணப்பட்டன. அத்துடன் இவர்களின் வாழ்வுப் பண்புகள் நெய்தல் நிலச்சூழலுடன் பின்னிப்பிணைக்கப்பட்டதாக அமைந்துள்ளது.

இங்கு பிறந்த இலக்கிய கர்த்தாக்கள் வரகவிகளாவும், இயற்கை ஆற்றல் கொண்ட கவிஞர்களாகவும், எழுந்தமான கவி பாடுபவர்களாகவும் செவிப்புலமை கொண்டவர்களாகவும் மற்றும் அறிவு ஜீவிகளாகவும் காணப்பட்டனர். இவர்களின் ஆக்கங்கள் யாவும் காவியங்களாக தெம்மாங்கு இசைப் பாடல்களாகக் காணப்பட்டன. பின்னர் அதனையொட்டி வந்தவர்களும் அதைத் தழுவியும் பின்பற்றியும் பாடி இசைத்து வந்துள்ளார்கள். அத்துடன் திறமையும் ஆற்றலும் கொண்ட பல திறமைசாலிகள் மக்கள் முன்தோன்றி தமது ஆற்றலை வெளிக் கொணர முடியாதவர்களாகவும் காணப்பட்டுள்ளார்கள். இவர்கள் திறமைகள் வெளிச்சம் காணாத திரிகள்.

உடப்பு பிரதேசத்தில் ஆறு, ஏழு தசாப்தங்களுக்குப் பத்திரிகைகள் சஞ்சிகைகள், ஆன்மீக தொடர்பு சாதனங்கள் போன்றவை இங்கு தலைகாட்டினாலும் அவைகளுக்கு ஆக்கங்களை எழுதவோ, படைப்புகளைத் தீட்டவோ முன் வராத கூட்டமாக இருந்துள்ளார்கள். திறமை இருந்தும் படைப்புகளை ஆவணப்படுத்தவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பின்னர் புதிய தலைமுறை இளைஞர்கள் துடிப்புடன் இயங்கி தமிழ்ச் சங்கம் - சனசமூக நிலையங்களை துளிர்விடச் செய்தனர். இதில் படித்த கூட்டத்தினர் ஒன்றிணைந்தார்கள். ஏன் அவர்கள் கூட நூல்களை காவியங்களை ஆவணப்படுத்தவோ பதிவுகளை மேற்கொள்ளவோ முடியாத கூட்டமாகவே காணப்பட்டனர். கூடிக் கலைந்தார்கள்.

இந்தியா இலங்கைத் தொடர்புகள் காத்திரமான முறையில் அமைந்தபோது தென்னிந்தியக் கலைஞர்களின் வருகை ஆக்கிரமித்தன. அது ஓர் புதிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தின. இது கலைஞர்களின் வளர்ச்சிக்கு உரம் சேர்த்தன. இலக்கியத் தொடர்புகளைப் பெருக்க அடிநாதமாக அமைந்தன. தொடர்பு சாதனங்கள் பெருகக் காரணமாக இருந்தன.

இதன் பின்புலத்தைக் கொண்டு நாடகக் கர்த்தாக்கள், பாடகர்கள், பண்ணிசைப்புலவர்கள், இலக்கிய விற்பன்னர்களின் வருகை மறுமலர்ச்சியை ஏற்படுத்தின என்றே கூறலாம். இதன் அடியினைக் கொண்டு எமது ஊரும் உந்தப்பட்டது. இப்பின்னணியைக் கொண்டு உடப்பில் நாடக கூத்து ராமாக்கள் தோற்றம் பெற்றன. பெரிய ராமா - சின்னராமா போன்ற கூத்துச் சபாக்கள் உருவாகி கூத்துக்கலையை முன்னிலைப்படுத்தின.

இக் கூத்துக்கள் உடப்பு திரௌபதையம்மன் ஆலய உற்சவங்களில் மேடையேற்றப்பட்டன. பல ஆற்றல், ஆர்வம் கொண்ட கலைஞர்கள் தோற்றம் பெற்றனர். இது கலைப் பயணத்துக்கு வித்திட்டது. ஓர் பரிமாணத்தை ஏற்படுத்தியது.

இவர்களின் கூத்துப் படைப்புகள் சொந்தமானதாகவோ, தழுவல்களாகவோ எழுதப்பட்டதாகத் தெரியவில்லை. எனினும் இதன் தரவுகளையும் ஆவணங்களையும் இதுவரை பெற முடியாவிட்டாலும் அவர்கள் மேடையேற்றிய கூத்துக்கள் இன்றும் சமூக மட்டத்தில் பேசப்படுவதைக் காண்கின்றோம். இதில் **'காத்தவராயன் கூத்து'**, **'நளாயினி'** போன்ற இசை வடிவ நாடகக் கூத்துக்கள் அண்மைக்காலத்தில் உடப்பில் மேடையேற்றப்பட்டுள்ளன. இதன் இசைத்தாக்கம் இன்னும் முணுமுணுப்பதை அறியக் கூடியதாக இருக்கின்றது.

உடப்பில் பேசப்படும் சாகா இலக்கிய செந்நெறிகள் காடிவச்சிந்து, தாலாட்டு, நாடகப்பாடல்கள், ஊஞ்சல், கும்மி என்பன. கலைஞர்களான கிழவையார் வீரபத்திரன், கதிரவேல் புலவர், சி.சொக்கலிங்கம் பூசகர் பேன்றவர்கள் கவிதைகள், பாடல்கள் இயற்றியும் உள்ளனர். அதன் பின்னர் வந்த பெரிசோமாஸ்கந்தர், கிட்ணன் ஸ்ரீஸ்கந்தராஜா போன்றவர்கள் சினிமா மெட்டிலான பாடல்கள் இயற்றிப் பாடியுள்ளனர். இப்பாடல்கள் இன்னும் இச்சமூகத்தில் ஓங்கி ஒலிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1929 ஆண்டு முதன் முதலாக உடப்பில் சி.சொக்கலிங்க பூசகரினால் **'உடப்பு ஸ்ரீ திரௌபதாமானியம்'** வெளியிடப்பட்டது. இது உடப்பு நூல் வெளியீட்டுத் துறையில் மைல்கல்லாகும். அதன் பின்னர்தான் இளம் தலைமுறைப் படைப்பாளர்கள் தோன்றினார்கள். உணர்வு பூர்வமாக உத்வேகத்துடன் எழுந்து படைப்பிலக்கியத்துறையில் கால்பதித்தார்கள். இதன் தாக்கம் பல வாலிபர்களை விழிப்படையச் செய்தது. அதன் பின்னர் இளைஞர் குழாம் ஒன்று கூடி 1929 ம் ஆண்டில் தமிழ் அபிவிருத்திச் சங்கம் உருவாகியது. அதன் மூலம் சமய, பொதுத் தொண்டு போன்ற இன்னோரன்ன ஆக்கப்பணிகளை மேற் கொண்டனர். தமிழ்க்கல்வியையும், வைச சமயத்தையும் வளர்க்க வாரங்கள் தோறும் கூட்டங்களை நடாத்தி மாணவர்களை உற்சாகப்படுத்தினர்.

இதுமட்டுமின்றி சிறந்த வாசிகசாலை அமைத்து வழிநடாத்தினர். இதில் அறிவுத்தாக்கத்துக்காக வேண்டி இந்திய சஞ்சிகைகளான ஆனந்தவிகடன், குமுதம், கலைமகள், மஞ்சரி, கற்கண்டு, கஸ்தூரி போன்ற இதழ்களைக் கொள்வனவு செய்து மக்களிடத்தில் வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தினர். இதனால் ஓர் புதிய படித்த கூட்டம் வீறு கொண்டெழுந்து புதிய புத்திஜீவிகள் தோன்றினார்கள்.

இவர்கள் துடிப்புள்ள இளைஞர்களாக இருந்தபடியால் பல இந்திய கலைஞர்கள் சமயப்பெரியார்களை வரவேற்று கருத்தரங்குகளையும், இலக்கியக் கூட்டங்களையும் மேற்கொண்டனர். இருந்தும் எந்த படைப்பிலக்கியங்களையும் படைக்க முடியவில்லை. என்றாலும் இவர்களின் துடிப்பான தொடர்புகளால் காசி கெங்காதரசுவாமிகள், 1955 ஆண்டு குன்றக்குடி அடிகளாரின் உடப்பு தரிசனம் - அதன் பின்னணியில் பல இலக்கிய கர்த்தாக்களின் வருகையும் புதிய இரத்தத்தைப்பாய்ச்சியது.

இங்கு முற்போக்கு எண்ணம் கொண்ட பல படைப்பாளர்கள் தோன்றினார்கள். அவர்கள் பல கட்டுரைகளை கவிதைகளை சிறு கதைகளையும் படைத்து ஓர் மாற்றத்தை ஏற்படுத்தினர். குறிப்பாக இவர்கள் தொழிலாளர் பிரச்சினைகளை முன்வைத்தும் தமது கிராமச் சார்பான கட்டுரைகளை வடித்தனர். இவர்களில் பெரிசோமாஸ்கந்தர், கே.ஸ்ரீஸ்கந்தராசா, எம்.சொக்கலிங்கசாமி, இரா.பாலகிருஸ்ணன், மு.சிவலோகநாதன், பி.தேவகௌரி, கோ.மகாதேவன், பெரி.ஜயமுத்து, சண்முகம் கோபால், பீ நடராசா, உடப்பூர் வீரசொக்கன் போன்றவர்களைக் குறிப்பிடலாம்.

அதன் பின்னர் உடப்பிலிருந்து பல தடம்பதித்த வெளியீடுகள் இலக்கிய உலகை அலங்கரித்தன. இக்கட்டுரை ஆசிரியர் மூலம் பல வெளியீடுகள் தலை காட்டின. அவையாவன. **'அலை ஓசை'**,(றோணியோ பதிப்பு - 1987), **'உடப்பு திரௌபதையம்மன்(பார்த்தசாரதி)ஆலய வரலாறு'**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1989), **'கங்கை நீர் வற்றவில்லை'**(கவிதைத் தொகுதி - 1990), **'அலைகடல் ஓரத்தில் தமிழ்மணம்'**(1997), **'வீராவின் கதம்பமாலை'**(2000), **'முண்டத்துண்டு'**(சிறுகதைத் தொகுதி - 2006), **'கீர்த்தி ஸ்ரீ திரௌபதையம்மன் ஆலயம்'**(2007), **'உப்புக்காத்து'** (கவிதைத்தொகுதி - 2008), **'நம்ம ஊரவங்க'**(2009), **'முன்னேஸ்வரம் ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலய வரலாறு அறிமுகம்'**(2009) மற்றும் மு.சிவலோகநாதன் அவர்களை இதழாசிரியராகக் கொண்டு **'உடப்பூர்'** கட்டுரைத் தொகுதியும் இங்கிருந்து வெளிவந்த புதிய அறுவடைகளாகும்

உடப்பு நாடக மேடைகளில் பல மன்றங்கள் தோற்றம் பெற்று நாடகங்களை அரங்கேற்றி வருகின்றன. இந்த நாடகங்கள் இக்கிராமத்துக்குரிய தொழிலாளர் பிரச்சினை, சமூக விழுக்காடுகள், காதல் இன்பரசங்கள் போன்ற கருப்பொருளைப் பின்னணியாக் கொண்டு நாடக இலக்கியக்கலைக்கு வளம் சேர்க்கின்றன. இதற்கு முன்னோடிக் கலைஞர்களான சி.கேசவமூர்த்தி, பெரிசோமாஸ்கந்தர், மு.சொக்கலிங்கசாமி, இ.பாலகிருஸ்ணன், தென்னப்பா செல்வமணி போன்றவர்களின் நாடகக் கதைப்படைப்புக்கள் முன்னுதாரணமாக இருந்தன.

உடப்பின் சிறுகதை இலக்கியத்துறை அன்மைக்காலங்களில் வளர்ச்சி அடைந்துள்ளது. அவ்வப்போது சிறுகதைகள் பத்திரிகைகளில் சஞ்சிகைகளில் வெளிவந்துள்ளன. கே.ஸ்ரீஸ்கந்தராசா, ஆறுமுகசாமி, உமாதேவி, கே.மேகலா, எம்.அரிவீரன், வை.இராமச்சந்திரன், கே.மகாதேவன் போன்றவர்களின் சிறுகதைகள் பிரசுரமாகியுள்ளன. இவர்களின் சிறுகதைகளில் கடற்றொழில், வறுமை, மடமை, மது, அடிமைத்தனம், கொடுப்பனவு என்பவற்றை மையப்பொருளாக வைத்துக் கூடுதலான சிறுகதைகள் புனையப்பட்டுள்ளன.

ஆனால் இவைகளுக்கு மேலாக உடப்பூர் வீரசொக்கனின் **'முண்டத்துண்டு'** சிறுகதைத் தொகுதி இப்பிரதேச மக்களின் பகைப்புலனை மையப்படுத்தி வெளிவந்த முதல் தொகுதியாகும். பலவாதப் பிரதிவாதங்களை முன்வைத்த சிறுகதைத் தொகுதி இது என்றே கூறலாம்.

உடப்புப் பிரதேசத்தில் நாவல் இலக்கியத்துறை என்பது பின்னடைவைக் கண்டுள்ளது. இக்குறை தீர்க்கப்பட வேண்டும்.

உடப்பின் இலக்கிய ஆக்கப்படைப்புகள் பிரக்ஞை பூர்வமாக விரிவு படுத்தப்பட்டுள்ளது. இவைகள் வெளியுலகம் காணாத சங்கதி. எதிர் காலத்தில் இங்கிருந்து வெளிவரும் இலக்கிய செந்நெறிகள் முனைப்பு பெற்றதாகவே இனம் காணப்படும் என்பது யதார்த்தமாகும்.■




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# செல்லம் பெண் கேட்டுப் போகிறாள்

**முகில்வண்ணன்**



"என்ன மாமா! எத்தின நாளாச் சொல்லுறன், இவன் பாலனுக்கு ஒரு பெண் பார்க்கச் சொல்லி. கவனிக்கிறீங்க இல்லையே" என்றாள் செல்லம்மா.

பரமர் தரகர் இல்லை என்றாலும், இவ்வாறான இளஞ் சோடிகளைச் சேர்த்து வைப்பதில் ஆர்வம் காட்டுபவர். அதனால் அந்த ஊருக்கே மாமாவாக இருந்தார். ஊரிலுள்ள சிறியவர் பெரியவர் என்ற பேதம் இன்றி எல்லோரும் அவரை மாமா என்று அழைப்பது வழக்கமாகிவிட்டது. செல்லம்மாவுக்கும் அவர் மாமா முறையல்ல. என்றாலும் ஊர் வழக்கப்படியே அவ்வாறு அழைத்துப் பேசினாள்.

"நான் அவசரமாக ரவுணுக்குப் போறன் புள்ள. நீ கேட்டதால ரண்டு வார்த்தை பேசிட்டுப் போலாம் எண்டு வந்தநான்." என்று படலையைத் திறந்து கொண்டு வாசலுக்கு வந்தார் பரமர்.

"இருங்க மாமா தேத்தண்ணி போட்டுத் தாறன்..."
"வேணாம்.... பாதை தள்ளுறதக்கிடையில நான் போக வேணும். உண்ட மகண்ட விசயம்... எல்லோரும் உத்தியோக மாப்பிள்ளைதான் கேட்கிறாங்க.... அதுதான் பிந்தியது.மற்றும்படி நான் மறந்திட்டன் எண்டு மட்டும் எண்ணாத. நீ ஒண்டுக்கும் கவலைப்படாத. நான் கவனத்தில வைச்சுத்தான் இருக்கன். இடம் கண்டதும் மடத்தைக்கட்டிப் போடுவன். எதுக்கும் நான் பிறகு வந்த பேசுறனே... அப்ப பின்ன நான் வாறன் பிள்ள" என்று கூறிவிட்டு வீதியில் இறங்கினார் பரமர்.

"தேத்தண்ணியும் குடிக்கல்ல. நிண்ட நிலையில கதைச்சுத்துப் போறையள்" என்று செல்லம்மா கூறினாலும் அவளுடைய கவனம் எல்லாம் எங்கோ சிதறிப்போய் இருந்தது.

"என்ட மகன் என்ன உத்தியோகம் பார்க்க முடியாதவனா? அவனென்ன படிக்காதவனா? ரவுணுக்கு அனுப்பி போடிங்ல நிற்பாட்டி படிப்பிச்ச நான். அவன்ட தலைவிதி இப்படியாகிவிட்டது." அவள் விட்ட பெருமூச்சு காற்றைச் சூடாக்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ஊர் படுவான்கரை எனப்படும் பகுதியில் ஒரு கிராமம். இது கிழக்கிலங்கையில் மட்டுநகரின் மேற்குப் புறமாக அமைந்துள்ள கிராமங்களில் ஒன்றாகும். கிழக்குப் பகுதிக் கிராமங்கள் எழுவான்கரை என்றும் நெடுஞ்சாலைக்கும் ஆற்றுக்கும் அப்பால் உள்ள கிராமங்கள் படுவான்கரை என்றும் குறிப்பிடுவது இப்பிரதேச வழக்கு. இது வயல் நிலங்கள் நிறைந்த பிரதேசம். பால் உற்பத்தியும் அதிகம் உண்டு. இக்கிராமங்களை இணைத்துப் போக்குவரத்து செய்வதற்கு பாதை அல்லது தோணிகள்தான் உதவுகின்றன.

அந்த ஊரின் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கர் வயல் நிலங்களுக்கிடையில் ஒரு மேட்டுப் பிரதேசத்தில் ஒரு கோவில். ஒரு பாடசாலையுடன் ஐம்பது அறுபது வீடுகளுடன் குடும்பங்கள் ஒன்றாகக் குடியிருக்கும் இடம்தான் ஊர் எனப்படும். சிறு சிறு வீடுகளும் பெரும் நெல்லுப்பட்டறைகளுடனும் நிமிர்ந்து நிற்பதுதான் அந்தக் கிராமங்களின் அழகு. இதில் 2,3 கல் வீடுகளும் அந்தக் கல் வீடுகளுக்குமுன்னால் 'டிராக்டர்'களும் நிற்கும். இதுபோடியாரின் வீடு என்று தெரிந்து கொள்ளலாம். அந்தக் குடிமனைகளில் வளர்ந்திருக்கும் நூற்றுக்கு மேற்பட்ட தென்னை மரங்கள் அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டு கொக்கு, குருவி, அதிகாலையில் துயில் எழுப்பும் காகம்,பொந்துகளில் அடங்கியிருக்கும் கிளிகள் என்பனவற்றின் இருப்பிடமாகவும் அமைந்து இருந்தன. குடிமனைக்கு நிழல் தருவது இந்த மரங்களே.

ரவுணில் இருந்து இங்கு வருபவர்கள் விருப்பியருந்துவது இந்த மரங்களில் இருக்கும் இனிப்பான இளநீரும் தயிரும்தான். தயிருக்கான மாடுகள் வயற்காலங்களில் காட்டுக்குள் சென்று விடும். அறுவடையின் பின்னரே ஊருக்குள் திரும்பி வரும். ஏனெனில் வயல்களுக்கு வேலி போடும் பழக்கம் அங்கில்லை. படுவான்கரைக் கட்டித் தயிருக்கு நல்ல கிராக்கி இருக்கும்.

அந்த ஊரில் இருக்கும் கல்வீட்டின் சொந்தக்காரர், ஒரு 'டிராக்டரு'க்குச் சொந்தக்காரர், 20 ஏக்கர் மானாவாரி நிலத்திற்கும் 10 ஏக்கர் காலபோகம் செய்யும் நிலத்திற்கும் சொந்தக்காரர். கோவில் தலைவர், கிராம விதானையாக இருந்து ஓய்வு பெற்றவர். பெயரிலும் 'போடி' என்ற பட்டத்தைச் சுமந்து கொண்டிருக்கும் போடியார் கந்தப் போடியின் மகன் தான் பாலன் என்றழைக்கப்படும் சிவபாலன். பாடசாலையும் படிப்புமாக இருந்த பாலன் கெட்டிக்காரனாக இருந்ததில் வியப்பில்லை. ஓ.எல். முடித்துஏ.எல். படித்துக் கொண்டிருந்த போதுதான் கந்தப்போடியாரின் அகால மரணம் அவனை நிலைகுலைய வைத்தது. அவன் கண்ட முதல் இழப்பு அதுதான்.

தகப்பனுக்குத் தலைக்கோடு உடைக்கவேண்டியவன் என்ற காரணத்தினால் வரவழைக்கப்பட்டான். எட்டு முடிந்ததும் பாடசாலைக்குச் சென்றவனுக்கு படிப்பில் நாட்டம் செல்லவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏ.எல். எடுத்து முடிந்ததும் வீடு வந்து சேர்ந்தான். முடிவுகளின் படி நாலுபாடமும் சித்தியடைந்திருந்தாலும் பல்கலைக்கழகம் எடுபடவில்லை. அதை அவன் இப்போது விரும்பவும் இல்லை. தாய் தனித்துப்போய்விடுவா என்று எண்ணினான். எதிலும் நாட்டம் இல்லாமல் வீட்டில் அடைபட்டுக்கிடந்தான்.

செல்லம் என்னதான் போடியாரின் மனைவி என்றாலும் வயல்பக்கமே சென்றதில்லை. வீட்டில் வைத்தே அனைத்து நிர்வாகத்தையும் செய்யத் தெரிந்தவள். கணவன் எடுத்ததெற்கெல்லாம் 'செல்லம்' என்று அழைக்க காலுக்குள் நின்று கணக்குத் தீர்ப்பவள் அவள்தான்.

"ஐயா அம்மாட்டச் சொல்லி படி நெல்லைக் கொஞ்சம் கூட்டித்தரச் சொல்லுங்கையா" என்று சொல்லுமளவுக்கு செல்லம் கண்டிப்பானவள். அவர்களது தேவைகளைக் கவனித்து வந்தாலும் கொடுக்கல் வாங்கலில் கண்டிப்பு மட்டும் குறையாது.

கணவன் இறந்ததும் அவள் வீட்டிலிருந்தே அடுத்த போக வேளாண்மையை வயற்காரனைக் கொண்டு செய்கை பண்ணினாள். 'சிறு பிள்ளை செய்த வேளாண்மை வீடு வந்து சேராது' என்று சொல்வார்கள். கைம்பெண் செய்த வேளாண்மையும் ஒழுங்காக வீடு வந்து சேரவில்லை. பெரும் சேதாரத்துக்குப் பின்னர் மிகக் குறைந்த நெல்லே வீடு வந்து சேர்ந்தது. இத்தனைக்கும் செல்லம்மாவுக்கு நல்ல விளைச்சல் என்று ஊரார் பேசிக் கொண்டனர்.

காலம் கடந்த பின்னர்தான் அந்தஉண்மையும் தெரிய வந்தது. அருவி வெட்டிக் காயப் போட்டிருந்த வேளை வயல்காரன் இரவோடு இரவாக உப்பட்டிகளைக் கட்டிக்கொண்டு பக்கத்து வயலில் தனியாக ஒரு சூடு வைத்து பின்னர் அதைத் தனியாக அடித்து எடுத்துக் கொண்டான் என்பது. அவனுக்கு உதவியவர்கள் மூலமாக உண்மை வெளிவந்து விட்டது. அதன் பின்னர் அவன் உண்மைக்குப் பயந்து வேறு ஊர் சென்று விட்டான். இத்தனைக்கும் செய்து வந்த விளைச்சலில் நாலில் ஒரு பங்கு அவனுக்குரியதாக இருந்தது. இந்த முறை போடியார் இல்லாததால் அதையும் தலைப்பொலியில் எடுத்துக் கொண்டான் என்று கூறக் கேட்டாள் செல்லம்மா.

இத்தனை காலமாக விசுவாசமாக உழைத்தவனுக்கு இப்படியொரு விபரீதமான ஆசை வந்தது. அதனால் தொழிலையும் இழந்து ஊரை விட்டு ஓடிவிட்டான். ஊரவருக்குத் தெரிந்து விட்டபடியால் இனி யாரையும் பார்க்கக் கூடிய நிலையில் அவன் இல்லை.

படித்துவிட்டுத் தொழில் இன்றி இருந்த பாலனுக்கு இந்த நிகழ்ச்சி இரண்டாவது அடிக்கு மேல் இடியாக இருந்தது. வேலை தேடுவதை இனி விட்டு விடுவது என்றமுடிவுக்கு வந்தான். அன்னை பூமியைத் தொட்டுக் கும்பிட்டான். இனி அவளையே சரணடைவது என்று திடசங்கற்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூண்டான். இப்போது இருந்த சோர்வெல்லாம் மறைந்து புத்துணர்ச்சி தோன்றிவிட்டது. இதுவரை எங்கிருந்தது என்று அவனுக்கு விளங்கவில்லை.

தாய் மகனில் தன் கணவனைக் கண்டு பூரித்தாலும் அவன் வயலுக்குச் செல்வதுதான் பிடிக்கவில்லை. வெறும் வெள்ளியனுடன் மண்வெட்டியைத் தூக்கித் தோளில் வைத்துக் கொண்டு வயலுக்குச் செல்வதும் கூலியாட்களுடன் கூடமாட நின்று வரப்புக் கட்டுவதும் வயல் வேலை செய்வதும், ஓய்வாக இருக்கும் போது உழவு வேலைகளை மெசினில் செய்வதும்தான் பிடிக்கவில்லை. ஊரவர் வந்து பெருமையாகச் சொன்னாலும் தாயோ மனம் குமைந்து போவாள்.

"தம்பி நீ இப்போ போடியார் மகன். போடியார் நீ வயலில் வேலை செய்தால் எப்படி மதிக்கப் போறார்கள்? அப்பாவைப் போல வெள்ளை வேட்டியும் வெள்ளைச் சட்டையுமாக குடையுடன் போய் நின்று மேற்பார்வை செய்திட்டு வா. இப்படிப் போய் மானம் மரியாதையைப் போக்காட்டாத...." என்றாள் செல்லம்.

"என்னம்மா நீங்கபேசுற பேச்சு... இதெல்லாம் இழிவான செயலென்றா நினைக்கிறீங்க? எனக்கெண்டா எவ்வளவு பெருமையாக இருக்கிறது தெரியுமா?.... அப்பா வயதானவர். அவருக்கு வேலை செய்ய ஏலாது. அதனால் அவர் போய்ப் பார்த்திட்டு வருவாரு. நானும் அப்படியா. என்னால் வேலை செய்ய முடியுமம்மா. எதையும் இழிவு என்று சொல்லக் கூடாதம்மா. செய்யும் தொழிலே தெய்வம் என்றுகருத வேணும்...."

"அதுக்கில்ல மகன். வயற்காரன் வைத்து இருக்கிறன். அவன் ஆட்களை வைத்து வேலை செய்கிறான். நீ நின்று பார்த்துமேற்பார்வை செய்துவிட்டு வந்தால் சரி. நீ உழைத்துத்தான்சோறு போட வேண்டும் என்ற நிலைமை நமக்கு இல்லை. நாமதான் பல குடும்பங்களுக்குச் சோறு போடுறம்..."

"உங்கட ஆசைக்கு வயற்காரன் வைத்து இருக்கிறம். அவன் ஆட்களை வைத்து வேலையைச் செய்வான். நான் எண்ட ஆசைக்கு வேலை செய்கிறன். நான் வேலை செய்தாலும் என்னை எல்லோரும் போடியார் என்றுதான் மதிக்கிறாங்க. 'சின்ன ஐயா' என்று தான் கூப்பிடுவாங்க. குடை பிடித்து நிற்கிறதை விட கூடிய கௌரவம் இப்ப கிடைக்குது. எந்தப் போடியும் இதுவரை வயலில் இறங்கி வேலை செய்தது இல்லையாம் என்று சொல்லி எல்லோரும் நல்லாப் பாடுபடுகிறார்கள்....."

"நீ என்னதான் சொன்னாலும் உன்ர உடம்பைப் பார்க்கஎனக்கு மனசு நோகுது மகன். இவ்வளவு நாளும் இல்லாம உண்ட மேலில வெள்ளியன் அடையாளம் அப்படியே தெரியுது. மகன் இதைப் பார்க்கக்குள்ள எனக்கு எப்படி இருக்கும்? நீ இதுக்கெல்லாம் பழக்கப்படவும் இல்ல. சேட்டை என்றாலும் புள்கை போட்டுத்துப் போய் நில்லன். இந்தப் பச்சை உடம்பு என்னத்துக்காகும்..?" அவன் வயதுக்கு வந்து விட்டாலும் மகனைப் பச்சைப் பிள்ளை என்று எண்ணும் பெற்ற தாய் அவள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“நீங்க சொல்றதுக்காக வேணுமெண்டா சேட் போட்டுத்துப் போறன். ஆனா சேட் போட்டுத்து வேலை செய்ய ஏலாதம்மா. வயலில நிற்கக்குள்ள சாறனை மடிச்சு கொடுக்குக் கட்டிக் கொண்டு வென்னியனுடன் நின்றாத்தான் வேலை செய்ய முடியும். உசாரா இருக்கும். அவர்கள் கதையையும் சிரிப்பையும் கேட்டுக் கொண்டிருக்க வேலை தன்னால் களைப்பின்றி ஓடும்...”

மகன் வேலை செய்வதைப் பார்க்க வயலுக்குச் செல்ல வேண்டும் என்ற ஆசை அந்தத் தாய்க்கு ஏற்பட்டது.

“அப்பபின்ன நான்தான் உனக்குத் தேத்தண்ணி சாப்பாடு எடுத்திற்று வயலுக்க வருவன்” என்றாள் செல்லம்.

அவனுக்குச் சுரீர் என்றது. இத்தனை காலமும் அப்பா இருந்ததென்று அம்மா வயல் பக்கமே வந்ததில்லை. தாலிக் கொடியும் இரட்டை வடம் செயினும் பதக்கமும் எப்போதும் கழற்றாத கழுத்துமாக அம்மா.. இன்று முளியாக வெறுங் கழுத்துடன் நிற்பதைப் பார்த்து ஏங்கியவன் இப்போது அம்மா இப்படிச் சொன்னதும் நிலை குலைந்துபோனான். அப்பா வைத்து இருந்த மாதிரி நானும் வைத்து இருக்க வேணும் என்று ஆசைப்பட்டான் அந்தமகன். அதற்குத் தகுதியுடையவளாக அந்தத் தாய் இருக்கும்போது அவனுக்கென்ன தடை? இப்போதும் வசதியில்லை என்றில்லை. தாயின் சோகம் கொஞ்சம் கொஞ்சமாக மறையட்டும் என்று காத்திருந்தான்.

“என்னம்மா இது? இந்தா இருக்கிற வயலுக்க நீங்கசாப்பாடு தேத்தண்ணி எடுத்திட்டு வரவேணுமா? நான்தான் நேரத்துக்கு நேரம் வந்திட்டுப் போறனே. வந்து கொஞ்ச நேரம் நிழலில இருந்து ஆறிட்டுப் போறனே. இது காணாதா? நீங்க அங்க சாப்பாடு கொண்டு வந்தா நான் பறணுக்க போய்ச் சாப்பிட வேணும். மற்றவங்க அந்தப்பக்கமே வராம வெயிலுக்க இருந்து சாப்பிடுவாங்க. இது நல்லதில்லை அம்மா...”

அதற்கு மேல் அந்தத் தாய்க்குப் பேச முடியவில்லை. மகனைப்பற்றி மாற்றார் கூறக் கேட்டு மகிழ்ந்தது அந்தத் தாயுள்ளம்.

இரண்டு போக வேளாண்மையில் அமோக விளைச்சலைக் குவித்தான் பாலன். இது சில ஏனைய வயற்காரர்களுக்குப் பொறாமையாகவும் தாய்க்கும் ஏனைய வேலைக்காரர்களுக்கும் பெருமையாகவும் இருந்தது. அனைவரும் மகிழும் அளவுக்கு நெல்லை அளந்து கொடுத்தான். ஊரில் உள்ள ஏழை எளியவர்களுக்கு என்று வேறாக ஒதுக்கி வைத்தான். பெறப் போதிய மக்கள் இருக்கவில்லை. மிகுதியைக் கோவிலுக்குக் கொடுத்துவிட்டான்.

இந்த நிலையில் மீண்டும் ஒரு சுற்றி வளைப்பு.

இந்தச்சந்தர்ப்பத்தில் அவனது வயதை ஒத்தவர்கள் பலர் பிள்ளையும் கையுமாக வாசலில் நிற்க விசாரணைக்கு அழைத்துச் செல்லாமல் விடுபட்டது அந்தத் தாயின் மனதில் நிறைந்து நின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த நாள் முதல் வேலையாக அண்ணர் வீட்டுக்குச் செல்ல வேண்டும். - அதுதான் சரி என்று எண்ணிக் கொண்டது அந்தத் தாயுள்ளம்.

அண்ணனின் மகள் புவனேஸ் பிறந்ததிலிருந்து சாணைக் கூறை போட்டது, பொக்குள் கொடி அறுந்து விழ சுருட்டுச் சாம்பல் போட்டது, காது குத்தியது, பல்லுக் கொழுக்கட்டை சொரிந்தது, தோடு போட்டது என்று சிறுமி முதல்குமரி வரை எல்லாம் செய்தது காணாது என்று பெரிசாகியதும் தானும் கணவனும் சென்று தலைக்கு அரப்பு வைத்து தண்ணீர் வார்த்து, மாலை அணிவித்து சடங்கு செய்தது எல்லாம் அவளது மனக் கண்ணில் ஒரு கணம் ஓடி மறைந்தது.

சிறுமியாக இருந்தபோது பாலனுக்கு புவனேஸ்தான் என்று ஊர் உலகம் அறியப் பேசி முடித்து விட்டார்கள். இருவரும் ஒன்றாக விளையாடும்போது பாலன் அவளுக்கு அடித்துவிடுவான். அவள் அழுதுகொண்டு மாமியிடம் வருவாள்.

“பாருங்க மாமி அத்தான் அடிச்சுப் போட்டார்..” என்று அழுவாள்.

“என்ன தம்பி இது? ஏன் அவளுக்கு அடிக்கிறாய்? இப்படித்தான் அவளைக் கட்டினாலும் அடிச்சு ஆக்கினைப் படுத்துவாய் போல...” என்பாள் தாய்.

“அவட ஒசிலுக்குள்ள நான் அவவ கட்ட... மூக்கு ஒரே ஒழுகியபடி.. மம்பட்டிப் பல்லிரண்டு..” என்று அவன் கூற

“வெவ்வெவ்வே... என்று அவள் அழகு காட்ட அவன் அடிக்க ஓட அவள் மாமியின் முந்தானைக்குள்மறைய அவர்கள் சண்டையைப் பார்த்து ரசிப்பாள் தாய்.

சிறிது நேரத்தில் இருவரும் சமாதானமாகி ஒருவர் தோளுக்குள் ஒருவர் கையைப் போட்டுக் கொண்டு கட்டிப்பிடித்தபடி விளையாடுவதும் சர்வசாதாரணமாக இருக்கும்.

பெரிசாகிய பின்னர்தான் அவள் வரவு குறைந்தது. அதுவும் பாலன் பாடசாலையில் நிற்கும் நாட்களில் ஒரு நாளைக்கு ஒரு தரம் என்றாலும் வந்து செல்வாள் புவனேஸ். இப்போது அவள் நடிகை மீனா போன்ற அழகி என்று சொல்வார்கள். அவளது பல்லழகும் அவளுக்கு எடுப்பாகவே இருந்தது.

செல்லம் அடுத்த நாட்களில் அண்ணர் வீட்டுக்குச் சென்றபோது வெறுங் கையுடன் செல்லவில்லை. கொழுக்கட்டையும் அவித்து எடுத்துக் கொண்டு கிணற்றடியில் பழுத்திருந்த கோழிக்கூட்டு வாழைக்குலையையும் வெட்டி எடுத்துக் கொண்டு வயற்காரனும் மனைவியும் கூடவரச் சென்றிருந்தாள்.

நாலைந்து வீடுகள் தள்ளி அடுத்த தெருவில்தான் அவர்கள் வீடு இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றாலும் பழைய கிராமங்களில் சம்பிரதாயங்கள் உன்னிப்பாகக் கவனிக்கப்படும். என்னதான் சின்ன வயதில பேசி இருந்தாலும் பெண்பார்க்கப் போவதும் மாப்பிள்ளை கேட்டுப் போவதும் சிறப்பான வழமையாக இருந்தது. மாப்பிள்ளை பெற்றவர்கள் எதற்கும் பணியாமல் இருப்பார்கள். பெண்ணைப் பெற்றவர்கள் அவர்களின் சொல்லுக்கு அடங்கிப்போக வேண்டி இருந்தது.

இப்போது அப்படி இருக்கக் கூடிய சூழல் இல்லை. அப்படி இருந்தாலும் புண்ணுக்கு விசமா,மருந்துக்கு விசமா? என்று கேட்பார்கள். பையனின் தாய்க்கே அவசரமாக இருந்தாலும் அவள் தானே செல்லத் தீர்மானித்தாள். அதுவும் தனது அண்ணர் வீட்டுக்குத் தானே? இதெல்லாம் பார்க்கலாமா? என்பதும்தான் அவளைப் புறப்பட வைத்தது.

"என்ன மச்சாள் திடீரென இந்தப் பக்கம்...?" அண்ணி கேட்டாள்.

"இல்ல இவள் பொடிச்சி தம்பி வீட்டில நிற்கிறதால அந்தப் பக்கம் காணல்ல. அது தான் பார்த்திட்டுப் போகலாம் என்று வந்த நான்..." (மருமகளைப் பொடிச்சி என்பார்கள்)

"சொல்லி அனுப்பியிருந்தா நானே அனுப்பியிருப்பனே..."

"சோழியன் குடுமி சும்மா ஆடாது,தங்கச்சி ஏதோ குறியுடன்தான் வந்திருக்கிறாப் போல...."

"அண்ண! எனக்கெண்டு நல்லதுகெட்டதுக்கு இனியார் இருக்கா. உங்களிட்டச் சொல்லாம வேற யாரிட்டச் சொல்லப் போறன்?" என்று கண் கலங்கினாள்.

மருமகள் தேனீரைக் கொண்டு வந்து "அதெல்லாம் பிறகு கதைக்கலாம். முதல்ல தேத்தண்ணியக் குடியுங்க மாமி" என்று கையிலே கொடுத்துவிட்டு பக்கத்திலே அமர்ந்து கொண்டாள்.

"என்ன பிள்ள அந்தப் பக்கம் காணல்ல... அவன் என்ன உன்னைப் பிடிச்சுத் தின்னப் போறானா? உன்ட அத்தான்தானே.."

புவனேஸ் தகப்பனை ஏக்கத்துடன் பார்த்தாள். தகப்பன் கண்களைக்காட்டவே புவனேஸ் உள்ளே எழுந்து சென்றுவிட்டாள். அந்தத் தாய்க்கு ஏதோ உள்ளுணர்வு கூறியது. விடயத்தை வெட்டொன்று துண்டு இரண்டாக அறிந்து விட்டுச் செல்ல வேண்டும் என்ற தீர்மானம் மனதில் உருவாகிக் கொண்டிருந்தது.

"தேத்தண்ணி ஆறுது. குடியுங்க மச்சாள்..." என்றாள் அண்ணி

தேனீர் அருந்தியதும் விடயத்தை ஆரம்பித்தாள் செல்லம். அண்ண!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்ப சில நாளா ஊர்ல நடக்கிறது உங்களுக்குத் தெரியும்தானே. இளந்தாரிப் பிள்ளையள வைத்திருக்க முடியல்ல. கல்யாணம் முடிச்சதுகளுக்குக் கவலை இல்ல. அதுதான் இவன் பாலனுக்கும் பிள்ளைக்கும் கல்யாணத்தை முடிச்சிடலாம் எண்டு கதைக்க வந்தநான்...."

"தங்கச்சி நாம அப்படித்தான் பேசி வைச்சிருந்தது. இல்ல எண்டு நான் சொல்லல்ல. அதுலதான் இப்ப சிக்கல் வந்திருக்கு. பாலன் படிச்சு முடிஞ்சு ஏதும் உத்தியோகம் பார்ப்பான் எண்டு நான் ரவுணில வளவு வாங்கி வீடு கட்டிப் போட்டன். இவன் என்னடா என்றா படிப்பை விட்டுப் போட்டு வயலில சுற்றித் திரியுறான். அதனால..."

"அதனால அவனுக்கென்ன குறைச்சல். படிச்சு இருக்கிறான். உத்தியோகம் தான் இல்ல... நினைச்சா எடுக்கலாம்... இப்ப அவனுக்கு விளையிற மாதிரி ஊருக்குள்ள யாருக்கும் விளையல்ல என்று பேசுறாங்க.... படிச்ச பிள்ள வெள்ளாமை செய்தா இப்படித்தான் இருக்கும் என்றும் சொல்லுறாங்க..."

"அதுக்கில்ல தங்கச்சி! நான் உத்தியோகம் பாக்கிறமாப்பிள்ளைக்குத் தான் பெண்ணைக் கொடுக்கிறதா இருக்கிறன். அதுதான் ரவுணில ஒரு சம்பந்தம் பேசுறதா இருக்கு..."

"நான் இப்ப வந்தா நீங்க இப்படிச் சொல்லுறீங்க.... கிணற்று வெள்ளத்த ஆற்று வெள்ளம் கொண்டா போயிடும் என்டு இருந்தநான்... அவள் பிறந்ததில் இருந்து பேசிய பேச்சுத்தானே... அந்தப் பிள்ளையள் மனசிலயும் ஆசையை வளர்த்துப் போட்டம்... நானும் எண்ட மருமகள் எண்ட உரிமையோடதானே பழகின நான்... அவர் இருந்தா இப்படி எல்லாம் நடக்குமா?" என்று எண்ணியதும் கண்ணீர் வந்தது.

அந்தத் தாயின் கேள்விகளுக்கு அவர்களால் பதில் சொல்ல முடியவில்லை. எதுவும்பேசாமல் எழுந்து வெளியேறிவிட்டாள். புவனேஸின் விசும்பல் சத்தம் ஒழுங்கையில் கேட்டது. மருமகளுக்கு இதில் விருப்பமில்லை என்பதைப் புரிந்து கொண்டாள் மாமி.

செல்லம் வீட்டிற்குவந்ததும் பேயறைந்தது போல் பித்துப் பிடித்துப் போய் இருந்தாள். அடிக்கடி கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.

தாய் இருந்த நிலையைக் கண்டு என்ன நடந்தது என்று கேட்டுத் தெரிந்து கொண்டான் பாலன். "அம்மா! நீங்க ஒரு வார்த்தை சொன்னாப் போதும் அவளை உங்கட மருமகளாக்கிப் போடுவன்... வீடு புகுந்து அவளுடைய கையைப் பிடிச்சி இழுத்துக் கொண்டு வாறன். சொல்லுங்க... உங்கட ஆசையைப் பூர்த்தி செய்வதுதான் இனி எனக்குக் கடமை. எனக்குத் தெரியும் உங்கட ஆசை.." என்று ஆத்திரப்பட்டான் பாலன்.

"வேணாம் மகன். விருப்பமில்லாதவங்கட்ட நாம ஏன் போவான்? எனக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிற பந்தம் எல்லாம் நீஒருவன்தான். கைம்பெண் வளர்த்தது கழிசடை என்ற பெயர் வாங்க வேணாம். நான் வேற இடம் பாக்கிறன்." என்றாள் செல்லம்.

இதுதான் அவள் பரமர் மாமாவிடம் சொல்லியிருப்பது. இது பாலனுக்கு இன்னும் தெரியாது.

என்றாலும் தாய் அடிக்கடி ஒரு மூலையில் இருந்து அழுவதைக் கவனித்த பாலன் நண்பன் ஒருவனிடம் விசயத்தைச் சொன்னான். அவன் புவனேஸிடம் விருப்பத்தைக்கேட்டு அறிந்து கூறினான். புவனேஸின் அப்பா கொக்கட்டிச்சோலை கோயில் நிர்வாகத்தில் ஒருவர். அவர் நாளைக்கு கோயிலுக்குப் போறார். வர இரண்டு மூன்று நாளாகும் என்ற தகவலையும் அறிந்து கூறினான் நண்பன். திட்டம் எல்லாம் பூர்த்தி. பாலன் அம்மாவிடம் கோயிலுக்குச் செல்வதாகக் கூறியிருந்தான்.

அன்று இரவு படுக்கை அறைக்குச் செல்லும்வரை புவனேஸிற்கு எதுவும் தெரியாது. பாலனைக் கண்டு திகைத்துப்போய் இருந்தவள் சத்தமிட்டு விடுவாள் என்று வாயைப் பொத்தினான். கதவை அடைத்தான். கிராமங்களில் இது ஒரு விதமான திருமணம்.

அடுத்தநாள்காலை நண்பன் விதானையுடன் புவனேஸின் வீட்டுக்குச் செல்லும்வரை அறைக்கதவு திறக்கவில்லை.

"பாலனைப்பிடித்து அடைத்து வைத்து இருக்கிறதாகக் கேள்வி.. என்றான் நண்பன். அப்போது தான் இருவரும் அறையை விட்டு வெளியே வந்தனர்.

விதானையார் தனது கடமையை முடித்து விட்டு இருவரிடமும், பக்கத்து வீட்டாரையும் அழைத்து இரு சாட்சிகளையும் கையொப்பம் வாங்கி விட்டுச் சென்றார்.

"சரி வாறன் மாமி. புவனேஸ்! அப்பாட்ட மாப்பிள்ளை கேட்டு வரச் சொல்" என்று கூறிவிட்டு மாப்பிள்ளை மிடுக்கோடு நடந்து சென்றான் பாலன்.

அவன் வீட்டுக்குச் செல்ல முதல் செல்லத்துக்கு விசயம் தெரிந்து இருந்தது. பாலன் சொன்னான். "உங்கட மருமகள் இனி உங்களுக்குத்தான் சொந்தம். அம்மா நீங்கள் இனிக் கண்ணீர் விட வேண்டாம்" என்றான் பாலன்

இப்போது மருமகள் கிடைத்து விட்டாள் என்ற சந்தோசம் ஒரு பக்கம். அண்ணன் வந்து என்ன நடக்குமோ என்ற பயம் ஒரு பக்கமாக அல்லாடிக் கொண்டிருந்தாள் செல்லம்.

(யாவும் கற்பனையே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுர்த்திக் கண்காட்சியில் ஓர் இசை விருந்து




கார்த்திகை மாதம் 2ம் 3ம் திகதிகளில் மட்டக்களப்பு இந்துக் கல்லூரி மைதானத்தில் சமுர்த்தி அதிகாரசபையினால் ஓர் விற்பனைக் கண்காட்சி நடாத்தப்பட்டது. அந்தக் கண்காட்சியை மேலும் மெருகூட்டும் விதத்தில் இசை நிகழ்ச்சி ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கண்காட்சியின் இரண்டாம் நாளான கார்த்திகை 3ம் திகதியன்று மீன்பாடும் தேனாட்டின் வளர்ந்து வரும் இசைக்குழுவொன்று இசையை மழையாகப் பொழிந்தது.

இந்துக் கல்லூரி மைதானத்தில் இரவு 7.00 மணியளவில் ஆரம்பித்த இசை நிகழ்சி 10.00 மணிவரை தொடர்ந்தது. **'சதாவின் புதிய ஸ்வரங்கள்'** என்ற பெயரில் இந்த இசைக் குழுவை ஸ்தாபித்திருப்பவர் பெரிய கல்லாறைச் சேர்ந்த திரு.எஸ்.சுந்தரலிங்கம்(ரஞ்சன்) அவர்களாவார். இவருடைய சகோதரர் திரு.எஸ்.சதாசிவம் அவர்கள் 1980 களில் கிழக்கு மாகாண இசைப் பிரியர்கள் அனைவரினதும் இதயங்களைக் கவர்ந்திருந்தார் எனக் கூறினால் அது மிகையாகாது. காலத்தின் கொடுமை ஒரு இதயமற்ற இரும்புத் துப்பாக்கி அந்த இசைக்குயிலின் உயிரைக் குடித்துவிட்டது. இந்த இனிய உடன்பிறப்பின் இசைச் சுவடுகளில் தனது பயணத்தைத் தொடங்கியிருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'சதாவின் புதிய ஸ்வரங்கள்'** பற்றி வாசகர்களாக இருக்கும் இசைப் பிரியர்களும் ஆர்வலர்களும் அறிந்து கொள்ள வேண்டும் என்பதே இக் கட்டுரையின் நோக்கம் ஆகும்.

சதாவின் புதிய ஸ்வரங்களுக்கு இசை வழங்குபவர்களாக திரு.சுபிராஜ் (கீபோர்ட்), திரு.வேதா (தபேலா), ஜெயாநந்தன்(ஒட்டோபேட்), வக்சன்(கிற்றார்), டிலக்ஷன்(ரிதம்), நூறுல்லா(எலக்ரிக் ட்ரம்) ஆகியோர் காணப்படுகின்றனர். மிகத் திறமையாக வாத்தியக் கருவிகளைக் கையாண்டார்கள். அவர்களுடைய திறமைக்கு ஈடுகொடுத்துப் பாடிய பாடகர்களும் சளைத்தவர்களல்லர். பழைய பாடல்கள், புதிய பாடல்கள், கானாப் பாடல்கள், வேற்று மொழிப்பாடல்கள் எனப் பலவகையான பாடல்களைப்பாடி பார்வையாளர்களை இசை வெள்ளத்தில் மூழ்கச் செய்தார்கள். அறிவிப்பாளர்கள் இன்பத்தமிழில் தூய்மையாகப் பேசி அந்த இசை நிகழ்ச்சியின் தரத்தை மேலும் உயர்த்தினார்கள்.

இந்த வியாபார உலகில் விளம்பரத்தாலே உயர்ந்தவர் பலர். அளப்பரிய திறமைகளை தம்மகத்தே கொண்டிருந்தும் விளம்பரமின்மையால் மக்களின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள முடியாமல் ஏங்குவோர் அதிலும் பலர். அந்த வரிசையிலே எமது மண்ணின் மைந்தர்களையும் சேர்த்து விடாமல் இலைமறைகாய்களாக இருக்கும் அவர்களைச் சமூகத்துக்கு வெளிச்சம் போட்டுக் காட்டவேண்டியது எமது கடமையாகும்.

தூரத்துப் பச்சைகளைத் தேடி ஓடும் மான்களாக இல்லாமல் எம்மிடையே இருக்கும் திறமைசாலிகளை இனங்கண்டு அவர்களுக்கு வாய்ப்புக்களை வழங்கி எமது மண்ணின் பெருமைகளை உலகறியச் செய்வதற்கு அனைவரும் ஆர்வம் கொள்ள வேண்டும்.

**- கமலினி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதியோரைப் பாதுகாப்போம்

நடைவண்டி கொண்டு வந்து
நம்மோடு நின்று நடை பழக்கி
உடையென்றும் உணவென்றும்
உணர்வோடு எமக்களித்து
படைபல வெல்லும் பலத்தை
பகிர்ந்தளித்த எம்பெற்றோரை
நடை தளர்ந்து நரை விழுந்து
நாதியற்றுக் கிடக்கையிலே
தடையெனக் கருதாமல் நாம்
தாங்குகின்ற கைகளாவோம்!

சீருடையில் பள்ளி சென்று
சிட்டெனப் பறக்கையிலே
பேரும் புகழ் என்ற பேதமின்றி
போதனையே தம் முதன்மையென
பாரும் போற்ற பாலரெமக்கு
பாடம் பருக்கிய ஆசான்களை
யாருமிலா அனாதையென இந்த
யாக்கை தளர்ந்த பின்னே
ஊரும், உலகும் மறந்தாலும் – நீ
உதவிக்கரம் நீட்ட மறக்காதே.

உதயமெனப்படும் அஸ்தமனமெனப்படும்
உலகத்தில் எப்படியோ
பதவியென்பதும் 'பென்ஷ'னென்பதும்
பாரினில் எப்படியோ !
முதுமையென்பதும் மாந்தர்க்கு
முடிவுறாத ஒன்றாமே!
இது எமக்கும் வந்திடாதோ?
இளமையென்றும் நிலைத்திடுமோ?
பொதுவென்று நினைத்து விடு – நீ
முதியோரை என்றும் காத்திடு.




செல்வி. தங்கராசா வேதர்சனா
12/1, பழையகல்முனை வீதி,
கல்லடி, மட்டக்களப்பு.


**அறிமுகம்**

*மட்டக்களப்பு மாவட்டச் செயலகம் சர்வதேச முதியோர் தினம் – 2011 இனை யொட்டி நடாத்திய கவிதைப் போட்டியில் கனிஷ்ட பிரிவில் மூன்றாவது பரிசு பெற்ற கவிதை. பரிசளிப்பு 01.12.2011 அன்று மட்டக்களப்பு மாநகர சபை மண்டபத்தில் இடம் பெற்றது.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதை விதைக்கப் போகின்றாய்?

இளங்காலைச் சூரியனே ,
இனியகனா வாலிபமே,
பூவாகிக் கமழும் நீ,
காயாகி, கனியாகி,
வித்து முளையாகி,
'விருட்சம்' என மாறி.....
காலச் சுழற்சியினால்
காணாமற் போய் விடுவாய் !
இன்றுள்ள விருட்சமெல்லாம்
அன்றுன் போல் இருந்தவையே!
முற்றிப் பழுத்தபின்னர்,
முத்துக்களாய் விதைகள்
மண்ணுள்ளே வேரூன்றி
மரம் செடிகளானவையே!
இல்லறத்தை நல்லறமாய்
இலக்கு வைத்து வாழ்ந்தவையே!
இதன் முன் இருந்தவையும்
இவ்வாறிருந்து பின்னர்,
பட்டுப்போய் விறகாகிப்
பழங்கதையாய் ஆனவையே!
உன் கதையும் வாழ்வியலில்
உருமாறும் ! என்பதை நீ
உணர்ந்துனது முதியோரை
முது சொத்தாய் நினைத்துக்கொள்!

'கூன் விழுந்த முதுகர்' என
கூவிப் பழித்திருந்தால்....
'தடியூன்றும் கிழவர்' என
தள்ளிக் கழித்திருந்தால்
'நடமாடும் கிறுக்கர்' என
நக்கல் அடித்திருந்தால்...
அகில பாரதமோர்
அண்ணலையே கண்டிராது!
அகிம்சை வழிச் சமரில்
அணிதிரண்டு வென்றிராது !
வெள்ளையரின் வேள்வியில் மண்
வெந்து கரிந்திருக்கும் !
விடுதலைக் கொடி நாட்டில்
விரைந்து பறந்திராது!
வரலாற்றுப் பதிவுகளை
வாசித்துப் பார் புரியும்!

முற்றிய கனிகள்தாம்
முழுச் சுவைக்கு ஏற்றதென,
முற்றிய விதைகள்தாம்
முளைக்கும்; கிளைக்குமென
இற்றைவரை இருக்கும்
இயல்பு விதி தொடர்ந்திருக்கும்.

ஏணிப் படிகளை நீ
எள்ளி நகை யாடாதே!
எட்டி உதைப்பதற்கு
எத்தனங்கள் செய்யாதே !
கரை சேர்த்த தோணிகளின்
நரைகண்டு முறைக்காதே!
'ஏனிப்படி' என்று
எதிர்க்கேள்வி கேட்காதே !
காரணமே இல்லாமல்
கடுகடுத்துப் பேசாதே!
இன்று தினை விதைத்தால்...
நாளை தினையறுப்பாய்!
மாறாய் வினை விதைத்தால்...
மகசூல் வினையே தான் !

- ஏறாவூர் தாஹிர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாருமதி நினைவு கூரப்படவேண்டிய ஒரு கவிஞன்

- மொழிவரதன்



26.10.1947 – 28.09.1998

**'சாருமதி' -** (1960) அறுபதுகளின் பிற்பகுதியில் வாழ்ந்த இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற முற்போக்கு இலக்கிய அணியைச் சார்ந்த எவருக்கும் இப்பெயர் பரிச்சயமானதொன்றாகவே நிச்சயம் இருக்கும். அக்கால சீன கம்யூனிஸ இயக்கங்களோடு தன்னையும் பிணைத்துக் கொண்டு செயற்பட்டவர்தான் இந்தச் சாருமதி.

யாழில் மு.கார்த்திகேசன் அவர்களால் வழிநடத்தப்பட்ட சாருமதி தனது பதினாறு வயதில் மட்டக்களப்பை அடைந்தவர் அங்கேயே வாழ்ந்து வந்தார்.

**கந்தசாமி யோகநாதன்** என்ற இயற்பெயரைக் கொண்ட சாருமதி 1947 ஆம் ஆண்டு ஒக்றோபர் இருபத்தாறாம் திகதி யாழ்ப்பாணம் கைதடியில் பிறந்தவர் ஆவார்.

க.யோகநாதன் எவ்வாறு சாருமதி ஆனார்? என்பது ஏன் என சாருமதியை நன்கு அறிந்தவர்கள் அறிவார்கள்.

அவ்வேளை இந்திய மண்ணில் இந்திய நிலவுடைமையாளர்களுக்குச் சிம்ம சொப்பனமாக விளங்கிய வங்கத்து அரசியல் பொறியான சாருமயும்தாரின் கோட்பாடுகளினால் ஈர்க்கப்பட்டவர்களுள் இந்த யோகநாதனும் ஒருவர். இந்த ஈர்ப்பின் விளைவாக தனது பெயரைச் 'சாருமதி' என்றழைத்துக் கொண்டதுடன் தனது பிள்ளைகளுள் இருவருக்கு சாருநிவேதன், சாருவினோதன் எனப்பெயரிட்டிருந்தார். இந்தப் பின்னணியில் மேலும் இவரைப்பற்றி அறிந்து கொள்வதென்றால் சாருமயும்தார் பற்றியும் அவரினது சில பின்புலத்தையும் அறிந்து கொள்ள வேண்டி உள்ளது எனலாம். இந்தியாவில் அன்று இயங்கிய மார்க்சீய சிந்தனைகளிலிருந்தும் கொள்கைகளிலிருந்தும் சற்று வேறுபட்டுக் காணப்பட்ட இவரது போக்கு போராட்ட முறைமையை வேறு ஒரு தளத்திற்கு இழுத்துச் சென்றது எனலாம். சீன கம்யூனிசக் கோட்பாட்டில் பிடிப்புக் கொண்ட சாருமயும்தார் இந்திய இன்றைய அமைப்பின் முரண்பாடுகளில் மண்ணுக்கும் மக்களுக்கும் இடையே நிலவும் முரண்பாடே பிரதானமானதெனக் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பின்னணியிலேயே யாழில் மு.கார்த்திகேசகனினதும் தெற்கில் நா.சண்முகதாஸனினதும் செயற்பாடுகளில் சாருமதி ஈடுபாடு கொண்டார். 1960 அளவில் சாருமதி கிழக்கில் தனது அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்கத் தொடங்கினார். பலதொழிற்சங்கச் செயற்பாடுகளில் கிழக்கில் சாருமதி ஈடுபட்டுள்ளார்.

சாருமதி என்ற இந்தக் கவிஞன் யார்? என்ற வினாவுக்கு இந்தப் பின்புலமே பதில் கூறும். அந்த சாருமதி என்ற கவிஞனைப் படித்து விட்டோமா? இலங்கையின் தலை சிறந்த பேராசிரியர்கள் திறனாய்வாளர்கள் விமர்சகர்கள் ஏன் இலங்கையின் கவிதை வரலாற்றுப் பதிவுகளில் இவரைக் கண்டு கொள்ளாது போயினர்...?

இதுபோன்ற வினாக்களுக்கு அவர்கள்தான் பதில் கூற வேண்டும். ஆனால் சாருமதி மாத்திரமல்ல மகாகவி உருத்திரமூர்த்தி போன்ற இன்னும் பலரும் கருத்தில் கொள்ளப்படாதிருந்தனர் என்பது ஓர் உண்மையாகும். இன்றும் தொடர்கின்ற 'குழுநிலை கூட்ட அணி', 'அரசியல்சார்ந்த அணி', 'சாதியம் அல்லது கிராமம் சார்ந்த அணி', 'பிரதேசம் சார்ந்த அணி' போன்றவைகளால் 'திறனாய்வு' மேலும் ஒரு திறனாய்வுக்கான வினாக்களை எழுப்பிய வண்ணமே உள்ளது என்பது உண்மையாகும். அறியப்படாது போன இந்த மக்கள் கவிஞனின் ஆத்மாவை **'அறியப்படாத மூங்கில் சோலை'** மூலம் வெளிக் கொணர்ந்த நந்தலாலா இலக்கிய வட்டத்தினரையும் குறிப்பாக பதிப்பிக்கக் காரணமான சட்டத்தரணி லக்ஷ்மன் ஜோதிக்குமார் அவர்களையும் பாராட்டாமல் இருத்தல் முடியாது.

மிகவும் உயர்ந்தரகத் தாளில் மிக நேர்த்தியாக நல்ல அட்டைப்படத்துடன் சாருமதியின் 100 கவிதைகளைத் தேடிப் பெற்று வெளியீடன்று ரூ200/= க்கு வந்தவர்களுக்கு வழங்கியமை கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும். சாருமதி கிராமம், ஊர், நாடு என்ற நிலைகளிலிருந்தும் வெளிவந்து வர்க்க நிலையிலிருந்து கவிசமைத்தவர் ஆதலால் வெளியீடு அவ்வாறே நிகழ்ந்துள்ளது எனலாம்.

சாருமதி வெறும் கோஷங்களாகக் கவிதைகளைக் கொட்டவில்லை என்பதை அவரது பத்திரிகை, சஞ்சிகை கவிதைகளின்றும் தவிர்த்து இந்நூலில் முழுமையாகப் பார்க்கும் பொழுது அறியமுடிகின்றது. மிகவும் நேர்த்தியாகப் பொருத்தமான சொற்களைத் தெரிந்து கவிதை புனைந்துள்ளமையானது அவரது ஆளுமைக்குச் சான்று பகர்கின்றது.

காதல், சமூகம், இயற்கை, வர்க்க உணர்வு, போராட்டம், விடுதலை போன்ற இன்னோரன்ன விடயம் தொடர்பாக அவரது பாடுபொருள் பரந்து விரிந்துள்ளமையைக் காணலாம். மேலும் கிழக்கின் கிராமிய மணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது கவிதைகளில் இழையோடி உள்ளது. சில கவிதைகள் கிராமிய வழக்கிலான பாடல் பாங்கையும் கொண்டுள்ளதைக் காணலாம்.

**'இது நானல்ல நீங்கள்தான்'** (பக்கம் 229) இலங்கையை/ஸ்ரீலங்காவை உண்மையாக நேசிக்கும் ஓர் ஆத்மாவின் உணர்ச்சிப் பிரவாகமாகத் திகழ்கின்றது.

**"எனக்குத் தெரிந்ததெல்லாம்**
**உழைப்பாளர்களை நேசிப்பது**
**உதவி அற்றவர்கள் எல்லாம்**
**உதவி உடையவர்கள்**
**ஆக வேண்டுமென்பதே.**
**ஆயின்**
**இப்பொழுது நானும்**
**உதவி அற்றவர் பட்டியலுக்குள்**
**உள்ளாகிப்போனேன்.**
**வேறு ஒன்றிற்காகவும் இல்லை**
**தமிழன் என்பதற்காய்..........."**




என்று அவர் எழுதும் பொழுதும்.

**"கொஞ்சம் தீனி**
**குதித்துப் பாயக் கொப்புகள்**
**எல்லாப் பறவைக்கும் உண்டு.**
**ஆயின் -**
**எனக்கு, நான்**
**ஓடித்திரிந்த**
**தொட்டு அளைந்த**
**தெருக்களும் எனக்கு**
**மறுக்கப்பட்டு விட்டது..."**

என்றெழுதும்போதும் அவர் வெறும் கோட்பாட்டுக்கவிஞன் அல்ல என்பதும் அவன் யதார்த்தக்கவிஞன் என்பதும் புலனாகின்றது. இக்கவிதை தமிழர்தம் நிலையினைச் சுட்டிக்காட்டுகின்றது.

மிகச் சாதாரணஅழகுணர்ச்சியைக் கூட அவர் விட்டு வைக்கவில்லை.

**'மனிதர்கள் எங்கு'** (பக்கம் 211)
மேற்குறித்த தலைப்பிலான கவிதையில்
**'மாமரத்தின் கொப்பில் நின்று**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மைனாப்பாடுது - ஒரு**
**மரம் கொத்தி தன்பாட்டில்**
**தாளம் போடுது.**
**தாளம் போடுது.**

**பறவை பார்த்த வாழ்வைக் கூட**
**பார்க்கவில்லையே - இவர்**
**பார்க்கவில்லையே'**

மனிதர்கள் சர்வசாதாரணமான சூழல் சார்ந்த அழகுணர்ச்சியைக்கூட காணாதவர்களாகி வாழ்கிறார்கள் இரசிக்காமல் உள்ளார்கள் என்பதையே அவர் கூறுகின்றார். ஒரு காலத்தின் சம்பவப்பின்னல்களைச் சொல்வது படைப்பாளனின் சிறப்பாகும்.

**'இரு குருவியும் இரு இறப்பும்'** கவிதை அக்காலத்தின் அவல ஒலியை சொல்லிச் செல்கின்றது. தமிழர்தம் வாழ்வியலில் சோகம், பிணம், பிணவாடை, மரண ஓலம் மிகச் சர்வசாதாரணமாயிற்று.

**'சுரணையே அற்றுப் போயின.**
**சவங்கள் எங்கள் பார்வையில்**
**சாதாரணமாயிற்று'**
என்கிறார் (பக்கம் 178)

என்றாலும் நம்பிக்கை வரட்சி சாருமதிக்கு இல்லை.

**'குஞ்சுக்கு இரை கொடுக்கும்**
**சிறுகுருவியைப் பார்க்கும் பொழுது**
**நெஞ்சில் உரம் ஏறும்.**
**புயலை மீறிப் பார்ப்போம்.**
**பிரேதங்களும் விழித்தெழும்'**

என்ற வரிகள் வைர வரிகளாக வந்து விழுகின்றன.

ஆழ்ந்த தத்துவப் பார்வையும் நோக்கும் அவரது கவிதைகளில் தொடர்ந்து இழையோடுகின்றன. அவருக்கென்றொரு பார்வைஉள்ளது என்பதையே இது சுட்டி நிற்கின்றது.

நல்ல இலக்கிய நயமும் நுண்ணிய உணர்வும் கவிதைகளில் மிளிர்கின்றன. மட்டக்களப்பு மக்களின் கிராமிய வாழ்வியல் நாட்டார் பாடல்களின் சாயல் அவரையறியாமலேயே அவரது கவிதைகளில் வந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'தமிழனின் இருப்பு'** பக்கம் (174) எனும் கவிதையில் அவர் பின்வருமாறு சொல்லிச் செல்கிறார்.

**'மொக்குகள் மூடின**
**இலைகள் உதிர்ந்த ரோசாச் செடிகள்**
**தடிகளாய் மிஞ்சின.**
**வேர்த்த முகத்தைத்**
**துடைத்தபோது காற்றில்**
**பிணங்களே மறைந்தன.....'**

என்றெழுதும் போதும்

**'இன்றும் நாளையும் தமிழனின் வாழ்வும்'** கவிதையில் தமிழர் தம் வாழ்வு தொழில் வியாபாரம் பற்றி பேசப்படுகின்றது. தமிழனே நம்பிக்கைகொள் நம்பிக்கையே வாழ்வு என்பதை அவரது வைர வரிகள் பதித்துள்ளன. கடைசி வரிகள் சிலாகித்துப் பேசப்பட வேண்டியவை. அவை பின்வருமாறு விரிகின்றன.

**"அந்த.........**
**வைகறை வரட்டும்**
**நான் இல்லா விடினும்**
**என் பிள்ளை**
**புல்லின் நுனியில்**
**தூங்கும் பனியை**
**கைகளால் தழுவி**
**முகத்தில் பூசி**
**மகிழ்ந்து கொள்ளட்டும்......'**

சாருமதி கவிதைகளில் வர்க்க உணர்வு இருக்கின்றது. வாழ்வியல் பற்றிய தரிசனம் இருக்கின்றது. அதே வேளை எமது ஈழத்திற்கே உரிய சமூகப் பார்வையும் இனப் பார்வையும் ஊடுருவி யதார்த்தப் பண்போடு எழுந்துள்ளது.

சாருமதி யதார்த்த வாழ்விலிருந்து மேற்சென்று தான் வரித்துக் கொண்ட கோட்பாடுகளுக்காக ஒரு முனைப்பாக எழுதவில்லை என்பதையே அவரது கவிதைகள் புலப்படுத்துகின்றன.

சாருமதியின் பின்வரும் கவிதைகள் செஞ்சை உருக வைக்கின்றன.

**'வெண்மணியே ரத்தத்தால் பதிலிறு'**
**'ஒரு துருவப் பறவையின் துயரக் கதை'** (பக்கம் 53)
**'அடக்கு முறைகளை (பக்கம் 70)**
**'இது அஞ்சலியல்ல சூத்திரம் (67)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'நவீன ஜார்களின் நரக பூமியே (73)**
**'தொலைந்த முகவரியும் தெரியப்படுத்திய கடிதமும்'** (பக்கம் 224)
**'குளத்தங்கரை கொக்குகள்'** (பக்கம் 215)

வெறும் பிரச்சாரக் கவிதைகளுக்கும் கோட்பாட்டுக் கவிதைகளுக்கும் மாத்திரமே முன்னுரிமை அளித்த முற்போக்குக் கவிஞர்களைச் சிலாகித்துப் பேசிய காலம் ஒன்றிருந்தது. அதே வேளையில் சாருமதி சாதாரண உணர்வுகளுடன் கூடிய பல கவிதைகளையும் தந்துள்ளமையை அவரது மேதாவிலாசம் காட்டுகின்றது. அடிக்கடி அவரது காதல் கவிதைகளில் வந்து செல்லும் ராஜி (காதலியோ தெரியவில்லை..?) உட்பட பின்வரும் சில கவிதைகள் அவைகளுள் சில:

**'ஓ என்னுயிரே'** (பக்கம் 51)
**'அடுத்து உனது வரவை வேண்டி'** (பக்கம் 40)
**'குயிலே குயிலே நீ கூவு'** (பக்கம் 44)
**'இது காதலிக்கல்ல என் கடவுளுக்கு'** (பக்கம் 46)
**'அந்த நாள் வரும்'** (பக்கம் 49)
**'உன்னைத்தவிர எனக்கென்று யார் உண்டு'** (பக்கம் 58)
**'ஒரு கதை கானல் நீர் ஆகிறது'** (பக்கம் 61)

அத்துடன் கிழக்கு மாகாணத்திற்கே உரிய நாட்டார் பாடல் பாரம்பரியம் கவிவளம், மெட்டு, கதாபாத்திரம் அவரது சில கவிதைகளில் உள்ளன.

**'அவரைக் கண்டால்'** (பக்கம் 81)
**'வருங்கால ஏழையின் வாழ்வைத் தேடி'** (பக்கம் 76)
**'உழைப்பவர்கள் வென்று விட்டால்'** (பக்கம் 80)
**'காவலுக்கு நான் வாரன்'** (பக்கம் 91)
**'எங்கள் மட்டு நகரில்'** (பக்கம் 104)

சாருமதி என்ற இந்தக் கவிஞனின் ஆளுமையை அறிய இந்த 100 கவிதைகள் போதுமானவையாகவே உள்ளன. மேலும் இந்த **'அறியப் படாத மூங்கில் சோலை'** யில் பின்னிணைப்பாகச் சேர்க்கப்பட்டிருக்கும் சாருமதி பற்றிய விபரம் இன்றைய சந்ததியினருக்கும் திறனாய்வாளர்களுக்கும் நிச்சயம் உதவியாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

ஒரு கவிஞனின் கவித்துவ வெற்றி அல்லது அவனது தனித்துவம் என்பது அவனைப் பற்றி மீள என்றோ ஒரு நாள் நினைவு கூரப்படுவதும் பேசப்படுவதும்தான். பாரதி கூட அப்படித்தான். சாருமதியும் இதற்கு விதி விலக்கல்ல என்பதையே **'அறியப்படாத மூங்கில் சோலை'** - உணர்த்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்வளம் பெருக்குவோம் - 29

பன்மொழிப்புலவர். த. கனகரத்தினம்

## கருத்துக்களும் சொற்களும்

கருத்துக்கள் பலவாக வளரவளரச் சொற்களும் பல்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. ஒரு மொழி முழு வளர்ச்சி பெறப் பல திரிசொற்கள் தேவைப்படும். ஒரு பழஞ் சொல்லினின்று புதுச் சொல் திரிக்க முடியாவிட்டால் ஒரு சொல்லே தொடர்புள்ள பல பொருள்களைக் குறிக்கும். இங்ஙனம் பொருள் திரியினும் சொல் திரியாத சொல்லை **ஆகுபெயர்** என்போம். தாமரை சூடினாள், மல்லிகை அணிந்தாள் என்று கூறும்போது தாமரை என்ற சொல்லோ மல்லிகை என்ற சொல்லோ திரியவில்லை அவை தரும் பொருட்களே திரிந்துள்ளன. **தாமரை** என்பது அதனது **பூவையும், மல்லிகை** என்பது அதனது **பூவையும்** குறித்து நின்று அதாவது பொருள் திரிந்து நின்றன.

தமிழிலுள்ள நிகண்டுகளில் திரிசொற்கள் பலவுள. உதாரணமாக யானை என்பதைக் குறிக்க **குஞ்சரம்**(திரண்டது), **வாரணம்**( சங்கு போன்ற தலை உடையது), **கரி, கைம்மா**(துதிக்கையுடைய விலங்கு), **தும்பி**(துளையுள்ள கையையுடையது), **புகர்முகம்**(முகத்தில் புள்ளியுள்ளது).

இனி ஒரு சொல்லே தொடர்புள்ள பல பொருள்களைக் குறிக்கும் போது உயர்வடையாமலும் இழிவடையாமலும் பொதுமுறையாகத் திரிவதுண்டு உதாரணமாக **பள்ளி, திணை, சேவகன், இளையர், வண்ணம், வெள்ளை, பச்சை, செம்மை, தாரை வார்த்தல்** முதலிய சொற்களைக் கருத்திற் கொள்வோம்.

**பள்ளி** என்பது படுக்கையை உணர்த்தும், திருமால் பாற்கடலில் **பள்ளி கொண்டான். பள்ளியெழுச்சிப்பாடல்**, **பள்ளி கொள்ளுதல்** முதலியன வழங்கிலுள்ளமையைக் காண்கின்றோம்.

பள்ளி என்ற சொல்லின் வேர்ச் சொல் **'பள்'** என்பதாகும். பள் என்பதன் பொருள் **படு - படுத்தல் - கிடத்தல்** என்பதாகும். **பள்+அம்** = பள்ளம் என அமையும். எனவே பள்ளி என்பது கீழிடத்தை அல்லது தாழிடத்தை உணர்த்தும். படுக்கும் அறையைப் **பள்ளியறை** என்பது வழக்கு.

இரப்போர், துறவிகள், வழிப் போக்கர் படுப்பதற்கென்று ஏற்பட்ட மடமும் **'பள்ளி'** எனப்பட்டது. சமணப் பள்ளிகள் இருந்தமையை வரலாறு காட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிகளில் கல்விச் சாலைகள் இருந்தமையால் பள்ளியெனும் சொல் கல்விச் சாலையையும் குறித்தது. உலக வழக்கில் **பள்ளிக்கூடம், பள்ளிப் பிள்ளை, பள்ளிக்கு வைத்தல்** முதலியன வழங்கி வருகின்றன.

மடங்களுக்கும், கோவில்களுக்கும் சம்பந்தமிருந்தமையால் கோவில்களையும் **பள்ளி**யெனக் கூறினர்.

பொதுவில் சமண புத்த கோவில்கள் **பள்ளி**யெனப்பட்டன. முஸ்லிம்களின் மசூதிகளும் மடம் போன்றவையாகையால் **பள்ளிவாசல்** எனப்பட்டது.

நிற்க, நிலையான இடமாகிய படுக்கும் வீட்டைக் குறித்த **பள்ளி** என்னும் சொல் இடத்திற்கும் பொதுப் பெயராய் அமைகிறது. தொல்காப்பியர்கூறும் **பிறப்பியல்** (20) சூத்திரமொன்றில் **'பள்ளி'** என்பது இடத்தை குறிப்பதனைக் காண்கின்றோம்.

**'எல்லா எழுத்தும் வெளிப்படக் கிளந்து**
**சொல்லிய பள்ளி எழுதரு வளியின்'** என வரும்.

**வண்ணம்** என்ற சொல்லை எடுத்துக் கொண்டால் அதன் பொருள் நிறம். அதனை வட மொழியார் **வர்ணம்** என்பர். இச் சொல் நிறம் போன்ற வகையையும் சுட்டும். செய்யுளின் ஓசை வகையையும் சுட்டும். ஓசையிற் சிறந்த செய்யுள் அல்லது பாட்டையும் குறிக்கும். வகையைக் குறிக்க **அவ்வண்ணம் இவ்வண்ணம்** என்ற சொற்கள் ஏற்படுத்தப்பட்டன. ஓசை வகைகளைக் குறிக்க **நெடுஞ்சீர் வண்ணம், குறுஞ்சீர் வண்ணம்** என்ற சொற்கள் உபயோகிக்கப்பட்டன. செய்யுள் அல்லது பாட்டைக் குறிக்க **வண்ணகவொத்தாழிசைக்கலி, நாட்டைவண்ணம்** என்பன உபயோகிக்கப்பட்டன.

சில பொதுச் சொற்கள் அவற்றை ஆள்வோனின் கருத்துப்படி உயர்ந்த பொருளையோ, தாழ்ந்த பொருளையோ மட்டும் குறிக்கும். **குலமகன், குலமகள்** என்று கூறும்போது குலம் என்ற சொல் உயர்குலம், தாழ்ந்த குலம் என்னும் இரண்டையும் குறிக்காது உயர் குலத்தை மட்டுமே குறித்தது. **ஒழுக்கம்** என்பது நல்லொழுக்கத்தை மட்டும், **குணம்** என்பது நல்ல குணத்தை மட்டும், **மணம்** என்பது நல்லமணம் - நறுமணம் என்பதை மட்டுமே குறித்து நின்றன.


**நாற்றம்** தோற்றமும் ஒழுக்கமும் உண்டியும் (களவியல் 23) எனத் தொல்காப்பியச் செய்யுள் வழக்கில் நாற்றம் நல்ல பொருளையுணர்த்தவே காட்டியுள்ளார். ஆனால், இன்றைய பேச்சு வழக்கில் அது **நாற்றம் - துர்நாற்றம்** எடுக்கிறதல்லவா? ஈண்டு ஆள்வோனின் கருத்து ஆட்சி செலுத்துகிறதன்றோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுங்கதை இழுக்கு

**வேல்அமுதன்**



நான் இடைக்கிடை எனது நண்பன் வசிக்கும் 4/1 இலக்க அந்த 'அப்பாட்மெண்டு'க்குப் போய் வருவது வழக்கம்.

அன்றும் போயிருந்தேன்.

எனது நண்பனின் அயல் வீடுகளிடையே பெரிய யுத்தமொன்று வெடித்திருந்தது. கடந்த உள்ளூர் யுத்த கால ஷெல்லடியைத் தாங்கிக் கொண்ட நான், அன்றைய அந்தச் சொல்லடியை என்னால் சகித்துக் கொள்ள முடியவில்லை. உளுத்த-புழுத்த வார்த்தைகள் சரமாரியாகப் பரிமாறப்பட்டன.

யுத்தத்திற்கான காரணத்தைக் கேட்டறிந்தபோது, வெட்கித் தலைகுனிந்தேன். 4/2ம், 4/3ம் மாடி மனையாளர் ஓரே ஊரவராம். ஆனால் உயர்ச்சி தாழ்ச்சி பாராட்டிய இருவேறு குறிச்சியைச் சேர்ந்தவர்களாம். அன்றைய மோதலுக்கான உடன் காரணம் 4/3ம் வீட்டாரின் காலணிகள் 4/2ம் வீட்டு வாசற்படிக்குத் தள்ளப்பட்டு வந்துவிட்டனவாம். சகுனப் பிழை - முழுவியளக் குறை என எண்ணியதால் போர் மூண்டதாம்.

அந்நேரம் அவ்விடத்தில் சனம் கூடிவிட்டது.

அச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தித் தமது போலிக் குறிச்சிப் பெருமையைப் பறைசாற்ற எத்தனித்த 4/2ம் வீட்டுக்காரன் "கனக்கக் கதைத்தால் உங்கடை வண்டவாளத்தை அவிட்டு விடுவன்" என அச்சுறுத்தினார்.

"வண்டவாளம் " என்ற சொல்லின் வியாக்கியானத்தை விளங்கிக் கொண்ட 4/3ம் வீட்டுக்காரன், தமது பிறப்பை இழுத்து அவமானப் படுத்தத் துணிந்து விட்டான் என்பதைத் தெரிந்ததும், அடக்க முடியாத ஆத்திரம் பீறிட, "என்னடா சொல்லப் போறாய்? சொல்லித் துலை" எனச் சொல்லியவாறு பறந்தோடி வர, கூடி நின்ற சனக்கூட்டம் சிரமப்பட்டுச் சமாதானத்தை நிலை நாட்டியது.

• • •

அடுத்த ஞாயிற்றுக்கிழமை அதே 'அப்பாட்மெண்டு'க்குப் போக வேண்டி வந்து போனேன்.

'அப்பாட்மெண்ட்' விளம்பரப்பலகையில் ஓர் எச்சரிக்கை விளம்பரம் துலாம்பரமாகப் போடப்பட்டிருந்தது.

**அந்த எச்சரிக்கையின் சாராம்சம்:**

" நடை பாதைகளில் (Corridor) பாதணி, பூச்சாடி, Shoe Rack முதலியன வைக்க எதிர்வரும் முதலாம் திகதி முதல் தடை விதிக்கப்பட்டுள்ளது. ஒழுங்கு மீறப்படுமாயின் முன்னறிவித்தல் எதுவுமின்றி அவை அப்புறப்படுத்தி அழிக்கப்படும்.

- செயலாளர்,

Apartments Management -Cooperation.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்முனையில் மெல்லிசை



மாரிகால மழையுடன் 19.11.2011 இல் கல்முனையில் இசைமழையொன்றும் பொழிந்துள்ளது. அதுதான் கல்முனையில், உவெஸ்லி உயர்தர பாடசாலையில் நடைபெற்ற 'கலை இலக்கிய நண்பர்களின்' மெல்லிசை விழாவாகும். அமைப்பின் தலைவரான திருமதி கமலாம்பிகை லோகிதராஜா அவர்களின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கல்முனை ஹற்றன் நேஷனல் வங்கிக் கிளை முகாமையாளரான ஜனாப் A.L.அன்வர்டீன் அவர்களும் உவெஸ்லி உயர்தர பாடசாலை அதிபரான திரு.வ.பிரபாகரன் அவர்களும் அதிதிகளாகக் கலந்து கொண்டனர். பிற்பகல் 4.00 மணியிலிருந்து தொடர்ச்சியாக மூன்று மணித்தியாலங்கள் நடைபெற்ற இவ்விழாவில், கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்த இசைநடனக் கற்கைகள் நிறுவனத்தின் விரிவுரையாளர்களான செல்வி. சரஸ்வதி சுப்பிரமணியம், திரு.E.N.வேர்ட்ஸ்வேத் ஆகியோர் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

கல்முனை வலயக்கல்வி ஆசிரிய ஆலோசகர் (சங்கீதம்), செல்வி சறோஜா நோனிசப்பு, கிழக்குப்பல்கலைக்கழக இசைப்பட்டதாரிகளான திருமதிகள் புவனேஸ்வரி ஜயகணேஸ், சோதீஸ்வரி கமலநாதன். யாழ் கல்வியியல் கல்லூரியைச் சேர்ந்தவர்களான திருமதி விஜிதா ஸ்ரீ தட்சன், திரு.சீனித்தம்பி தவசீலன் ஆகியோர் கர்நாடக இசையிலமைந்த சங்கீதப்பாடல்களை அள்ளி வழங்கினர். மருதமுனை நசாரின் U.J.குழுவினர் இசையை வழங்கியதுடன் ஜனரஞ்சகமான திரைப்பாடல்களையும் நம் நாட்டுக்கலைஞர்களின் பாடல்களையும் பாடினர்.

500 இற்கும் அதிகமான பார்வையாளர்களுடன் மண்டபம் நிறைந்த நிலையில் நடைபெற்ற இவ்விழாவை, இப்பகுதியில் ஏறக்குறைய 20 வருடங்களுக்கு மேல் கலை இலக்கியப்பணி புரிந்துவரும் 'கலை இலக்கிய நண்பர்கள்' அமைப்பு முற்றிலும் இலவசமாக பார்வையாளர்களுக்காக நடாத்தியது. இந்நிகழ்ச்சிக்கு கல்முனை ஹற்றன் நேஷனல் வங்கியும் S.L.R. நிறுவனமும் அனுசரணை வழங்கின.

திருமதி. கமலாம்பிகை லோகிதராஜா அவர்களைத் தலைவராகவும் (திருமதி) Dr.புஸ்பலதா லோகநாதன் அவர்களை உதவித்தலைவராகவும் கொண்ட இவ்வமைப்பின் செயலாளராக எஸ். அரசரெத்தினம் பணிபுரிந்துவருகிறார். பிரபல எழுத்தாளர் உமாவரதராஜன் அவர்களைப் பொருளாளராகக் கொண்ட இவ்வமைப்பில் திருவாளர்கள், எஸ்.ருத்ரா, சிவ.வரதராஜன், J.டேவிட், P.யோகராசா, செ.பேரின்பராசா, திரு.இரா.சிறீவேல்ராஜ் ஆகியோர் நீண்டகால நிறைவேற்றுச்சபை உறுப்பினர்களாகச் செயல்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

**- எஸ்.அரசரெத்தினம்**
செயலாளர்
கலை இலக்கிய நண்பர்கள் - கல்முனை
இல.32 V.V. றோட் கல்முனை - 02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘இப்படிக்கு அன்புள்ள அம்மா..’

## கவிதைத் தொகுதி மீதான இரசனைக் குறிப்பு



**வெலிகம ரிம்ஸா முஹம்மத்**
(poetrimza@yahoo.com)

டென்மார்க்கில் டெனிஷ் மொழியில் (Kaerlig hilsen.... mor) திருமதி கலாநிதி ஜீவகுமாரன் எழுதிய இப்படிக்கு அன்புள்ள அம்மா என்ற தலைப்பில் அமைந்திருக்கும் கவிதை நடையில் ஒரு நாவல் விஸ்வசேது இலக்கியப் பாலத்தின் இரண்டாவது படைப்பாக 163 பக்கங்களில் திரு வி.ஜீவகுமாரன் அவர்களால் வெளியீடு செய்யப்பட்டுள்ளது.

திரு.வி.ஜீவகுமாரன் அவர்கள் தனது பதிப்புரையில் “விஸ்வசேது இலக்கியப் பாலத்தின் இரண்டாவது படைப்பாக **‘இப்படிக்கு அன்புள்ள அம்மா’** வெளிவருதல் பற்றி மனம் மகிழ்ச்சி அடைகிறது. காரணம் இதில் வரும் அம்மாவுடனும், அவரின் மகன் ஹரியுடனும் பதிப்பாளராகவும், மொழிபெயர்ப்பாளராகவும் கடந்த ஆறு மாதகாலமாக நான் பயணப்பட்டுக் கொண்டு இருக்கிறேன். பிரிவு! வாழ்வின் முதல் அத்தியாயத்தில் உலகத்தை விட்டுப் பிரியும் வரை தொடர்ந்து கொண்டே இருக்கிறது” என்கிறார்.

“இலக்கியம் மனிதனின் சிக்கலைக் கலைத்துவப் பாணியில் எடுத்தியம்புவது ஆகும். இப்பொழுது நாம் வாசிக்க எடுக்கின்ற புத்தகம் எளிமையான கவி நடையில் புதுக்கவிதை நடையில், வயோதிப மாது ஒருவரின் மனக்குமுறலைப் பதிவு செய்கிறது. முதுமை என்பது ஒரு பெரும் நூல் நிலையத்திற்குச் சமமானது என ஒரு அமெரிக்க வாய்மொழி ஒன்று உண்டு. எமது நாட்டினுடைய ஈழத்து மக்களின் சமகால வாழ்வு உலகெங்கும் சிதறிய வாழ்வாக - முதுமையான பெற்றார்களை ஆதரிக்க முடியாத ஒரு வாழ்வாக அமைந்திருப்பது எமது சாபக்கேடுதான். புலப்பெயர்வுகளால் குடும்பங்கள் குலைந்துபோக பெற்றோர்களை விட்டுப் பிள்ளைகளும், பிள்ளைகளை விட்டுப் பெற்றோரும் வாழ்கின்ற நிலைமை.

இப்படிக்கு அன்புள்ள அம்மா என்கிற கவிநடையில் அமைந்த திருமதி. கலாநிதி ஜீவகுமாரனின் இலக்கியப் படைப்பின் நாயகியும் ஒரு வயதான அம்மா. இந்த மூதாட்டி ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்து டென்மார்க்கில் வாழும் நாயகி. இம் மூதாட்டியின் மிகப்பெரும் அவலம் தனது மகனை ஈழத்தில் இழந்ததுதான். அவரின் இறப்புக் காலம் நெருங்க நெருங்க அந்தப் பிள்ளையின் நினைவுகள் இம் மூதாட்டியை அல்லல்படுத்துகின்றது. அவர் அதனை தன் மனக்குமுறல்களைக் கொட்டும் ஒரு வடிகாலாக, துயரங்களைக் கடிதங்களாக எழுதி தன்னை ஆற்றுப்படுத்துகின்ற ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓட்டமாகத்தான் இந்த இலக்கிய வடிவத்தை அச்சில் கொண்டுவந்துள்ளார்.

மூதாட்டி தன் வாழ்வை கடிதம் மூலம் மகனுடன் பகிர்ந்துகொள்வதினூடாக டென்மார்க் தேசத்து வசதியான வாழ்வும், மருத்துவ வசதிகளும், மனித உறவுகளின் தொடர்புகளும் பங்களிப்புகளும் இந்த இலக்கியத்தில் பதிவாகின்றன. திருமதி கலாநிதி ஜீவகுமாரன் தாங்கள் கண்டு கொண்ட வாழ்க்கையை கூடிப்பழகிய மனிதர்களின் உறவுகளை இங்கு நன்கு பதிவுசெய்கிறார்" என்று கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் குறிப்பிடுகின்றார்.

திருமதி கலாநிதி ஜீவகுமாரன் அவர்கள் நுழைவாயிலில் என்ற தனதுரையில் "யுத்தத்திற்குப் பிள்ளைகளைக் காவு கொடுத்த ஆயிரம் ஆயிரம் என் அம்மாக்கள். இவர்கள் வரிசையில் யசோ அம்மா - இப்படிக்கு அன்புள்ள அம்மாவின் கதை நாயகி.... புத்திர சோகம்! இது நம் தேசத்தின் சாபம்! இந்த வலி - என் அப்பா அம்மா பட்ட வலி - என் மாமா மாமி பட்ட வலி. இது என்னையும் துரத்திய போது என்னுள் எழுந்துதான் இப்படிக்கு அன்புள்ள அம்மா. இது டென்னிஷ் மொழியில் கருவானது" என்கிறார்.

1. முதியோர் இல்லம், 2. ஹரி என் கனவில் வந்தான், 3. அந்த சிவந்த ரங்குப்பெட்டி, 4. எனது பேரப்பிள்ளை, 5. அனைத்தும் இழந்தோம், 6. அகதிமுகாமில் எங்கள் வாழ்வு, 7.என் உதய சூரியனே, 8.பாசத்தின் போராட்டம், 9.எண்பது வயதில் ஒரு பிள்ளையைத் தத்தெடுத்தேன், 10.போய் வருகிறேன் மகனே ஆகிய தலைப்புக்களில் இப்படிக்கு அன்புள்ள அம்மா என்கின்ற காவியக் கவிதைநூல் விரிந்து செல்வதை அவதானிக்கலாம்.

டென்மார்க்கில் தனியாகக் காலம் கழிக்கும் அந்த மூதாட்டிக்கு இயற்கையின் அன்றாட நிகழ்வுகள் கூட தன் நிலையை உணர்த்துவதாய் கற்பனைகள் எழுந்து எழுந்து வதைக்கின்றன. வழமையாக நிகழும் சூரிய அஸ்தமனத்தைக் கூட தனது மகனின் பிரிவுத் துயருடன் ஒப்பிட்டுக் கீழுள்ளவாறு வருந்துகிறார் அவர்.

**கடைசிக்காலம் எனக்கு வந்திட்டுதா? கண் கலங்குது - என் கண்மணியைக் காணாது போகப் போறன் எண்டு... அந்தச் சிவத்த ரோஜாக்கள் மீண்டும் என்னைப் பார்த்துச் சிரிக்கின்றன. அந்திமச் சூரியன் எனக்குக் கைகாட்டி விட்டுப் போவது போல இருக்குது. அவனும் தன் தாயிடம்தான் போகிறானா? என் மகனும் இந்த அந்திமத் தாயிடம் வருவானா?** (பக்கம் 20)

தனயனின் அருகாமை இல்லாத இரவுகள் அவளுக்கு வேதனையை அள்ளித் தெளிக்கின்றன. ஆனாலும் அவள் அமைதியைத் தேட முற்படுகின்றாள். ஆழ்மனதில் கணவனின் நினைவுகள் ஊசலாடுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூதாட்டிக்குத் தற்போது ஊன்றுகோலைத் தவிர துணைக்கென யாருமில்லை. ஊன்றுகோலையே தனது உற்ற நண்பனாகக் கருதும் அவள், தன்னை ஆறுதல் படுத்துவதாக கீழுள்ள வரிகளில் தன்னையே ஆசுவாசப்படுத்தும் பாங்கை அவதானிக்க முடிகின்றது.

**அழகிய அந்த யன்னலுக்கு வெளியே தெரியும் தெளிந்த வானமும்...கண் சிமிட்டும் நட்சத்திரங்களும் என் வீட்டுக்காரரை எனக்குக் காட்டுகின்றன. என் ஆன்மா அரவணைக்கப்படுகின்றது. "நிம்மதியாக தூங்கு யசோதா" அமைதியாகச் சொல்லுகிறார் - என் கண்கள் அவருள் ஐக்கியமாகின்றன! நானும் தூங்கப் போறன். நாளை தொடர்கின்றேன்.** (பக்கம் 24)

**மகனே அதிகாலை ஐந்து மணி. அவசரப்பட்டு விழித்த கண்கள் மூட மறுக்கின்றன. இரண்டு கால்களிலும் வலி. இடது முழங்காலில் இன்னும் வலி... கைத்தடியை எடுத்துக் கொள்கிறேன். என் புதிய நண்பன் அவன்! அவனின் துணை இனி எனக்கு எப்பவுமே வேண்டும். கைதடி இல்லாமல் இனி என்னால் நடக்க முடியாது.** (பக்கம் 37)

மகனை யுத்தத்தில் தொலைத்தது போல் அல்லாமல் அவனது ரங்குப் பெட்டியை ஒவ்வொரு இடப்பெயர்வின் போதும் அவள் தன்னுடனேயே கொண்டு வந்து விடுகின்றாள். மகனைத்தான் காணவில்லை. சிறுவயதில் அவனது பிஞ்சுக் கரங்கள் தொட்டு விளையாடிய அந்த விளையாட்டுப் பொருட்களாவது அந்தக் கிழவியை ஆறுதல் படுத்துமா? கீழுள்ள வரிகளில் அந்த ஏக்கம் துளிர்ப்பதைக் காணலாம்.

**ஞாபகமிருக்கா ஹரி உன் விளையாட்டுப் பெட்டியை? சிவப்புநிற ரங்குப்பெட்டி. உன் விளையாட்டுப் பொருட்கள் அத்தனையும் அதனுள்ளே! அவற்றுடனேயே விளையாடிக் கொண்டிருப்பாய்... அதனுடனேயே அயர்ந்து தூங்கிவிடுவாய்... அம்மா என்னுடனே அதை எடுத்து வந்துவிட்டேன் இந்தப் பனிபடரும் தேசத்திற்கு! ஒவ்வொரு இடப்பெயர்விலும் அதனை மட்டும் கையில் எடுத்துவிடுவேன் உன்னைத் தொலையவிட்ட மாதிரி அல்லாது!** (பக்கம் 38)

**என் நாடிகளிலும் நாளத்திலும் இரத்தம் ஓடும் வரை... இதயத்தின் சுவர்கள் சந்தம் மாறாமல் அடிக்கும் வரை...**
**சுவாசப்பைகள் இரண்டும் விரிந்து மூடும் வரை.. காதுகள் உன் குரலைக் கேட்கும் வரை... கண்கள் உன்னைக் காணும் வரை.. உன் ரங்குப் பெட்டியுடன் இந்தத் தாய் காத்திருப்பாள்!**(பக்கம் 44)

போரின் வடுக்களைப்பற்றி அந்த மூதாட்டி சொல்லும் கதைகள் வாசக உள்ளங்களையும் கவலையில் மூழ்கடித்து விடுவதை மறுக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யதார்த்தமாக கதையின் பாங்கு நகர்த்தப்பட்டிருப்பதினூடாக அந்த சமூகத்தின் அவலம் எமக்கு நன்கு புலப்படுகின்றது.

**ஆகாயத்தில் இருந்து தரையை நோக்கி வானவேடிக்கை தொடங்கியது... இல்லை உயிர்வேட்டை தொடங்கியது! எங்கள் கிராமம் உழப்பட்டது! எங்கள் வீடு எரிந்துவிட்டது! மரண பயத்தைக்கையால் தொட்டுப்பார்த்த முதல் கொடிய இரவு அது! நடுங்கின கைகள்... உதறின உடம்பு.. தடுமாறின சொற்கள்... வேறு வழியில்லை. இடம்பெயர்ந்தோம்! இரண்டாம் தடவை என் தொப்புள் கொடி அறுந்தது... குண்டுவீச்சு தந்த இரத்த வெள்ள மரணத்தில் நெளிந்தோம். விடியலில்லாத இரவைச் சந்தித்த வாழ்வின் முதல் நாள் அது.** (பக்கம் 63)

தனது அந்திம காலத்தில் தான் ஓடியாடி விளையாடிய ஊரை ஒருமுறையாவது காணவேண்டும் என்ற எதிர்பார்ப்பு யசோதா கிழவிக்கு ஏற்படுகின்றது. எனினும் அது சாத்தியப்படக்கூடிய விடயமில்லை. ஆதலால் அவளது உள்ளம் இவ்வாறு மௌனமாக கதறி அழுகிறது.

**ஹரி! எனக்கு பறக்கும் கம்பளம் ஒன்று அனுப்பி வைப்பாயா? சிவத்த பறக்கும் கம்பளம்! அதில் பறந்து என் தாயகத்திற்குப் போக வேண்டும். கிளித்தட்டும் எட்டுக்கோடும் விளையாடிய மண்ணில் என் சிறு கை அளாவ வேண்டும். கைகளை விரித்தபடி மழை பெய்யும் பொழுது.. வானத்தைப்பார்த்துக் கொண்டு நிற்க வேண்டும். வெள்ளம் முடிய வயல் காணிகளில் நடந்து நடந்து போக வேண்டும். நெல்லின் கதிர்கள் என் கால்களுடன் கதை பேச வேண்டும். பள்ளிக்குச் செல்லும் பின் வளவு ஒழுங்கையூடே கைகளினால் கார்விட்டபடி ஓட வேண்டும். நான் சின்னப் பெண்ணாக வேண்டும். என் தாய் மண்ணில் விளையாட வேண்டும். பாழாய்ப் போன போர் எல்லாத்தையுமே பந்தாடிவிட்டது. பஞ்சாக்கிவிட்டது.** (பக்கம் 90)

இன்று எல்லோரையும் தொற்றிக் கொண்டு விட்ட சமூக வலையமைப்பான 'பேஸ்புக்'கிலும் தனது மகனைத் தேடியதாய் சொல்லியிருக்கிறார் அந்த மூதாட்டி. என்றாவது மகன் அதனைக் காணக்கூடும். கண்டால் அவளைத்தேடி வரக்கூடும் என்ற அந்தத் தாயின் எதிர்பார்ப்பு மனதைக் கனக்கச் செய்கின்றது.

**உங்களுக்குத் தெரியுமா? 'பேஸ்புக்'கில் உனக்கொரு பக்கம் ஒதுக்கி உன்னைத் தேடினேன். ஒரு நாள் நீ அதைக் காண்பாய். என்னிடம் வருவாய். இது கதையல்ல, என் கண்ணா.. இது நிஜம்!** (பக்கம் 97)

கதையின் இறுதியில் கலாநிதி ஜீவகுமாரன் வாசகர் மனதை அப்படியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவலையால் துடிக்க வைக்கின்றார். காரணம் உலகத்தில் பரவி வரும் புற்றுநோய் மூதாட்டிக்கும் ஏற்பட்டுவிட்டது என்று மாத்திரம் கூறாமல் அது நோயாளியின் புறத்தோற்றத்தை எவ்வாறெல்லாம் மாற்றிவிடுகிறது. அந்த மாற்றத்தை யசோதாக் கிழவி எந்தப் பாங்கில் வெளிப்படுத்துகிறாள். என்பதை வாசிக்கும் போது கதாசிரியர் வெற்றி பெறுகிறார் என்றே கூற வேண்டும். அந்தக் கொடுமையை விபரித்து இருக்கும் விதம் இப்படி வருகிறது.

**ஹரி! நான் சொல்வதைக் கேட்டு நீ கலங்காதே. வைத்திய சாலையிடம் இருந்து இறுதி முடிவு வந்தது. உன் அம்மாவுக்குப் புற்று நோயாம். மரணத்தின் வாசலுக்கு மெது மெதுவாய் அழைத்துச் செல்லும் புற்று நோயாம்!** (பக்கம் 140)

**உனக்குத் தெரியுமா ஹரி! இங்கு ஒரு ஒற்றுமை. இந்த வார்ட்டில் ஒருவருக்கும் தலையில் முடியில்லை. கண்ணில் இமையில்லை. 'கர்ன்சர் பேசண்ட்' சங்கத்தின் முத்திரை இது. ஊதாக் கதிரின் வெப்பத்தில் இந்த ஊளைச்சதையில் தொங்கி நிற்கும் அத்தனை மயிர்களும் கொட்டிவிடும். நீ அம்மாவைப் பார்த்திருந்தால் பயந்திருப்பாய். இங்குள்ள அனைவருக்கும் இருட்டும் ஒன்றே. வேதனையும் ஒன்றே! வலிகளும் ஒன்றே!** (பக்கம் 145)

யசோதாவின் இறுதிக் காலங்கள் ஹெஸ்பிக் என்ற ஆச்சிரமத்திலேயே கழிகிறது. அன்னையர் தினமொன்றில் அவளது மற்றப் பிள்ளைகள் ரோஜாக்களை அன்பளிப்பாக வழங்குகிறார்கள். ஆனால் அந்த ரோஜாக்களிலும் கிழவி தனது இறுதி நாட்களையே காணுகிறாள். ஹரியின் குரலையாவது கேட்காமல் தனது இதயம் செயலிழந்து விடக்கூடாது எனக் கடவுளிடம் மன்றாடுகிறாள்.

ஆனாலும் என்ன? ஹரியின் குரலையும் கேட்காமல், அவனையும் பார்க்காமல் பிரிவுத்துயரிலே கழிந்து வந்த அவளின் வாழ்க்கைப் பயணம் காலனின் கைகளுக்குள் அமிழ்த்தப்படுகின்றது. ஆம்! யசோதா இறந்துவிடுகிறாள்! புத்தகத்தை வாசிக்கும் தொடக்கத்திலிருந்து கிழவி மகனைப் பார்த்துவிட வேண்டும் என்ற ஆவல் புத்தகத்தை படிக்கும் எங்களுக்கும் தொற்றிவிடுகிறது. எனினும் ஹரியைக் காணாமலேயே கிழவி இறந்த பிறகு மனசும் விம்மி அடங்குகின்றது.

திரு. ஜீவகுமாரன் திருமதி.கலாநிதி ஜீவகுமாரன் ஆகிய இலக்கிய தம்பதியரின் முயற்சி இன்னும் தொடர எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்!.

**நூல்** - **'இப்படிக்கு அன்புள்ள அம்மா'**(கவிதைத் தொகுதி)
**நூலாசிரியர்** - கலாநிதி ஜீவகுமாரன்
**தமிழில்** - வி.ஜீவகுமாரன்
**வெளியீடு** - விஸ்வசேது இலக்கியப்பாலம்
**தொடர்புகளுக்கு** - visvasethu@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






**– கோத்திரன்**

# வீறெய்து மாண்பாம் வினைத்திறன்!

**"என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாய்த் தமிழ் செய்யுமாறே"** என்றொரு திருமூலர் திருவாக்கு உண்டு. 1913 ஆகஸ்ட் 2ம் திகதி அந்தத்திருவாக்கு ஒரு தெய்வீகக் குழந்தையானது. இடம் ஊர்காவற்றுறை கரம்பொன் கிராமம். அப்பா நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட தலைமைக்காரர் என மதிப்புப் பெற்றிருந்தவர். அவர் பெயர் நாகநாதன் கணபதிப்பிள்ளை. கத்தோலிக்க மார்க்கத்தை ஏற்றுக் கொண்டதன் பேரில் அவர் நாமம் ஹென்றி ஸ்ரனிலஸ் என மாற்றம் பெற்றிருந்தது. தாயார் கரம் பொன் கிராமத்து சிசில் இராசம்மா வஸ்தியாம்பிள்ளை. இவர்களது மணவாழ்வின் முதல் குழந்தையே அந்தத் திருவாக்கின் தெய்வீக வரவானது - வரலாறுமானது. 1913 ஆகஸ்டில் மார்க்கத்தின் திருமுழுக்கின் பின் இக்குழந்தை **'சேவியர்'** என அழைக்கப்படலாயிற்று. சேவியருக்குப் பாலசிங்கம் என்ற தம்பியும் இரு சகோதரிகளும் உண்டு. ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் ஆரம்பக் கல்வியை 'சேவியர்' ஆரம்பிக்கின்றார். அங்குபடித்த அந்த மூன்றாண்டுகளில் ஆங்கிலத்தில் கவிதை புனைய ஆரம்பிக்கிறார் இவர். அது **'Poetry of Kayts'** என தனது ஊர் பற்றியதாக இருந்தது. அதன் பின்னான கல்வி யாழ்.சென் பற்றிக்ஸ் கல்லூரியில் தொடருகிறது. அங்குதான் புகழ்பெற்ற லோங்(Long) அடிகளிடம் (இவர் அயர்லாந்தைச் சேர்ந்தவர்) பாடம் கேட்கும் பாக்கியம் கிடைக்கின்றது. 1928 ல் E.S.L.C பரீட்சையிலும் 1930 ல் Cambridge பரீட்சையிலும் வரலாற்றில் விசேட தகைமைகளுடன் தேறுகிறார். அடுத்த ஆறுமாதத்தில் 'இலத்தீன்' மொழியில் Matriculation பரீட்சையில் அதிவிசேட சித்தி கிடைக்கின்றது. அந்த நாட்களில் ஆங்கிலத்தில் ஆற்றொழுக்காகப் பேசும் ஆற்றலையும் அடைந்திருந்தார். அப்பாடசாலையின் ஆங்கில ஏட்டிற்கு ஆசிரியராகவும் பணிபுரிந்திருக்கிறார். சேவியர் தமது 17 வது அகவையில் 'டால்டாயின்' 'உயிர்ப்பு' (The Ressuretion by tolstoy) நூலைப் படிக்க நேரிடுகிறது. அதன் தாக்கம் இவரை ஈர்க்கும்போது இவர் அன்னையின் ஆசையும் வித்திட இவர் குருத்துவக் கல்லூரிக்குள் நுழைகிறார். கொழும்பு - பொறளை செமினரியில் 1931 - 1936 வரையான நாட்களில் மெய்யியல், சமய ஒப்பியல், சிங்களம், தமிழ் என ஆழமான ஆற்றலுக்கு அடித்தளம் அமைகிறது. அந்த அடித்தளத்தில் எழுந்த அசைவற்ற கட்டிடமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வண.சேவியர் தனிநாயக அடிகளாக** உலகம் அறிகிறது. 21 வது வயதில் ரோமாபுரியில் மறைக்கல்வியில் கலாநிதிப்பட்டம் பெறுகிறார். அடிகள் அங்குமொரு பேராட்டத்தை உருவாக்குகிறார். கீழைத்தேயத் துறவிகளுக்கு தனிப்பிரிவு வேண்டுமென்ற கோரிக்கையே அது. அங்குள்ள நூலகத்துக்கு கலாயோகி ஆனந்தகுமாரசுவாமியின் **'சிவநடனம்'** நூலை அன்பளிப்புச் செய்கிறார். ரோம் நூலகத்திலிருந்து **'தம்பிரான் தோத்திரம்'** என்ற நூலின் பிரதியை எடுத்துவருகின்றார். இந்நூலே தமிழில் முதன் முதலில் அச்சுவாகனம் ஏறிய (1930ல்) வெளியீடாகும். அதிலிருந்துதான் அடிகளின் ஆய்வு தொடங்குகிறது. கிரேக்கம், இத்தாலியமொழிகளில் பாண்டித்தியம் பெற்றதும் அந்நாட்களில்தான். அடுத்து கம்போடிய சிவன் ஆலயங்களும் அங்கு மாற்றமடைந்து ஓதப்படும் திருவாசகம் பற்றிய ஆய்வுகளையும் அடிகள் தொடருகிறார். இவ்வாய்வின் இறுதியில் இவரது கருத்தொன்று இப்படி இருக்கிறது. "ஸ்பானிய மொழி இனிமை என்றால், இலத்தீன் அறிவுக்கென்றால், இத்தாலியம் காதலுக்கென்றால், ஆங்கிலம் வணிகத்துக்கென்றால், தமிழ் மொழி பக்திக்கு உரிய பெருமையைத் தருகிறது" என.

மறைக்கல்வியின் பின் தமிழ்நாட்டில் சிலகாலம் தங்குகிறார். தூத்துக்குடியில் **'கிறிஸ்தவ தமிழ் இலக்கிய மன்றம்'** உருவானதுடன் **'Tamil Culture'** என்ற காலாண்டு சஞ்சிகையையும் உருவாக்கினார். இச்சஞ்சிகையே தமிழ் ஆய்வின் குறைபாடுகளையும் அவற்றை ஒருங்கிணைத்துநெறிப்படுத்திட வேண்டிய அவசியத்தையும் அறிவுஜீவிகளின் முன் அர்ப்பணித்து நின்றது. இதை விளக்க வந்த அடிகளார் தமது ஆசிரிய தலையங்கத்தில் "எழுநிலை மாடம் கால் சாய்ந்துக்குக் கழுதை மேய் பாழாகிலும் ஆகும்" என்ற ஔவையாரின் பாட்டின் கருத்துக்கு ஒப்பான கிரேக்கக்கவி ஒன்றை மேற்கோள்காட்டி எழுதுகிறார். இவ்விதழ் 1952 ஜனவரி முதல் தேதியில் வெளிவந்திருக்கிறது. அந்த ஆண்டின் இடைநடுவில் அடிகளார் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளராகப் பணியேற்கிறார். கொழும்பில் **'தமிழ்ப் பண்பாட்டுக்கழகம்'** என ஒன்றை உருவாக்குகிறார். ஆரம்பக் கூட்டம் அன்றைய நீதியரசர் செ.நாகலிங்கம் அவர்களின் தலைமையில் நடந்தேறியுள்ளது. இக்கூட்டத்திலேயே அடிகளாருக்கு அறிமுகமாகிறார் 'தலைவர் செல்வா' அவர்கள். 1956 யூன் 5 காலிமுகத்தரையில் நடந்த சத்தியாக்கிரகப் போராட்டத்துக்கு அடிகளார் வருகைதர இவ்வறிமுகமும் ஒரு காரணமாயிற்று. அங்கு நடத்தப்பட்ட தாக்குதல்கள் அடிகளார் பக்கம் வராதவாறு அன்றைய உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் சிட்னி டீ சொய்சா பாதுகாத்ததாக ஒரு செய்தி உண்டு. அப்போராட்டத்தில் அடிகளார் குருத்துவ உடையுடன் காட்சி தந்தமை மதபீடத்துள் ஒரு மனக்கசப்பையும் உருவாக்கியது என்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலையில் அடிகளார் இங்கிலாந்து பல்கலைக்கழகத்துக்குக் கலாநிதிப் படிப்பை மேற்கொள்ளப் புறப்பட்டுப் போகிறார். மீண்டும் இலங்கை திரும்பியவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சிலகாலம் பணியாற்ற முடிந்தது. இங்கிலாந்திலிருந்து திரும்பும்போது இவரால் எடுத்துவரப்பட்ட அரிய பல தமிழ் - தமிழர் பற்றிய வரலாற்று நூல்களை மிகவும் சிரமப்பட்டு 1960 ல் ஒரு கண்காட்சியாக இவர் நிறைவேற்றிக் காட்டினார். இதுவே பல்கலைக்கழக மட்டத்தில் தமிழ் நூல்கள் பற்றியகண்காட்சிக்கும் ஆய்வு நிலைக்கும் ஆரம்பகளமானது.

1961 ல் மீண்டும் ஒரு அரசியல் குழப்பநிலை தோன்றியது. அது சத்தியாக்கிரகமறியல் போராட்டமாக அரச அலுவலகங்களின் செயற்பாடுகளுக்கு எதிரான செயற்றிட்டமாக உருவெடுத்தபோது அடிகளார் சக சிங்களப் புத்திஜீவிகளுடன் - பலரது ஒப்புதலுடன் தமிழ் மக்களின் போராட்டத்தை நியாயமானதென்ற கருத்தினை முன்வைத்து பிரசுரங்களையும், விளக்கக் கூட்டங்களையும் தைரியமாக தலைநகர் கொழும்பு உட்பட பல இடங்களில் நடத்தினார். இக்கட்டத்தில் மீண்டும் மதபீடத்துடன் அடிகள் முரண்பட நேர்ந்தது. குற்றத்தடுப்புபிரிவினரால் இவர் விசாரணைக்குட்படுத்தப்பட இருப்பதாகச் செய்திகள் பரவின. அந்த நேரம் மலேசியப் பல்கலைக்கழகத்திடமிருந்து இந்திய - கீழைத்தேயத்துறைப் பேராசிரியராக நியமனம் கிடைத்ததன் காரணமாக இவர் இலங்கையை விட்டு வெளியேறினார். 1961 ல் ஏற்கப்பட்ட அந்தப்பதவியே அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் அமைத்திட வழிவிட்டது. உலகத்தின் ஆய்வாளர்களையும் கல்வியாளர்களையும் ஒன்றிணைத்தது. இந்த நிலை ஏற்பட அடிகளாரின் **'Tamil Culture'** என்ற அந்தக் காலாண்டு இதழின் - குறிப்பாக1958 - 1965 காலத்திலான சேவை அங்கீகரிக்கப்பட்ட ஒரு வரலாற்று உண்மையாகும். **'உலக தமிழ் ஆய்வுக்கழகத்தின்'** உதயம் அடிகளாரின் **'Tamil Culture'** இதழின் அளப்பரிய பணிகளின் பெறுபேறாகும் என்பது மிகைப்படுத்துதல் அல்ல. அந்நாட்களில் அடிகளாருடன் துணை நின்றவர்களில் பேராசிரியர் ஜோன் ஆஷர், பேராசிரியர் ஜீன் பிலியோலா, முனைவர் மு.வ. என்போர் முக்கியமானவர்கள்.

1965 அனைத்துலக தமிழ் ஆய்வு மன்றின் ஆரம்ப ஆய்வு மகாநாடு மலேசியாவில் இடம்பெற்றது. அன்றைய அரசு அதற்கான வசதிகளை அளித்துக் கௌரவித்தது. அந்த மகாநாட்டில் விசேடமாக இலங்கையிலிருந்து சிங்கள அறிஞர்களையும் பங்குபெற வைத்தார் இவர். சிங்கள மகாகவி பி.பி. அல்விஸ் **'சிங்களக்கவிதைகளில் பாரதியின் தாக்கம்'** என்ற தலைப்பிலும் **'சிங்கள இலக்கியத்தில் குறளின் செல்வாக்கு'** என்ற தலைப்பில் வாகீஸ்வராச்சிய சிறீசாள்ஸ் த சில்வாவும், **'சிங்களத்தில் தமிழின் செல்வாக்கு'** எனும் தலைப்பில் வண-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹின்னல்ல தர்மரத்தின தேரரும், **'இந்திய இலங்கை கல்வெட்டில் சில பொது அம்சங்கள்'** என அன்றைய தொல் பொருள் திணைக்கள துணை ஆணையாளர் கலாநிதி கருணாரத்தினவும், **'இலங்கையில் பெருங்கல் பண்பாட்டுச் சான்றுகள்'** என்று கலாநிதி எஸ்.பி.எஸ். சேனரத்னவும் கட்டுரை சமர்ப்பித்து உரையாற்றியிருந்தனர். இம்மாநாடு அடிகளாரின் அயராத உழைப்பின் உன்னத வெளிப்பாடு எனலாம். அம்மாநாட்டில் 22 நாடுகளில் 132 அறிஞர்களுடன் 40 பார்வையாளர்களும் பங்கு கொண்டனர். 150 ஆய்வுக்கட்டுரைகள் ஆய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. தனி ஒருவராக நின்று தனது மொழிக்கும் தமிழர்களுக்கும் இத்துணை ஆற்றல் மிக்கச் சாதனைகளை அடிகளைத்தவிர எவரால் ஆற்றியிருக்க முடியும்? எனவேதான் அவர் **'தனிநாயகம்'** எனப் பெயர் பெற்றார் போலும்.

இரண்டாம் மூன்றாம் மகாநாடுகள் சென்னையிலும், பிரான்சிலும் நடைபெற்றன. நான்காவது மாநாடு 1974 ல் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது. அரசியல் காழ்ப்புணர்வாளர்களாலும் அண்டிப்பிழைக்கும் அரசியல் பேடிகளாலும் அற்புதமாக நடந்தேறிய மகாநாட்டின் இறுதி நாளில் குழப்பமேற்பட்டதுடன் பதினொரு உயிர்கள் பரிதாபகரமாக மாண்டுபோன நிகழ்வும் நடந்தது. அடிகளார் துடித்துப்போனார். துன்பம் கொண்டார். விரக்தியின் விளிம்புக்குப் போனார். நொந்துபோன இதயத்துடன் நோய்வாய்ப்பட்டார். பொதுநிகழ்ச்சிகளைப் புறந்தள்ளிவிட்டார். தனிமையாக இருக்கவும் தலைப்பட்டார். நிமிர்ந்த நடையும் நேரிய பார்வையும் தடைப்பட்டது. உலகம் சுற்றிய அந்த உடம்பு உருக் குலைய ஆரம்பித்தது.

அடிகளாரின் ஆய்வில் **'Nature in Ancient Tamil Poetry'** எனும் நூல் பல பதிப்புகளில் பெயர் மாற்றம் பெற்று புதிய புதிய தகவல்களுடன் வெளிவந்திருக்கிறது. இது உலக அரங்கில் இவர் புலமையைப் புலப்படவைத்துள்ள தனித்துவமாகும். இரண்டு ஆண்டுகள் இடைவிடாது தொடர் பயணங்களை மேற்கொண்டு தமிழ் - தமிழர் பண்பாடுகளை உலகறிய உரைத்தவர் அடிகளார். அங்கிருந்த தமிழர் தரவுகளை ஆதாரமாக அள்ளிவந்தவர் அடிகளார். 1965ல் அப்புறம் புதிய சேர்வுகளுடன் 1981 ல் வெளியான சென்னைப் பல்கலைக்கழகத்தின் 1252 பக்கங்களையும் 74400 சொற்களையும் கொண்டிருக்கும் (அளவு 111/2" X 83/4" X 21/2") **'English Tamil Dictionery'** யை உருவாக்கிய ஏழு தமிழ் பேரறிஞர்களில் அடிகளாரும் ஒருவர் என்பது பலர் அறியாதது. மற்றையவர்கள் அறுவரும் தமிழ்நாட்டினர் என்பது இங்கு குறிப்பிடப்படவேண்டியது. பல ஐரோப்பிய நாட்டுப் பல்கலைக்கழகங்கட்கு இவர் வருகைப் பேராசிரியராகவும் பயணித்திருக்கிறார். பல வகுப்புக்களையும் நடத்தியிருக்கிறார். அடிகளாரின் தமிழ்த்தூது நமக்கு ஏற்படுத்திக் கொடுத்த பெருமைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏராளம். இவரது உலகவலமே இன்றைய செம்மொழி ஆக்கத்துக்குத் துணை நின்றது - தூண்டுதலாய் இருந்தது.

கட்டுப்பாடு, ஒழுக்கம், தற்றுணிவு, ஆய்வு, நேரம்பிந்தாமை என்பன இவருடன் ஒட்டிப்பிறந்தவை. யாழ்ப்பாணத்து விழா ஒன்றில் தனது ஆசிரியர் பேராசிரியர் ரா.பி.சேதுப்பிள்ளை அவர்கள் தலைமை தாங்கக் காலதாமதமானபோது அடிகளார் குறித்த நேரத்தில் தன் பேச்சை ஆரம்பித்துவிட்டார்கள். அது பற்றிப் பின்னர் பேராசிரியர் சேதுப்பிள்ளை அவர்கள் குறிப்பிடும்போது 'தனிநாயகம் பேசுவதற்கு ஒரு சபாநாயகம் வேண்டுமோ!' என்றிருக்கிறார். வாழ்நாள் முழுவதும் தமிழ்த் தொண்டாற்றியவர். தனிமனிதனால் ஆற்றமுடியாத அரியவற்றை ஆக்கமாக்கியவர். தமிழ்த் தூதுவராக தொழிற்படுத்தியவர் என்றவகையில் அடிகளார் பற்றி அளந்திட முடியவில்லை. அது நீண்டு செல்லும் நிறைவில்லாத தொடராகிறது.

இறுதியாக இவர் பங்கேற்ற நிகழ்வு 1980ல் வேலணையில் நடந்த திருக்குறள் பற்றிய மாநாடாகும். கா.பொ.இரத்தினம் அவர்களின் அழைப்பை மறுக்கமுடியாமல் பங்குகொண்ட நிகழ்வு அது. அதே ஆண்டு செப்டம்பர் முதலாம் திகதி அடிகளார் அமரராகி விட்டார். அதற்கு அப்பால் தமிழுக்கும் தமிழருக்கும் நடந்த அனர்த்தங்களை அவர் காணாமலே கண்களை மூடிக் கொண்டார். அல்லாவிடில் அவருக்கு ஒரு சித்திரவதையான வாழ்வே தொடர்ந்திருக்கும். அவரது மேடைப்பேச்சில் மிளிர்ந்த அந்தச் சிறப்பு 'ழ' கரம் இன்னும் அவர் வரவைப் பார்த்து நிற்கிறது.

"தூது என்பது பரிமாறிக் கொள்வது. இலக்கணமும் செயற்றிறனும் இவர்கள்பால் இருக்க வேண்டும்." என்றிருக்கிறது வள்ளுவத்தில். ஆக இயற்கையில் அமைந்த கூர்மையான அறிவும் கண்டார் விரும்பும் தோற்றப் பொலிவும் ஆட்சி நெறிமுறைகளை நன்கு ஆராய்ந்து அரசியல் - கல்வி - அறிவு ஆகிய இம்மூன்றையும் முழுமைபெறப் பெற்றவனே தூது செல்வதற்குத் தகுதியானவன்" என்கிறார் வள்ளுவர். அடிகளாரின் அகில உலகத்தினூடான தமிழ்த்தூது அத்தகையதே. வள்ளுவத்தின் வார்த்தையில் இதோ:

**"அறிவுரு வாராய்ந்த கல்வியிம் மூன்றன்**
**செறிவுடையான் செல்க வினைக்கு"**

(தூது : குறள் 684)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் நாவல்

# மீண்டும் ஒரு காதல் கதை

10



- திருக்கோவில்
யோகா.யோகேந்திரன்

இன்னுமொரு சமயம் மிகக் குறைவாக கிடைக்கும் இரத்தக் குறுப்பான 'ஏபீ நெகடிவ்' ரக இரத்தம் விபத்துக்குள்ளான ஒரு ஏழை நோயாளிக்கு உடன் தேவைப்பட்ட போது கையிருப்பும் இல்லாமல் இரத்தம் பெற ஆளும் இல்லாமல் அந்நோயாளி மரணத்துடன் போராடிய வேளை அதைக் கேள்வியுற்று எதையும் யோசிக்காமல் ஓடிச் சென்று தன் குருதியைக் கொடுத்து உயிர் காத்தவள் ராதா.

அந்த நோயாளி குணமடைந்ததும் ரங்கநாதனைத் தேடி வந்து அவர் காலில் விழுந்து "தேவதை' 'தேவதை' எண்டு ஆக்கள் கதைக்கிறதைக் கேள்விப்பட்டிருக்கன் ஐயா. என்னப் பொறுத்தமட்டில உங்க பொண்ணுதானய்யா தேவதை. அந்தம்மா அந்த நேரத்தில ஓடி வந்து ரெத்தம் தராமலிருந்தா நான் செத்துப் போயிருப்பன் ஐயா. என்ட அஞ்சு புள்ளயளும் கதியில்லாமல் போயிருக்குங்கள்" என்று அழுதபோது இறும்பூதெய்தினார் ரங்கநாதன். தாய் சரஸ்வதிக்கோ மகளைப் பற்றி மிகப் பெருமை.

இவை மட்டுமல்ல அவ்வப்போது வெளியில் மருந்து வாங்கவென்றும் உணவுக்கென்றும் மிகச் சிரமப்படும் ஏழைகளுக்கு பண உதவியும் அவள் செய்வதுண்டு.

வைத்தியத்துறையில் இவ்வாறான அர்ப்பணிப்புடனும், விசுவாசத்துடனும் சேவை புரிவது கண்டு மன நிறைவடையும் ரங்கநாதன் தன் மகள் வைத்திய சேவைக்கென்றே இறைவனால் ஆசீர்வதிக்கப்பட்டவள் என நினைத்துக் கொள்வார்.

வைத்தியர்களுக்கான விடுதியில் ஏகப்பட்ட சிந்தனைகளோடு கட்டிலில் படுத்துக் கிடந்தான் கண்ணன். "ராதாவுக்கு என்ன ஆயிற்று? அவள் ஏன் இப்படி இருக்கிறாள். அவள் இப்படி மாறிப்போக ஏதாவதொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலுவான காரணம் இருக்க வேண்டும். அது என்னவாக இருக்கும்? தன்னுடன் கதைப்பதை அவள் தவிர்க்க முயற்சிக்கிறாளே. அது ஏன்? நேரில் கதைக்க வேண்டி வந்துவிட்டால் அவள் மிறடு விழுங்குவதும் மிரட்சியுடன் விலகப் பார்ப்பதும் தலைகுனிவதும் ஏன்? போனில் கதைக்கும்போது தடுமாறுகிறாளே அது ஏன்?

பிற்பகலில் வீட்டிற்குப் போனால் சுந்தரியுடன் பட்மின்டன் விளையாடிக் கொண்டிருப்பாள். இப்போதெல்லாம் அப்படி விளையாடுவதைக் காண முடியவில்லை.

தான் பார்த்த சினிமாவையோ வாசித்த நாவலையோ பற்றி விழிகள் விரிய விமர்சிப்பதை இப்போதெல்லாம் விட்டு விட்டாளே காரணமென்ன?"

கண்ணன் இவ்வாறெல்லாம் யோசித்து யோசித்து ஒருநாள் அவளிடம் காரணம் கேட்டபோது 'அப்படியெல்லாம் ஒன்றுமில்லை' என்று மழுப்பினாள்.

அவளுக்கு சினிமாக்களிலும் கதைகளிலும் வருவது போல ஏதும் பயங்கரமான நோய் ஏற்படக்கூடிய அறிகுறிகள் புலப்பட்டு மிரண்டு போயிருக்கிறாளோ அல்லது தன்னைப் பற்றி யாராவது ஏதாவது சொல்லியிருப்பார்களோ அல்லது தன்னை உயிருக்குயிராக நேசிப்பதாகச் சொல்லி தன்னை இடைவிடாது தொல்லை தருகிற சக டாக்டர் அஞ்சலி ராதாவிடம் ஏதாவது சொல்லி அவளின் மனசைக் குழப்பி விட்டிருப்பாளோ?

இவள் மனந்திறந்து தன் பிரச்சினையைச் சொல்லத் தயங்குவதன் காரணம் என்ன? உடம்பு கூட வெகுவாக இளைத்துவிட்டிருக்கிறது. ஏதோவொரு பாரதூரமான பிரச்சினையை வெளியில் சொல்ல முடியாமல் மனசுக்குள் போட்டு அவஸ்தைப்படுகிறாள் என்பது மட்டும் கண்ணனுக்குச் சந்தேகமின்றிப் புரிந்தது.

அவளும் சொல்வதாயில்லை. கேட்டாலும் சொல்கிறாளில்லை. இதுபற்றி யாரிடம் கேட்பது? அப்படி அவளைப்பற்றி மற்றவர்களிடம் கேட்பது நாகரீகமான காரியமுமல்ல. அவளது நெருங்கிய தோழிகளான ரதி, காஞ்சனா, வயலட் ஆகியோருக்கும் ஏதும் தெரிந்திருக்கக் கூடும். அவர்களிடம் எப்படிக் கேட்பது?

மாமா மாமியிடம் கேட்டுப் பார்க்கலாம். ஆனால் அது வீண் பிரச்சினையாகிவிடக்கூடும். அவளுடன் கூடவே இருக்கும் சுந்தரியிடம் கேட்கலாம். அது ஆபத்து. அந்த வாயாடி "கண்ணன் ஐயா இப்படிக் கேட்டாரக்கா" என்று போட்டுக் கொடுத்து விடுவாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணன் இவ்வாறெல்லாம் பல கோணங்களிலும் யோசித்து யோசித்து ஒரு முடிவுக்கு வர முடியாதவனாகக் குழப்பமுற்றான்.

தான் எப்போதும் போல இயல்பாக இருப்பதாகக் காட்டிக் கொள்ளத் தன் விருப்பத்திற்கு மாறாகச் செயல்பட அவள் முனைவதையும் கூட கண்ணனால் புரிந்து கொள்ள முடிந்தது.

ராதாவின் தற்போதைய நிலையை எண்ணிக் கவலைப்பட்டவனாக அன்று மாலை அவளது வீட்டிற்குச் சென்றான் கண்ணன்.

ராதா தன் அறையில் சாய்வு நாற்காலியில் கைகளை ஊன்றிக் கொண்டு அவள் உட்கார்ந்திருந்த கோலமே அவள் மிகத் தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டிருக்கிறாள் என்பதை உணர்த்தியது.

ஓசைப்படாமல் அருகில் சென்ற கண்ணன் "ராதா....!" என மெலிதான குரலில் அழைத்தான்

ஒரு திடுக்கிடலுடன் "அ...... அத்தான்" என தடுமாறிக் கொண்டவளாய் சரேலென எழுந்து நின்றாள் ராதா. அவள் சற்று முன் வரை அழுது கொண்டிருந்திருக்க வேண்டும். அவளது கண்கள் கலங்கிச் சிவந்திருந்தன. அவளது அந்தத் தோற்றம் கண்ணனுக்கு மிகுந்த வேதனையைத் தந்தது.

"ராதா...! உனக்கு என்னதான் பிரச்சினை? ஏன் இப்பிடி இருக்கிறாய்? பழைய கலகலப்பு உற்சாகம் எதுவுமே இல்லாமல் ஒரு நோயாளியைப் போல சோர்ந்து போய் இருக்க என்ன காரணம்? என்ன பிரச்சினை என்றாலும் மனம் விட்டு என்னிடம் சொல் ராதா. உன் பிரச்சினை என்ன என்று தெரிஞ்சால்தானே அதைத் தீர்த்து வைக்க முடியும்?"

ராதா மௌனமாக அவனை ஏறிட்டாள் "என்னிடம் எதுவும் கேட்காதீங்க' என்று கெஞ்சுவது போலிருந்தது அவளது பார்வை.

அவளைப்பார்க்க அவனுக்கு மிகவும் பரிதாபமாக இருந்தது. இவளது மனசுக்குள் இருக்கும் பிரச்சினையை எப்படியாவது வெளிக் கொணர வேண்டும் அல்லது மனசுக்குள்ளே போட்டு மறுகி மறுகி ஏதும் விபரீத நிலைக்கு இவள் ஆளாக நேரிடலாம்.

எனவே இவளிடமிருந்து உண்மையை வரவழைக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தான் கண்ணன்.

"ராதா பிரச்சினைகளை மனசுக்குள் போட்டு அடக்கி வைக்கக்கூடாது. அதை வெளியில் யாரிடமாவது சொல்ல வேணும். அப்போதுதான் மனசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுதலடையும். என்னவானாலும் பரவாயில்லை. என்னிடம் சொல் ராதா... பிளீஸ்!'' வாஞ்சையோடு கெஞ்சும் பாவனையில் கேட்டான் கண்ணன்.

அவன் இவ்வாறு ஆறுதலாக - மென்மையாகக் கேட்டபோது அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. 'இந்த அன்பை - பிரியத்தை - தவிப்பை நான் தொலைத்துவிட்டு நிற்பதை உங்களிடம் எப்படிச் சொல்வேன்' என மனசுக்குள் குமுறினாள் ராதா.

''அத்தான்! நீங்க கனவில கூட நினைக்காத விசயத்தை - உங்களால் நம்பமுடியாத சங்கதியை - உங்களால ஏற்றுக் கொள்ள முடியாத ஒரு செய்தியை எப்படி அத்தான் உங்களிட்டச் சொல்ல முடியும்?''

அப்படியெல்லாம் சொல்ல வேணாம் ராதா. நீ உன்ர பிரச்சினையை என்னிடம் தயங்காமல் சொல்லலாம். யோசிக்காமல் சொல். எதுவானாலும் பராவாயில்லை'' கண்ணன் சற்றுப் பரபரப்படைந்தான்.

''நான் பாவி அத்தான். பெரும் பாவி. உங்க அன்புக்கும் பிரியத்துக்கும் நம்பிக்கைக்கும் தகுதியில்லாதவள்''

''இந்தா பார் ராதா. இன்னும் இன்னும் அதையும் இதையும் சொல்லி என்னைக் குழப்பாமல் நேரடியாக விசயத்துக்கு வா''

''அத்தான் என்னை இப்போ வற்புறுத்தாதீங்க. உங்ககிட்ட சொல்லாம வேறு யாரிட்ட சொல்லப் போறன்?''

''அப்போ சொல்லன் ராதா''

''இப்ப என்னால சொல்ல முடியாது. பிறகு சொல்றன்''

''பிறகா? ஏன் இப்ப சொல்லுறதுக்கென்ன?''

''ஐயோ அத்தான் என்னால இப்ப முடியாது. நான் உங்களோட இரவைக்குப் போன்ல கதைக்கிறன்''

''சரி. இரவுக்கு உன்ர போனுக்காகக் காத்திருப்பன். ஏமாத்திப்போடாமல் கட்டாயம் கதைக்க வேணும் சரியா?''

''சரியத்தான்'' என்று அவனிடம் கூறிய ராதா ஏற்கனவே உங்களை ஏமாற்றிய விசயத்தைத்தானே சொல்லப்போறன் என மனசுக்குள் நினைத்துக் கொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதுசரி.... இரவைக்கு எத்தனை மணிக்குக் கதைப்பாய் ராதா?"

"ஒன்பது மணிக்குப் பிறகு கதைக்கிறன்"

"ஓகோ .. எல்லோரும் தூங்கிய பிறகுதான் இவள் கதைக்க நினைக்கிறாள். அப்படியென்றால் இது மிகவும் பாரதூரமான விசயமாகத்தான் இருக்க வேணும்" என நினைத்தான் கண்ணன்.

விடுதிக்கு வந்த கண்ணனுக்கு ஒரே டென்ஷனாக இருந்தது. இரவு உணவை சும்மா ஏனோதானே என்று முடித்து விட்டு நேரத்தைப் பார்த்தான். எட்டரை மணியாகிவிட்டது. அவனுக்கு ஒவ்வொரு நிமிடமும் நத்தை வேகத்தில் நகர்வதாகவே பட்டது. அன்று விடுமுறை நாளானதால் குறிப்பிட்ட சிலரைத்தவிர விடுதியில் அநேகமானோர் இருக்கவில்லை. நல்லகாலமாக அவனுடன் ஒரே அறையில் தங்கியிருக்கும் ராகவன் கூட வீட்டிற்குச் சென்றிருந்தான்.

கண்ணன் கட்டிலில் உட்கார்வதும் நேரத்தைப் பார்ப்பதுமாக அவஸ்தைப்பட்டான். அவனுக்கு இவ்வாறானதொரு சங்கடமான நிலைமை இதுவரை ஏற்பட்டதே இல்லை. மனசு என்பது எத்தனை விசித்திரமானது. ஒவ்வொருவரின் எதிர்பார்ப்புக்களின் வீச்சுக்கேற்பவே நேரம்கூட நகர்வதாகத் தெரிவது ஆச்சரியம்தான். சிலவேளை இரவு உணவின்பின் நண்பர்களோடு ஜாலியாக அரட்டையடிக்கும்போது நேரம் போவதே தெரிவதில்லை. ஆனால் இன்று ஒவ்வொரு நிமிடமும் கழிய எவ்வளவோ நேரம் போவது போலிருக்கிறதே என நினைத்தான். கண்ணன்.

சரியாக ஒன்பதே காலுக்கு டெலிபோன் கிணுகிணுத்தது.

படபடக்கும் இதயத்தோடு ரீசிவரை எடுத்து காதுக்குக் கொடுத்தான் கண்ணன்.

ராதா போனில் தயங்கித்தயங்கிக் கூறிய விடயம் கண்ணனை அப்படியே உறைய வைத்துவிட்டது.

அவனது எதிர்காலம் பற்றிய சகல கனவுகளும் கிடுகிடுவெனச் சரிய அதிர்ந்து போய் தலையைப் பொத்திக் கொண்டு கட்டிலில் உட்கார்ந்து விட்டான் கண்ணன்.

'இப்படி இருக்குமா. அப்படி இருக்குமா', என்று பல விதத்திலும் யோசித்த கண்ணன் ராதா கூறிய விதத்தில் யோசிக்கவே இல்லை. அதனால் பேரதிர்ச்சிக்கு உள்ளாகி பேயறைந்தவனைப் போலக் காணப்பட்டான் கண்ணன்.

**(கதை தொடரும்....)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராசிரியர் கா.சிவத்தம்பி – சில நினைவுக்குறிப்புகள்



**செல்வி க.தங்கேஸ்வரி**
**பீ.ஏ. (தொல்) சிறப்பு**

எமக்குப் பேராசானாகவும், தமிழ் அறிஞர்களுக்கு மூதறிஞராகவும், தமிழ் மக்களுக்கு இலக்கிய விளக்காகவும் விளங்கிய பேராசிரியர் சிவத்தம்பியின் மறைவு தமிழ் உலகிற்குப் பேரிழப்பாகும். பழகுவதற்கு இனிமையான சுபாவம் கொண்ட பேராசிரியர் ஏனைய பேராசிரியர்களிடமிருந்து வித்தியாசமானவர். இவரும் இவரது குடும்பத்தினரும் எவருடனும் அன்புடனே பழகும் வழக்கம் உள்ளவர்கள். இலக்கியம், நாடகம், வெகுசனத்தொடர்பு போன்ற பல்துறைவித்தகரான பேராசிரியர் தமது வீச்சான எழுத்துக்களால் தமிழ்த்தேசியத்தைக் கவர்ந்தவர். தமிழுலகிற்கு பல்வேறு ஆக்க பூர்வமான செய்திகளைத் தந்தவர். எம்நாட்டில் மட்டுமல்ல எம்மவர் வாழும் நாடெங்கும் தமிழ் மணம் பரவச் செய்த பெருந்தகை.

1932 ல் பிறந்த பேராசிரியர் தமது 79 வது வயதில் அமரராகிவிட்டார். இத்தனை வருடங்களிலும் இவர் ஆற்றியுள்ள இலக்கியப்பணிகள் ஈடிணையற்றவை. 70 நூல்களும் 200க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதி ஈழத்து இலக்கிய உலகிற்குப் புகழ் தேடியுள்ளார். என்றுமே புதிய கருத்துக்களை, தேடல்களை முன்வைத்துள்ளார். ஆரம்ப காலங்களில் அவர் மாக்ஸிஸவாதியாக இருந்தாலும் காலப்போக்கில் தன்னை மாற்றிக் கொண்டவர். பல்கலைக்கழக மாணவர்களுக்கு அவர் ஒருஆதர்சபுருஷராவார்.

1974 - 1978 களில் வித்தியாலங்கார (களனி பல்கலைக்கழகம்) வளாகத்தில் நாம் அவரை முதல்முதல் சந்தித்தோம். வெகுஜனத் தொடர்பு (Mass Communication) பாடம் கற்பிக்க அங்கு வந்தபேராசானின் அறிமுகமும் தொடர்பும் அவர் பிரியும் வரை நீடித்தது. அண்மையில் நடந்த சர்வதேச தமிழ் எழுத்தாளர் மகாநாட்டின்போது இந்தியாவிலிருந்து வந்த டாக்டர் தங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(விரிவுரையாளர் திருநெல்வேலி) நானும் பேராசிரியர் வீட்டுக்குச் சென்றபோது அவர் நோயுற்றிருந்தும் அவர் காட்டிய உற்சாகமும் வரவேற்பும் எம்மை வியப்பில் ஆழ்த்தியது. பல்வேறு விதமான கேள்விகளை நானும் பேராசிரியை தங்கமும் கேட்டோம். அவற்றிக் கெல்லாம் அவர் விளக்கமளித்த விதமே அலாதியானது. புலம் பெயர் தமிழர், புலம்பெயர் இலக்கியம் பற்றியெல்லாம் நிறைய கேள்விகளை முன் வைத்தோம். அவற்றுக் கெல்லாம் அருமையான விளக்கங்களைத் தந்தார். தாம் சென்ற புலம் பெயர் தமிழர்கள் வாழுமிடங்களில் கண்ட அனுபவித்த காட்சிகள் பற்றி எமக்கு எடுத்துக் கூறினார். சுமார் இரண்டு மணித்தியாலங்களுக்கும் மேலாக எம்முடன் மனம் விட்டு உரையாடினார். அப்படியே இருந்த நிலையில் எம்முடன் பல புகைப்படங்களை எடுத்துக் கொண்டோம்.

மட்டக்களப்பு வரலாற்றிலே பெரிதும் அக்கறை கொண்டவர். சில வருடங்களுக்கு முன்னர் மட்டக்களப்பிலே சில அறிஞர்களைக்கூட்டி மட்டக்களப்பு வரலாற்றை எழுதும் முயற்சியிலே தோல்வி கண்ட எமது பேராசான் "தங்கேஸ்வரி! நீங்க உங்கள் பணியைத் தனியே செய்யும்" என ஆசி வழங்கினார். அன்றும் கூட அதையே கூறினார். அதுவே வேதவாக்காகியது.

தமிழ் உலகிற்கே கலங்கரை விளக்கான பேராசிரியர் சிவத்தம்பி பல்வேறு சர்வதேச மகாநாடுகளில் கலந்து கொண்டு இலங்கைக்குப் பெருமை சேர்த்தவர். இவரது தமிழ்ப் பணிக்குத் தமிழக அரசு கூட விருது வழங்கிக் கௌரவித்தது. இலங்கை - யப்பான் நட்புறவு விருது இவருக்குக் கிடைத்தது. 2000ம் ஆண்டுக்கான சர்வதேச புலமைப் பட்டியலில் இவர் பெயர் இடம்பெற்றது. பல அமைப்புகள் பல விருதுகளை வழங்கிக் கௌரவித்தன. 2007 ல் 75 வது அகவையை தமிழ்ச்சங்க ஏடான 'ஓலை'யைச் சிறப்பிதழாக வெளியிட்டுச் தமிழ்ச்சங்கம் சிறப்பித்தது. ஞானம் சஞ்சிகை 2007 ல் பவளவிழா மலர் வெளியிட்டது. இவ்விதம் பலராலும் விரும்பப்பட்டவர் கா.சிவத்தம்பி.

சிறந்த சிந்தனையாளனாக, இலக்கியவாதியாக, தமிழறிஞனாக விளங்கிய பேராசான் சிவத்தம்பியிடம் பயின்ற மாணவர்கள் உலகளாவிய ரீதியில் உள்ளனர். அவர் வழியில் அவர் விட்டுச் சென்ற பணியை முன்னெடுப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கைச் சூழலை அச்சுறுத்தும் மண்ணரிப்பு

**பிரகாஷ்னி மோகன்பிறேம்குமார்.**
புவியியல் சிறப்புக் கற்கை
4ம் வருடம்
கிழக்குப் பல்கலைக்கழகம்

புவிமேற்பரப்பில் காணப்படும் பனிப்பிரதேசங்கள், பாலைவனங்கள், சதுப்பு நிலங்கள், உயர் நிலங்கள் என்பவற்றைத் தவிர்த்து நோக்கும்போது விவசாயப் பயன்பாட்டுக்குரிய பகுதி மிகவும் குறைவாகும். பெருகி வரும் அதிகளவான சனத்தொகைக்கு இச்சிறிய அளவிலான நிலப்பகுதியே ஆதாரமாக இருப்பதினால் மண்வளத்தைப் பாதுகாத்தல் அவசியமானதாக இருக்கின்றது.

புவியின் கற்பாறையிலான வெளியோடு காலநிலையின் தாக்கத்தின் விளைவாகச் சீரழிவதினால் தோன்றும் மண்ணினை உருவவியல் அடிப்படையில் வகைப்படுத்தும் போது, சில மண்வகைகள்குறைந்த அளவில் அரிக்கப்படுகின்றன. சில மிக இலகுவில் அரிக்கப்படுகின்றன. மண்ணின் அரிக்கப்படும் அளவு அரிப்புத்திறன் என்பதால் இழையமைப்பு, கட்டமைப்பு, சேதனவுறுப்புப் பதார்த்தத்தின் கணியம் ஆகிய காரணிகள் மண்ணின் அரிப்புத்திறனை நிர்ணயிக்கின்றன எனலாம்.

மண்ணரிப்பு ஓர் இயற்கை நிகழ்வு. அது மெதுவாக ஆனால் தொடர்ந்து நிகழ்ந்து பூழியின் மேற்பரப்பின் தோற்றத்தைப் படிப்படியாக மாற்றுகின்றது. மண்ணரிப்பு பூமியின் மேற்பரப்பை மட்டுப்படுத்தும் ஒரு முயற்சி. நிலத்திலிருந்து மேல்மண் நீரினாலும் காற்றினாலும் அரித்துச் செல்லப்படுவதை இது குறிக்கிறது. அண்மைக்காலங்களில், சூழலியல் மற்றும் வேளாண்மைத் துறைகளில் இது ஒரு பெரிய பிரச்சினையாகக் கருதப்பட்டு வருகிறது.

மண்ணரிப்பு ஒரு இயற்கையான நடைமுறையாக சுமார் 450 மில்லியன் ஆண்டுகளாக நடைபெற்று வருகின்ற ஒன்று. ஆனால் பொதுவாக இயற்கையின் செயற்பாட்டின்போது, மேல்மண் புதிதாக உருவாகும் வேக அளவுக்கு, ஈடாக அரிப்பும் நடைபெற்றது. ஆனால் மனிதனுடைய அண்மைக்கால நடவடிக்கைகள் இந்தச் சமநிலையைக் குழப்பிவிட்டன. இதனால் அரிப்பு வேகமாக நடைபெற்று வளமான நிலங்கள் இழக்கப்பட்டு வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண் துணிக்கைகள் காற்றாலும், நீராலும் அள்ளிச் செல்லப்பட்டு பள்ளத்திற் போடப்படுகின்றன. எனவே காற்றும், ஓடும் நீரும் மண்ணரிப்பின் முக்கிய கருவிகள் எனலாம். வீசும் காற்று நிலமேற்பரப்பில் இருக்கும் தளர்வான மண்ணை அடித்துச் சென்றுவிடும். மண் இறுக்கமற்றிருப்பதும், தாவரத்தால் மூடப்படாதிருப்பதும், உலர்ந்திருப்பதும், தரை தட்டையாக இருப்பதும், காற்று வேகமாக வீசுவதும் காற்றினால் மண்ணரிப்பு நடைபெறுவதை ஊக்குவிக்கின்றன.

ஆனால் காற்றிலும் பார்க்க நீர் அதிக அளவு மண்ணை அரித்துச் செல்கின்றது. மண்ணின் மேற்பரப்பு பாதுகாக்கப்படாது இருக்குமிடத்து மழைத்துளிகளினாற் கழற்றப்படும் மண்ணில் உள்ள நுண் துணிக்கைகள் மழைநீரினால் அள்ளிச் செல்லப்படுவதனால் மண் திரள்கள் அழிக்கப்பட்டுவிடும். அள்ளிச் செல்லப்படும் மண்துணிக்கைகள் மேற்பரப்பில் உள்ள நுண் துவாரங்களை அடைப்பதனால், மண் தனது நீரகத்துறிஞ்சி வைக்கும் தன்மையை இழக்கின்றது. மண்ணுக்குள் உட்புக முடியாத மேலதிக நீர், சரிவு வழியாக ஓடும்.

இவ்வாறு ஓடும் போது சிதறிய நுண் துணிக்கைகள் எடுத்துச் செல்லப்படும். தொடர்ந்து இவ்வாறு நடைபெறும் போது வழிந்தோடும் நீர் சிறிய வாய்க்கால்களில் ஒன்று சேரும். இங்கு நீரின் அரித்துச் செல்லும் திறனும், மண்ணைக்காவிச் செல்லும் திறனும் அதிகரிக்கும். காலவரையறையின்றி இவ்வாறு நடக்குமேயானால் மேல்மண் முற்றாக நீக்கப்பட்டுவிடும். நீரினால் ஏற்படும் மண்ணரிப்பின் இறுதி விளைவு விளைச்சலுக்கு உகந்த மண்ணின் இழப்பாகும்.

காடழிப்பு, எரித்தல், விவசாயம், மேய்தல் முதலிய நடவடிக்கைகள் மூலம் மூடுபயிர் அகற்றப்பட்டால் அல்லது குறைக்கப்பட்டால் நீரும், காற்றும் மண்ணை நேரடியாகத் தாக்க ஆரம்பிக்கும். அப்பொழுது மண்ணரிப்பு வீதம் மண்தோன்றும் வீதத்திலும் அதிகமாக இருக்கும். இது 'துரித மண்ணரிப்பு' எனப்படுகின்றது. குறிப்பாக அயனப்பகுதிகளில் மண்ணரிப்பினை துரிதப்படுத்துவதில் சேனைப்பயிர்ச்செய்கை, எரிபொருள், விறகு, மரத்தேவைகளுக்கும், பயிர்ச் செய்கைக்குமெனக் காடுகளை அழித்தல், சுரங்கத் தொழில், சாய்வான சிலப்பகுதிகளில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளல், விலங்குகளின் அளவுக்கதிகமான மேய்ச்சல், முகாமைத்துவக் குறைபாடுகள், நிலச்சரிவுகள், வெள்ளப்பெருக்கு போன்றனவும் மண்ணரிப்பினை ஏற்படுத்தும் இயற்கைக் காரணிகளாக விளங்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவு நிரம்பலின் போதுமான தன்மை உற்பத்தித் திறன் மிக்க நிலத்திலேயே பெரிதும் தங்கியுள்ளது. ஏறக்குறைய 97% ஆன உலகின் உணவு நிலப்பகுதியிலிருந்தே வருகின்றது. எனவே நிலைபேண் விவசாயம் மற்றும் சூழலின் தன்மை கருதி மண்ணரிப்பைக் கட்டுப்படுத்துவது உலக உணவுப் பாதுகாப்பு மற்றும் சூழலியலைப் பேணிப்பாதுகாத்தல் நிகழ்ச்சித்திட்டங்களைப் பொறுத்தவரை மிகவும் அவசியமானது.

உணவு உற்பத்தியினை அடிப்படையாகக் கொண்ட விவசாய முயற்சிகள் முன்னெடுக்கப்பட்ட காலம் தொடக்கம் உலகெங்கிலும் நிலச்சீரழிவுகள் அதிகரித்து வந்தன. நிலச்சீரழிவின் பரிமாணம் அபாயகரமானதாக இருந்ததுடன் புவிமேற்பரப்பில் ஏறக்குறைய 30 - 50% தினையும் பாதித்துள்ளது. செயற்கை உரவகைகளை அதிகளவில் பாவித்தும் ஏனைய சக்தி உள்ளீடுகளைப் பயன்படுத்தியும் அயன மற்றும் இடைவெப்பவலய விவசாய சூழலில் 2.5Cm மேல்மண் உருவாக்கத்திற்கு ஆகக் குறைந்தது 500 வருடங்களாவது தேவை எனக் கூறப்படுகின்றது.

உலகின் பிரதான விவசாயப் பிரதேசங்களிலேயே மிகக்கடுமையான மண் அரிப்பு நிகழ்கின்றது. இம்மண் அரிப்பு அதிகரிக்கும் பொழுது எல்லை நிலங்கள் (Marginal Land) மேலும் மேலும் உற்பத்தியின் கீழ் கொண்டு வரப்படுகின்றன. ஐரோப்பாவில் மண் இழப்புவீதம் வருடாந்தம் ஒரு ஹெக்டயரில் 10 -20 தொன் ஆகவும் ஐக்கிய அமெரிக்காவில் பயிர் நிலங்களில் ஏற்படும் மண் அரிப்பு சராசரியாக 16 தொன்னாகவும், ஆசியா, ஆபிரிக்கா, தென் அமெரிக்காவில் 20 - 40 தொன்னாகவும் உள்ளது.

குறிப்பாக இந்தியாவில் கூட மேற்கு வங்காளம், உத்தரப்பிரதேசம், மத்திய பிரதேசம், டெல்லி, இராஜஸ்தான் போன்ற பல பகுதிகளில் மண்ணரிப்பு நாச விளைவுகளை உண்டாக்கின. (எடுத்துக்காட்டாக) பஞ்சாப் மலைச்சரிவுகளில் அதிக மேய்ச்சலின் காரணமாக புற்கள் அழிந்தன. இந்த இயற்கை மூட்டம் அழிக்கப்பட்டதால் வேகமாக மண் அரிப்பு ஏற்பட்டது. தமிழ் நாட்டிலுள்ள நீலகிரி மலைகளில் நிலம் உருளைக்கிழங்கு பயிரிடுவதற்காகவும், தோட்டப்பயிர்கள் பயிரிடவும் காடுகளை அழித்ததால் மண்வளம் குறைக்கப்பட்டு அரிப்பு துரிதப்படுத்தப்பட்டது.

உத்திரப்பிரதேசத்திலும் கூட 15 இலட்ச ஏக்கர் நிலப்பரப்பு நீரரி பள்ளத்தினால் பாதிக்கப்பட்டு உள்ளதாகக் கூறப்படுகின்றது. மேலும் சிந்து கங்கை வண்டல்களும், யமுனை, சம்பல், கோமதி ஆகியவற்றின் உப நதிகளால் ஆழமாக அரிக்கப்பட்டுள்ளதாகவும், தமிழ் நாட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்ஆற்காடு, வடஆற்காடு, கன்னியாகுமாரி, திருச்சி, செங்கல்பட்டு, சேலம், கோயம்புத்தூர் மாவட்டங்களில் நீண்ட நீரரி பள்ளங்கள் உள்ளதாகவும் அறியப்படுகின்றது. இந்தியாவில் மொத்த பரப்பு சரியாகக் கணக்கிடப்பட்டிராவிட்டாலும் சுமார் 100,000 ஏக்கர் நிரந்தரமாகப் பயிரிட முடியாத நிலங்களாகவும் இதை விட அதிக பரப்பு குறைந்த விளைச்சல் கொடுக்கக்கூடிய நிலமாகவும் ஒவ்வொரு வருட மண்ணரிப்பினாலும் மாற்றப்பட்டுள்ளன.

இலங்கையிலும் சனத்தொகையதிகரிப்பும், உணவுற்பத்தித் தேவையும், பெருந்தோட்ட விருத்தியும் காடுகளைக் கணிசமான அளவு அழித்து விட்டன. கிராமிய வறுமை சேனைப்பயிர்ச்செய்கையென்ற பெயரிலும் விறகுத்தேவை என்ற பெயரிலும் காடுகளை அழித்துவிட்டன. இதனால் உடனடியாக ஏற்பட்ட பிரச்சினைகளில் மண்ணரிப்பு மிக முக்கியமானதாகும். மகாவலிகங்கை வருடாவருடம் ஆறு இலட்சம் மெற்றிக்தொன் மண்ணை அரித்துக் காவிச் செல்வதாகவும் கணக்கிடப்பட்டுள்ளது. கடந்த நூற்றாண்டில் இலங்கையின் பெருந்தோட்ட நிலங்களில் 30Cm தடிப்பு வரையிலான மேல்மண் நீக்கப்பட்டு விட்டதாகவும் கணித்துள்ளனர். இலங்கையின் உலர் வலயத்திலும் மண்ணரிப்பு ஏற்பட்டதற்கு தரிசாகிவிட்ட பல நிலங்கள் சான்றாக அமைகின்றன.

மலைச்சாய்வுகளில் செய்கை நிகழும் விளைநிலங்களில் ஏற்படும் மண்ணரிப்பு தொடர்பாக அளவீடு மேற்கொள்ளப்பட்ட போது கிடைத்த முடிவுகள் பயங்கரமானவையாகவுள்ளன. புகையிலை செய்கை பண்ணப்படும் சாய்வு நிலங்களிலிருந்து வருடா வருடம் ஹெக்டேயருக்கு 70 மெற்றிக்தொன் மண் அரித்துச் செல்லப்படுவதாகவும், கறிமிளகாய் பயிரிடப்படும் நிலங்களிலிருந்து 35 மெற்றிக்தொன் மண் அரித்துச் செல்லப்படுவதாகவும் கணக்கிடப்பட்டுள்ளதோடு இவை தாங்குநிலை மண்ணரிப்பான 09 மெற்றிக்தொன்னிற்கும் அதிகமானது என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கையின் உலர் வலயத் தாழ்நிலத்தில் ஹெக்டெயருக்கு 25 மெற்றிக்தொன் மண் வருடத்திற்கு நீக்கப்படுவதாகவும் இதவும் சமநில தாழ்நில மண்ணரிப்பான 06 மெற்றிக்தொன்னிற்கு 03 மடங்கு அதிகம் இருப்பதாகவும் கணக்கிடப்பட்டுள்ளது.

இவ்வாறாக உலகம் பூராகவும் ஒவ்வொரு வருடமும் அரித்தல், உவரடைதல், நீர்தேங்கி நிற்றலினால் விவசாய நிலங்கள் சீரழிவுக்குள்ளாவதுடன் ஏறக்குறைய 06 மில்லியன் ஹெக்டேயர்கள் இழக்கப்படுவதாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூகோள ரீதியாக இடம்பெற்றுவரும் விவசாய விரிவாக்கமானது மண்ணின் அமைப்பில் கடும் பாதிப்பை ஏற்படுத்தி மண்ணரிப்பு மேலும் துரிதப்படுத்தப்படுவதற்கு வழிவகுப்பதனால், மண்ணரிப்பினைத் தடுப்பதற்குப் பயனுறுதி வாய்ந்த பேணிப்பாதுகாத்தல் நுட்ப முறைகள் பல நாடுகளிலும் பயன்படுத்தப்படுகின்றன. பல்வேறுபட்ட மண்சாய்வுகள், பயிர்கள், மழைவீழ்ச்சி, காற்று நிலைமைகள் ஆகியவற்றுக்குப் பொருத்தமான நுட்பமுறைகள் பின்வருமாறு.

- **சுழற்சிப்பயிர்ச்செய்கை (Crop Rotation)**
- **நேர்கோட்டுப் பயிர்ச்செய்கை (Strip Cropping)**
- **சமவுயரக்கோட்டு நடுகை (Contour Planting)**
- **படிக்கட்டுகள் (Terraces)**
- **வேர்த்தழைகள் (Mulches)**
- **பதப்படுத்தப்படாத பயிரிடல் (No-till Planting)**
- **நீள்வரை நடுகை (Rifge planting)**
- **புற்களை நேர்கோட்டு முறையிலமைத்தல் (Grass Strips)**
- **மரம் - பற்றைகள் தொடர் (Tree - Shrub Hedges)**
- **பாறைத் தொடர் அணைகள் (Rock Hedges)**
- **குழிப் பயிர்ச் செய்கை (Pit Cultivation)**
- **விவசாயக் காடாக்கம் (Agro Forestry)**
- **பாகாப்பு வலயங்கள் (Shelter Belts)**
- **மேலே கூறப்பட்ட பல தொழிநுட்ப முறைகளின் இணைந்த (Combinations) பிரயோகம்.**

எனவே உலகெங்கும் மண்ணரிப்பானது துரிதமாக இடம்பெற்று இயற்கைச் சூழலியலை அச்சுறுத்தும் அம்சமாக விளங்குவதால், ஒவ்வொரு மனிதரும் மண்ணரிப்பை துரிதப்படுத்தும் மானிட நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தி. மண்காப்பின் பயன்களை உணர்ந்து அவற்றை இயலுமானவரை நடைமுறைப்படுத்தி, மண்ணரிப்பிலிருந்து இயற்கைச் சூழலை பாதுகாக்க வேண்டியது அவசியமாகிறது.■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீத்தார் நினைவு

**திமிலைமகாலிங்கம்**  **29.04.1938 - 13.12.2010**

## அமைதியாக இலக்கியப்பணி புரிந்த அமரர் திமிலை மகாலிங்கம்

**- அன்புமணி**

1960 களில் புகழ்பெற்ற மூன்று கவிஞர்கள் - திமிலை சகோதரர்கள் - திமிலைத்துமிலன், திமிலை மகாலிங்கம், திமிலைக்கண்ணன் இவ்மூவரும் சளைக்காமல் போட்டிபோட்டுக் கொண்டு கவிதைகளை எழுதினர். பாராட்டுக்களைப் பெற்றனர்.

இம்மூவரும் அப்போதைய மட்/தமிழ் எழுத்தாளர் சங்கத்தில் உறுப்பினர்களாகவும் இருந்தனர். கணிசமான இலக்கியப் பங்களிப்புச் செய்தனர். திமிலைத்துமிலன், **'திமிலை நளின கலாமன்றம்'** என்ற அமைப்பின் மூலம் பல நாடகங்களை அரங்கேற்றினார். திமிலை மகாலிங்கம் **'தேனமுத இலக்கியமன்றம்'** என்ற அமைப்பின் மூலம் பல நாடகங்களை அரங்கேற்றினார். இவ்வாறு நாடக வளர்ச்சியிலும் இவர்கள் கணிசமான பங்களிப்புச் செய்தனர். **'தேனமுத இலக்கியமன்றம்'** ஒரு வர்த்தக வகுப்பு மாணவர்களைக் கொண்டு உருவானது. தட்டச்சு இதில் முக்கிய பாடமாக இருந்தது. 'மட்றாஸ் கபே'யின் மேல்மாடியில் இவ்வகுப்பு செயற்பட்டது. திமிலை மகாலிங்கம் அதன் Managing Director ஆகச் செயற்பட்டார். ஆனால் அதை அவர் சொல்லிக் கொண்டதே இல்லை.

ஆண்களும் பெண்களுமாகப் பலர் இவ்வகுப்பின் மூலம் உருவாகினர். வாழ்க்கையை அமைத்துக் கொண்டனர். திமிலை மகாலிங்கம் அமைதியான சுபாவம் உடையவர். சகலரையும் அரவணைத்து வழிநடாத்துவதில் வல்லவர். பின்னால் அவருக்கு கிராமசேவை உத்தியோகம் கிடைத்தது. ஆனாலும் 'தேனமுத இலக்கிய மன்றம்' தொடர்ந்து செயற்பட்டது. முன்னைவிட அதிகமான இலக்கியச் செயற்பாடுகளை மேற்கொண்டது.

இலக்கிய உலகில் இவரது சாதனைகள் பல. கவிதை, கட்டுரை, நாடகம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை, நாவல் அனைத்திலும் அவர் முத்திரை பதித்தார். சிறுவர் இலக்கியத்திலும் சில நூல்களை வெளியிட்டார்.

இதுவரை அவர் எழுதிய நூல்கள் வருமாறு:
1) **கனியமது** (சிறுவர் பாடல்கள்)
2) **மோதல்** (சிறுகதைத் தொகுதி)
3) **பாதை மாறுகிறது** (நாவல்)
4) **புள்ளிப்புள்ளிமானே** (சிறுவர் கவிதை)
5) **சிறுவருக்கு விபுலானந்தர்** (சிறுவர் இலக்கியம்)
6) **அவனுக்குத்தான் தெரியும்** (நாவல்)
7) **சிறுவருக்கு நாவலர்** (சிறுவர் இலக்கியம்)
8) **குருவிக்குஞ்சுகள்** (சிறுவர் இலக்கியம்)
9) **குழந்தையின் குரல்** (சிறுவர் இலக்கியம்)
10. **நம்நாட்டுப்பழமொழிகள்**

இவ்வாறு 10 நூல்களை வெளியிட்டுள்ளார். இவைதவிர பின்வரும் ஆக்கங்கள் பத்திரிகைகளில் வெளிவந்தவை:
1) காதலோகம் (தினக்கதிர்)
2) நிலவுக்கும் ஒரு நாள் ஓய்வுண்டு (வீரகேசரி)
3. ஊஞ்சல் (மித்திரன்)

இவைகள் தொடராக வெளிவந்தபோது வாசகரை மிகவும் கவர்ந்தன. இவ்வாறே இவர் பெற்ற விருதுகளும் இவரது இலக்கிய ஆளுமைக்குச் சான்றாகின்றன. அவை:
- **தமிழ்மணி** (இந்து கலாசார அமைச்சு)
- **கலாபூஷணம்** (இந்து கலாசார அமைச்சு)

இவர் மட்டக்களப்பு மண்முனை வடக்குப் பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் நீண்டகால உறுப்பினர். 1993 முதல் பிரதேச செயலகம் நடாத்திய கலாசார விழா, **'தேனகம்'** சிறப்புமலர் வெளியீடு ஆகியவற்றில் கணிசமான பங்களிப்பைச் செய்துள்ளார். மேற்படி கலாசாரப்பேரவையினால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டுள்ளார். 10.12.2010 ல் நடைபெற்ற முத்தமிழ் விழாவில் இவருக்கு **'கலைச்சுடர்'** விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். இவரது இலக்கிய வாழ்வுக்குத் துணைநின்றவர் இவரது காதல் மனைவி சக்திராணி என்பது குறிப்பிடத்தக்கது. 29.4.1938ல் திமிலைதீவில் பிறந்த இவர் தனது 72 வயதைத் தாண்டி 13.12.2010ல் காலமானார். இவரது மறைவு ஈடுசெய்யமுடியாத இழப்பாகும்.■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசுவாமித்திர பக்கம்

## முன்னீடு

விசுவாமித்திர பக்கம் பற்றிய வினவுதல்கள் செங்கதிரோனைச் சற்று சிரமத்திற்குள் மாட்டிவிட்டிருப்பதாகவும் காட்டிக் கொடுக்கும் கைங்கரியத்தைச் செய்யப் போவதில்லையென்றும் விசுவாமித்திரன் யார் என்பதைப் பறந்தாலும் சொல்லப் போவதில்லையென்றும் செங்கதிரோன் ஓர்மத்துடன் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்திருப்பதாக அங்கிருந்து வரும் உறுதிப்படுத்தப்படாத செய்திகள் இரண்டாம் விசுவாமித்திரனாகிய எனது காதுகளை எட்டிய நிலையில் - அது பற்றி அடியேன் கவலைப்படாமல் 'மறைந்து வாழ்தலே மகிமை' என்ற இமயமலைப் பட்டயத்தின் இருபத்தியோராவது விதியினைக் கவனத்திற் கொண்டுவந்து உச்சாடனம் செய்து நிஸ்டை செய்யத் தயாரானபோது எங்கிருந்தோ வந்து சேர்ந்த மஞ்சள் ஆடை போர்த்திய மின்னஞ்சல் செய்தி கண்டு அதன்மீது கடைக்கண்பார்வை தெளித்து மேலாடை களைந்து செய்திச் சுகம் சுகிக்க முனைந்தபொழுதில் - செய்தியானது ஆரத்தழுவும் பாங்கில் அம்மணமாக மல்லாந்தவாறே கேள்வியொன்றைப் பிரசவித்து அமைதிகொள்ள - இந்த விசுவாமித்திரனின் வித்துவக் கனதியைச் சோதித்தறிய அனுப்பப்பட்ட மின்னஞ்சல் செய்தியே அதுவென அறிந்து சிறுவிரல் தொடங்கி சிரசுவரை போகம் மீதேறி அக்கேள்வியின் மீதொரு எறிகணை வீச இருந்த நிலையில் ஆகாயம் இருந்த திக்கில் இருந்து 'ஆமாம் அவனொரு சிறுவன்' என்றொரு அசரீரி வந்து அடியேனை இடைமறிக்க மீண்டும் மின்னஞ்சல் மீது பார்வைபட அதனை அனுப்பிய சிறுவனின் தகைமை தவிர்த்து கேள்வியை வாசித்தபோது 'நரியும் திராட்சைப்பழமும்' கதையில் புலால் மட்டுமே உண்ணும் அசைவ நரியோடு சைவ உணவான திராட்சைப்பழத்தைத் தொடர்புபடுத்தி கதை சொன்னது ஏன்? என்று சிறுவன் கேட்ட கேள்வியின் நியாயத்தை விளங்கி நமது ஆக்க இலக்கியவாதிகளிடம் இந்தக் கேள்வியைக் கேட்டுச் **'செங்கதிர்'** சஞ்சிகைக்கு அனுப்பி வைக்க இரண்டாம் விசுவாமித்திரன் முடிவுக்கு வந்தான்.

இது இரண்டாம் விசுவாமித்திரனுக்கு வந்த மின்னஞ்சல் பற்றியதான ஒரு வார்த்தை. இனி கவிதை பற்றிய கதையொன்றிற்கு வருவோம்.


பிரபல சஞ்சிகையொன்றிற்கு கவிதைகள் பலவற்றை அனுப்பியும் ஒரு கவிதையேனும் பிரசுரிக்கப்படாத நிலையில் சஞ்சிகை ஆசிரியரின் நண்பர் ஒருவரிடம் இதுபற்றி விசாரித்தார். அச்சஞ்சிகையானது கவிதைகளைப் பிரசுரிக்க ஒரு அளவுகோலைப் பயன்படுத்துகின்றது. சஞ்சிகை ஆசிரியருக்குக் கவிதை புரிந்தால் அக்கவிதை பிரசுரமாகமாட்டா. கவிதை புரியாவிட்டால் சஞ்சிகையில் பிரசுரிக்கப்படும். இதுதான் அந்த அளவுகோல் என்றார்.

"வாசிக்கத்தெரியாத வம்பர் தலைப்பட்டு காசிக்கு ஐநூறு கவி" என்று ஔவை சொன்னது சும்மாவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோக்கல்



நூல் : 'குருதி தோய்ந்த காலம்'
வகுதி : கவிதை.
ஆசிரியர் : யூ.எல்.ஆதம்பாவா.
வெளியீடு : மெற்றோபொலிரன் கல்லூரி,
27, டட்லி சேனநாயக்கா மாவத்தை,
தெஹிவளை.

மனித வாழ்வின் உறுத்தல்களையும் உவத்தல்களையும் மனத்தளவில் உள்ளீடாகக் கொண்டு கவித்துவப் பொறிமுறையினூடாக எழுத்து வடிவில் வெளியீடாகக் கொண்டு வருதலே கவிதை எனலாம். இதனால்தான் தமது வாழ்வின் அனுபவங்களைக் கவிதையாகத் தந்து பலர் வெற்றி பெற்றிருக்கின்றனர். நூலாசிரியர் கலாபூஷணம். யூ.எல்.ஆதம்பாவா அவர்கள் 1961 ஆம் ஆண்டு கவிதையொன்றின் ஊடாக இலக்கியப் பிரவேசம் செய்தார். அன்றிலிருந்து இன்றுவரையான ஐம்பது ஆண்டுகளில் எழுதப்பட்ட கவிதைகளில் இருந்து முப்பத்தைந்து கவிதைகளைத் தேர்ந்து **'குருதி தோய்ந்த காலம்'** என்ற கவிதை நூலை வெளியிட்டுள்ளார். இத் தொகுதியில் காணப்படும் எல்லாக் கவிதைகளும் எல்லோருக்கும் புரியக்கூடியதாக உள்ளமை நூலின் பாராட்டக்கூடிய அம்சங்களில் ஒன்றாகும்.

(02)

கலாபூஷணம் யூ.எல்.ஆதம்பாவா அவர்களின் முதலாவது கவிதைத் தொகுதி இதுவாகும். ஏற்கனவே **'நாங்கள் மனித இனம்'** என்ற உருவகக்கதைத் தொகுதியொன்றையும் **'காணிக்கை'**, **'சாணையோடு வந்தது'** ஆகிய இரண்டு சிறுகதைத் தொகுதிகளையும் வெளிக் கொணர்ந்தவர். **'பகலில் ஒரு சூரியனின் அஸ்தமனம்'** என்ற கவிதைத் தொகுப்பின் ஆசிரியரும் கூட. 1999 இல் கலாபூசணம் விருதும் 2005 இல் வடகிழக்கு மாகாண ஆளுநர் விருதும் பெற்றவர்.

1961ல் **'மணிக்குரல்'** என்ற சஞ்சிகையில் **'மகிழ்ந்திடுவேன்'** என்ற கவிதையின் மூலம் இலக்கியப்பிரவேசம் செய்தவர். கவிதை, கட்டுரை, சிறுகதை, உருவகக்கதைகள் எனவாகும் பலதளங்களில் தனது பங்களிப்பினை இன்றுவரை சளைக்காது செய்து வருபவர். இலக்கியப் சம்வாதச் சர்ச்சைகள், சித்தாந்த உரசல்கள் என்று எதனிலும் தன்னைச் சங்கமப்படுத்திக் கொள்ளாதவர். புலனடக்கம் வாய்க்கப் பெற்ற கர்மயோக சித்தர் என்றும் கருதப்பட்டவர்.

1961ல் இருந்து இன்றுவரை எழுதப்பட்டுப் பத்திரிகைகளில் வெளியான 35 கவிதைகள் இத்தொகுப்பில் உள்ளடக்கம். எனினும் 1961 - 2000 வரையான காலப்பகுதியில் ஐந்தே ஐந்து கவிதைகளும் கடந்த ஒரு தசாப்தத்தில் எழுதப்பட்டதான முப்பது கவிதைகளும் தொகுதியில் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைப்பிலக்கியத்துறையில் ஐம்பது ஆண்டுகளை நிறைவு செய்கின்ற மூத்த எழுத்தாளராகிய இக்கவிதை நூலாசிரியரைக் கௌரவிக்கும் வகையிலே மெற்றோபொலிற்றன் கல்லூரி இவரது நூலை வெளியிடுவதாக வெளியீட்டுரையில் சொல்லப்பட்டிருக்கின்றது.

(03)

இயற்கை, பாசம், சமாதானம், தமிழின்பெருமை, தனிமனித ஆளுமை எனவாகும் பல தளங்களில் நின்று எழுதப்பட்ட கவிதைகளாக இவற்றை அடையாளம் காணலாம். சவர்க்காரக்குமிழி, நிலாதேவதைக்கு, தேய்ந்து போனேன் ஆகிய கவிதைகள் ஏனையவற்றைவிட நல்ல கவிதைகள். 'நிலாதேவதைக்கு' என்ற கவிதை இயற்கை பற்றிய கவிஞரின் பார்வைக்கு நல்ல எடுத்துக்காட்டு. சமாதானத்தின் மீதான பற்றுதலும் பாசம் மிகுந்த வாழ்வுமுறையும் தனிமனித ஆளுமைகள் சிலவற்றின் மீதான பிடிப்பும் கவிஞர் பற்றியதான அறிமுகக் குறிப்புகள் எனலாம்.

**'கடலின் கைகள் கரை மகளைக்/கட்டித்தழுவி இதழ் பருகி/உடலஞ் சிலிர்க்கும் காட்சியிலே/உயிராம் கவிதை ஆக்கிடுவேன்'** என 1961 ல் ஆரம்பித்த கவிதைப் பயணம் தந்த அனுபவங்களின் வெளிப்பாட்டைச் 'சவர்க்காரக்குமிழி' என்ற கவிதையில் "எனது பாடல்களால் பேசப்படுவதையே நான் விரும்புகின்றேன். நான்பாட மன்னர் அரங்குகள் தேவையில்லை" என்று கூறுவதன் மூலம் தமிழ்க் கவிதைத்துறையில் தனக்கென ஒருதனியிடத்தைத் தேடிக் கொண்டுள்ளார் கலாபூஷணம் யூ.எல்.ஆதம்பாவா

**- இரண்டாம் விசுவாமித்திரன்**

ஒக்டோபர் மாதம் 6ம் திகதி மாண்புமிகு ஜனாதிபதி [மஹிந்த ராஜபக்ஷ] அவர்களால் வழங்கப்பட்ட **"குரு பிரதீபா பிரபா"** விருது வழங்கும் வைபவத்தில் சிறந்த அதிபருக்கான விருதினை மட் / புனித சிசிலியா தேசிய பாடசாலை அதிபர் அருட் சகோதரி.எம்.எலிசபெத் அவர்கள் பெற்றுக் கொண்டார். இதனையொட்டி பாடசாலை சமூகம் வரவேற்று வாழ்த்தும் வைபவம் ஒக்டோபர் 7ம் திகதி இடம்பெற்றது. அதே பாடசாலையைச் சேர்ந்த திருமதி.பவானி ஜெயசீலன் சிறந்த ஆசிரியருக்கான விருதினை மாண்புமிகு ஜனாதிபதியிடமிருந்து பெற்றுக் கொண்டார்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலம்



குருவிக்கூடு

சிறகு முளைக்காத குருவிக் குஞ்சுகள் சிரித்து ஆரவாரித்தன.

மரத்தில் இருந்த அணில் குருவிக் கூட்டுக்குள் தாவி, 'உங்களுக்கு இன்னும் சிறகு முளைக்கவில்லை. சுதந்திரம் இல்லாத உங்களுக்கு என்ன சிரிப்பு?' என்று கேட்டது.

குஞ்சுகள் கவனிக்கவில்லை.

பாம்புக்கு இது வாய்ப்பானது.

குஞ்சுகளின் சிரிப்பொலி கேட்டு பாம்பு கூட்டுக்குள் நுழைந்தது.

நொடிப் பொழுதில்,

பாம்பின் வாயில் குஞ்சுகள் பலியாகிப் போயின.
அணிலுக்கோ துயரம் தாங்கவில்லை.

அது மீண்டும் இரைந்து கத்தியது.

**"சிறகு விரி**
**பிறகு சிரி"**

நன்றி:- **'காசி ஆனந்தன் கதைகள்'**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளாசல் வீரக்குட்டி



மிதுனன்

என்ன அந்தோனி, மரமொண்டையும் வெட்டப்போடாதெண்டு மேலிடத் தாக்கள் சொல்லுறாங்க! நீங்க என்னடாண்டா கிடக்கிற மரத்தையெல்லாம் வெட்டியெடுத்துக் கொண்டு போறயள்?

என்ன! நத்தாருக்குச் சோடிக்க சவுக்குமரம் வெட்டிக் கொண்டு போறயளா? மெய்தான் நானும் மறந்து பொயித்தன். இது நத்தார்காலமெலுவா?

இயேசுநாதர் புறந்த கிறிஸ்மஸ் நாள் வந்தா ஒரு பயங்கரமான நிகழ்ச்சியும் உங்களுக்கு நினைவு வரவேணுமே. எண்ணெண்டு சொல்லு பாப்பம் அந்தோனி? "சுனாமி வந்தததானே வீரக்குட்டியண்ண சொல்லுறயள்?"
உட்டுராத அந்தோனி! கொஞ்ச நஞ்ச அழிவையா தந்து போட்டுப் பொயித்து! சும்மா கிடந்த கடல் திடீரெண்டு பொங்கியெழுந்து, குஞ்சிகுருமான், பெரிசி சிறிசெண்டு எவ்வளவு உசிருகளத்தான் காவு கொண்டு பொயித்து. அத நினைச்சா இப்பயும் கிருமி கலங்குது அந்தோனி.

இந்தோனேசியாவிலயோ எங்கேயோ கடலுக்கடியில உண்டான பூமி அதிர்ச்சியால பொங்கியெழுந்த ராட்சத அல இங்க நம்மட ஊருக்குள்ளையும் பூந்து என்ன பாட்டத்தான் படுத்திப்போட்டு. நத்தார் கொண்டாத்த சந்தோசமாகக் கொண்டாடிப்போட்டு படுத்த சனத்தையெல்லாம் முழுங்கின அந்தச் சுனாமியல இனிமேலும் வரப்போடா அந்தோனி!

நீயும், பொஞ்சாதி புள்ளயளும் கலியாண ஊடொண்டுக்கு கண்டிக்குப் போனதால தப்பித்தயள். இஞ்ச இருந்திருந்தா என்ன நடந்திருக்குமெண்டு கொஞ்சம் யோசித்துப் பார்டா அந்தோனி! சமயமெண்டு பாத்திச்சா? சாதி அது இதெண்டு பாத்திச்சா? ஒண்டையும் பாக்கலையே! சேர்ச்சிக்குப்போய் ஆண்டவர நல்லா மண்டாடுங்க. இனிமேப்பட்டு இந்த மாதிரியான பேரழிவு எந்த நாட்டுக்கும் ஏற்படப் போடாதெண்டு வழிபடுங்க. சரி நான் வரப்போறன். **"ஹப்பி கிறிஸ்மஸ் டு யூ."** என்ன அந்தோனி இங்கிலிசில பேசிறனெண்டா ஒரு மாதிரியாகப் பாக்கிறா? எல்லாம் புறக்கியெடுத்ததான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'செங்கதிர்' ஆண்டுச் சந்தா : ரூ1000/-க்குக் குறையாத இயன்ற அன்பளிப்பு

✯ **"செங்கதிர்"** இன் வரவுக்கும் வளர்ச்சிக்கும் அன்பளிப்புச் செய்ய விரும்பும் நலம் விரும்பிகள் (உதவும் கரங்கள்) தாங்கள் விரும்பும் தொகையை ஆசிரியரிடம் நேரில் வழங்கலாம்.

**அல்லது**

✯ மக்கள் வங்கி (நகரக்கிளை), மட்டக்களப்பு, நடைமுறைக் கணக்கு இல : 113100138588996 க்கு வைப்பிலிடலாம்.

**People's Bank (Town Branch) Batticaloa.**

**Current account No.:113100138588996 - For bank deposit**

**அல்லது**

✯ அஞ்சல் அலுவலகம், மட்டக்களப்பில் மாற்றக் கூடியவாறு காசுக்கட்டளை அனுப்பலாம்.

**Post Office, Batticaloa - For money orders**

✯ காசோலைகள் / காசுக்கட்டளைகளை த.கோபாலகிருஸ்ணன் எனப் பெயரிடுக. **Cheques / Money orders in Favour of T.Gopalakrishnan**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு இல: DS/ MN/C/BR/1659



# ஏஞ்சல்ஸ்

## பியூட்டி றீட்மெண்ட் சென்டர்

**உங்கள் அழகு சம்பந்தமான எந்தப் பிரச்சினையானாலும்**

- பேர்சல் (கோல்டன், பேர்ல்)
- முடி ( ஸ்ரெய்ட்னிங், கலரிங்)
- பெடி கெயார்
- மினி கெயார்
- முகப்பரு, அனாவசிய முடி நீக்கல்.



## தொடர்பு கொள்ளுங்கள்

இந்தியாவில் விசேட பயிற்சி பெற்ற பியூட்டிசியன்

ஏஞ்சல் கருணா

இல.29, தண்ணீர் கிணற்றடி வீதி,

பாலமீன்மடு,

மட்டக்களப்பு.

தொ.பே: 065 222 3663  077 9761 8801  065 490 8000

வணசிங்கா பிரிண்டர்ஸ், 126/1, திருமலை வீதி, மட்டக்களப்பு. தொ.பே.இல. : 0652227170

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org